# இளந்தளிர் 3

## கந்தையா கனகம்மா நினைவாலய திறப்பு விழா சிறப்பிதழ்



திரு. திருமதி. கந்தையா கனகம்மா
நினைவு நிதியம்

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# LET'S

# DO GOOD

# &

# DO IT THIS DAY

# நன்றே செய்வோம்
# அதையும்
# இன்றே செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தளிர் 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்
*இளந்தளிர் - 03*

வெளியீடு
*திரு. திருமதி கந்தையா கனகம்மா*
நினைவு நிதியம் 2014

இதழாசிரியர்கள்
செல்வி து. ரஜிதா
செல்வன் வ. கபிலன்

ஒப்பு நோக்கர்கள்
திரு. க. மயில்வாகனம்
திரு. செ. சட்டநாதர்
திரு . க. கணேசவேல்

அட்டை வடிவமைப்பு
மதி கலர்ஸ்
நல்லூர்.

ஓவியம்
திருமதி தயாமதி குகறாஜா

வடிவமைப்பு அச்சுப் பதிப்பு
*ஸ்ரீ சுப்பிரமணிய பிரிண்டேர்ஸ்*
63, B.A தம்பிலேன்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்!




### பெற்றோரின் பொற்றிருப்பாதங்களைப் பற்றிப் பணிந்து..................

9199 CD

# கந்தையா கனகம்மா நினைவு நிதியம்

## 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவணக்கம்

## நலந்தருவாய்

1. கரிய நிறத்துக் காளி நீ
கையில் சூலம் ஏந்தி நீ
விரியும் துயர்கள் துடைக்க நீ
வீறொடு சிம்மம் ஏறி வா
திரிந்தே இடர்கள் தகர்த்திடும்
தாயே உன்னை மறப்போ மா?
உரிய துதிகள் குவிக்கின்றோம்
உயரிய வாழ்வைத் தந்திடு வாய்

2. செந்நெல் சிறக்க ஊர் சிறக்க
வேலம் பிராயில் அமர்ந் தவளே
சங்கை எடுத்து ஊதியெங்கள்
நெஞ்சில் வீரம் பாய்ச்சி நின்றே
சிங்க மறவர் நாம் என்று
செகமே போற்ற வழி செய்வாய்
பொங்கும் அன்பை பதம் வைத்து
பணிவோம் அருள் நீ பாலிப்பாய்

3. வேப்பு மரத்தில் உறைந்த வளே
விண்ணக மென்றே ஊர் மிளிர
செப்பு கல்வி கலைக ளெல்லாம்
சிறுவர் நெஞ்சில் உரம் சேர்த்து
இப்புவி தன்னில் வேலம் பிராய்
ஈடிணையின்றி நிமிர்ந் திடவே
தப்பா தருள் செய், தாய் உந்தன்
தாளைப் பணிந்தோம் நலந்த ருவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் சுரப்பாய்

தென்னை பனை நெடிதோங்கி
தெவிட்டாச் சிறப்பை யெமக்கீய
அன்னை கடலாள் விருப்புடனே
அள்ளி வழங்கும் நிதி பெருக
மன்னு புகழ் காதவாய்க்கால்
கரையில் உற்றே அருள் சுரக்கும்
மின்னு சூலம் கையிலேந்தும்
வீரபத்தீஸ்வரா போற்றி போற்றி

நீர் நிலைகள் நிறைந்திலங்கி
நிழல் மரங்கள் மிகுந்தோங்கும்
ஏர் உழவர் தரும் உழைப்பால்
கனக மணி நெல் விளையும்
சோர் வகன்று குயில் கூவும்
சொக்க வைத்துக் கிளி பேசும்
ஊர் அதுவாம் வேலம்பிராய் - உயர்வுற
உற்றவனே உத்தமனே வாழி.

எந்தையும் தாயும் மகிழ்ந்தே வாழ்ந்த
எழில்மிகு வேலன்பராய் உற்றவனே
நிந்தையர் துயர்நீக்க வந்தவனே - தக்கன்
செய்யாகம் கலைத்தவனே புகழ் சேர்த்தவனே
நன்நெல் விளை திருநாட்டில் மக்கள்
வினையறுப்பவனே ஒளி சேர்ப்பவனே
மன்னுபுகழ் காதவாய்க்கால் கரையுற்றவனே
அருள் பூப்பவனே வாழ்க வாழ்கவே.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிய கீதம்

அறமது துளிர்த்து அருள்மிகு பூத்து
அவனியில் இன்பம் குலவிடவே
நறுஞ்சுவைத் தமிழொடு நாடிய பயன்தரு
நெறிமிகு சைவம் துலங்கிடவே
வீறொடு வேலன் பிராய்வந் துறைந்திடு
வீரபத்திரன் விழியது நோக்க
திறன்தரு கலைகளும் கல்வியும் ஓங்கியே
வாழிய! வாழிய!! வாழியவே!!!

அன்னை தந்தையை அகமதி லிருத்தி
அனுதினம் அவர்களின் பாதம் போற்றும்
தன்னிக ரில்லா வாழ்வினைத் தந்த
தலைவனை என்றும் மனதினில் போற்று
கன்னல் மொழிபேசிக் கருணையைக் காட்டு
கடமையை என்றும் கண்ணெனப் போற்று
துன்பம் விலக்கிநீ துணிவுடன் வாழ்ந்து
வாழிய! வாழிய!! வாழி பல்லாண்டு!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளமும் வாழ்வும்

### மகுட வாசகம்

கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்!!

### குறிக்கோள்

சைவசமயத்தோர் மத்தியில் சமய நெறிகளை ஊட்டி
எமது மதத்தைப் பல்வேறு வகைகளிலும்
மறுசீரமைத்துக் காத்தல்

### செயற்பாடு

கிராம மக்களிடையே சமயம் பற்றிய
விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்
பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலாக்கண்டி மேற்கு
தச்சன் தோப்பு
திரு. க. கந்தையா
திருமதி. க. கனகம்மா
நினைவு நிதியம்

# தெய்வம் கொடுத்திட வாழ்த்துகின்றேன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய
தச்சன் தோப்பூர் நாவற்குழியில்
சிந்தை யிருத்தி சீர்பெற நீவிர்
செய்திடும் பணிகள் வாழியவே!
சுந்தர மாயொரு மண்டபம் கட்டித்
திறப்பு விழாவும் செய்கின்றீர்,
கந்தையா கனகம்மா நினைவு நிதியம்
காலத்தை வென்று வாழியவே!

தென்ம ராட்சி மண்ணும் மக்களும்
செய்த புண்ணியம் என்போமோ,
எங்கள் பிரதேச சபையும் நிதியமும்
இணைந் தெமக் காற்றும் திருப்பணிகள்
தொண்டு மனத்தொடு தோழமை உணர்வொடு
தொடரும் பணிகளை வாழ்த்துகிறோம்.
மண்டபம் அமையவோர் துண்டு நிலத்தினை
வழங்கிய வள்ளலை வாழ்த்துகிறோம்!

பள்ளி மாணவர் பாங்குடன் கற்றிட
பரிசில்கள் நிதிகள் வழங்கிடுவார்
வல்லபேர் அறிஞர்கள் வாய்மொழி கேட்டிட
வருடம் தோறும் விழாவெடுப்பார்!
நற்சுக தேகியாய் நம்மவர் திடம்பெற
நலந்தரு யோகா வகுப்பெடுப்பார்!
கந்தையா கனகம்மா நினைவு நிதியம்
ஆற்றிடும் சேவைகள் அளப்பிலவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் தோறும் ஆற்றிய பணிகளை
அழகுறத் தொகுத்து விளக்கிடவும்
மாண்புடை அறிஞர்கள் வடித்த படைப்புகள்,
மாணவக் குஞ்சுகள் சிருஷ்டித்தவையும்
ஈங்குநாம் உவந்திட எழிலாய்த் தொகுத்து
"இளந்தளிர்" எனுமோர் இதழ் தருவார்
வாங்கிநாம் சுவைக்கலாம் வைத்துக் காக்கலாம்
வாழிய இளந்தளிர் வாழியவே!

காசு இருந்தால் காணிகள் அமத்தலாம்
கடைகள் 'வாடகைக்கு' எனவும் விடலாம்
மீசை முறுக்கி மேலும் கொழுத்திட
மீற்றர் வட்டியில் குடித்திடலாம்
ஆசை இவைகளை அப்புறம் தள்ளி நீர்
அன்னை தந்தை பெயராலே
தேசுறு சேவைகள் செய்திடும் மக்காள்
தெய்வம் கொடுத்திட வாழ்த்துகின்றேன்!

ச.க.கணேசவேல் (B.A)
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

## பரீட்சைக் குழுவினர் – 2014

- திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்
- திரு. இரா. செல்வவடிவேல் அவர்கள்
- திருமதி. வ.மேகலிங்கம் அவர்கள்
- திரு. பொ. சுப்பையா அவர்கள்
- திரு. செ. சட்டநாதர் அவர்கள்
- திரு. க. கணேசவேல் அவர்கள்
- திரு. க. மயில்வாகனம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ..........


- ஆசியுரைகள்
  - i. திரு. சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் அவர்கள் ......... 01
  - ii. திரு.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் ......... 02
  - iii. திரு.சிற்றம்பலம் துரைராசா அவர்கள் ......... 03
  - iv. செல்வி.தியாகராஜா தர்சினி அவர்கள் ......... 04
  - v. திரு.நாகலிங்கம் தங்கவேல் அவர்கள் ......... 05
  - vi. திரு.இராணி சிவசுப்பிரமணியம் அவர்கள் ......... 06
  - vii. திரு.ஆ.நடராசா அவர்கள் ......... 08
  - viii. திரு.செ.அழகராசா அவர்கள் ......... 09
  - ix. திரு.முத்துராஜா அவர்கள் ......... 10
  - x. திரு.குல.றெஜீஸ் அவர்கள் ......... 11
- இதழாசிரியரின் இதயங்களிலிருந்து ......... 12
- காப்பாளர் அறிக்கை ......... 13

01. வாழும் கலை பிரம்மன் ......... 18

02. ஔவையார் ......... 23
செல்வி. ஶ்ரீகதிர்விழி

03. நம்பிக்கையே வாழ்க்கை ......... 24
செல்வி.ஜெ.சோபனா

04. தந்தை தாய் பேணல் ......... 27
செல்வன்.ப.லக்சன்

05. யோகக்கலை பயில்வோம் வாங்க பிரம்மன் ......... 30

06. கல்வி ......... 36
செல்வன்.வ.விேனோஜா

07. ஔவையார் ......... 38
செல்வி.நா.சங்கீதா

08. தவளைகள் ......... 39
கனகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நான் சென்ற இந்தியா சுற்றுலா .................... 41

செல்வி . ஸ்ரீகதிர்விழி

10. சுப்பிரமணியம் சுபாஸன் உடனான நேர்காணல் ........ 44

11. எண்களின் ஊடே எங்கள் வாழ்வு ........................ 49

செல்வன். சு. சுதர்சன்

12. மாணிக்கவாசகர் .............................................. 53

செல்வி.அசர்விகா

13. கல்வி .............................................................. 55

செல்வி.ச.கஸ்தூரிகா

14. ஔவையார் ....................................................... 58

செல்வி.செ.கஜானனன்

15. மனைவியின் கோபம் ......................................... 59

16. தந்தை தாய் பேணல் மகாள் .............................. 62

செல்வி.இ.தேனுஜா

17. எமது பிரதேசத்தின் இளந்தயாரிப்பாளருடன் சந்திப்பு.. 64

18. கல்வி .............................................................. 70

செல்வி.சி.பிரியங்கா

19. மாணிக்கவாசகர் .............................................. 72

செல்வி.சி.கஜந்தா

20. 21ம் நூற்றாண்டில் விஞ்ஞான, மெஞ்ஞான போக்கும் மனிதரும் .................................................. 74

செல்வன்.வ.கபிலன்

21. அறநெறிபாடசாலை அமைப்பில் அதிபரின் அனுபவங்கள் . .................................................. 77

திருமதி.து.மங்கையர்க்கரசி

22. மண்ணுள் மக்கிய மலர்கள் ................................. 80

கனகன்

23. மாணிக்கவாசகர் .............................................. 85

செல்வி.யோ.ஆரபி

24. கல்வி .............................................................. 87

செல்வி.விரோகிதா

25. தந்தை தாய் பேணல் ......................................... 89

செல்வி.தா.தனுஷா

♦ பரிசில் பெறுவோர் விபரம் ....................................... 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தையா கனகம்மா நினைவாலய திறப்பு விழா நிகழ்வுகள்
## 15.03.2014



விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுகின்றனர்



முதன்மை விருந்தினர் திரு. சி.துரைராசா அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பு விருந்தினர் திரு. வே. சிவராஜலிங்கம் அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறா



சிறப்பு விருந்தினர் திரு. வே. சிவராஜலிங்கம் அவர்கள்
மண்டப பெயர் திரை நீக்கம் செய்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. திருமதி. வன்னியசிங்கம் சறோஜாதேவி அவர்கள்
மண்டபம் திறந்து வைக்கிறார்கள்



செல்வி அ. சர்விகா
வரவேற்பு நடனம் அளிக்கிறார்



செல்வி அ. லோஜிகா
பாட்டி கதை சொல்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. பத்மலோஜினி யுஜிதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்



காப்பாளர் திரு. க. மயில்வாகனம் அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. தர்சினி தியாகராசா உரை நிகழ்த்துகிறார்



நாதஸ்வரக் கலைஞர்கள் இசை வழங்குகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பர் பணிசெய்யவென ஆற்றலொடுவந்ததிதை ஆசி தந்து வாழ்த்துகின்றேன்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

"வாடிய பயிரையெல்லாங் கண்டு வாடினேன்......"

என்றார் இராமலிங்க வள்ளலார்"

"அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்

இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே...."

என வேண்டி நின்றார் தாயுமான சுவாமிகள்.

உனக்காக மட்டும் வாழாமல் பிறருக்காகவும் வாழ்வதில் ஆழ்ந்த திருப்தியும், பெரு மகிழ்ச்சியும் கிடைக்கின்றது என்பது மறைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களின் வார்த்தைகள்.

இன்று எமது தேசத்திலும் இவ்வாறான மகான்களது வார்த்தைகளை வழிகாட்டுதல்களாகவும், இராமலிங்க வள்ளலாரது உணர்வுகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் பல உயர்ந்த உள்ளங்கள்தான் எமது சமூகத்தை மேன்மையான விழுமியங்களை நோக்கி சரியான தடத்தில் பயணிக்கத் தூண்டி வருகின்றன.

"உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவைதான் செய்ய முடியும்." என்று கூறிய சுவாமி விவேகானந்தர், மற்றவர்களுக்கு நன்மை செய்வது புண்ணியம் எனவும், தீமை செய்வது பாவம் எனவும விளக்கியுள்ளார்.

"சேவை அல்லது தொண்டு என்பது மக்கள் வாழ்விலே ஒருவகை வழிபாடாகும். பிரதிபலன் எதனையும் நோக்காது ஆற்றும் தொண்டுகளுக்கு இறைவனுடைய ஆசியுண்டு" என்பது செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வாக்கு.

அமரர்கள் திரு.க.கந்தையா, திருமதி.கனகம்மா நினைவு நிதியத்தினூடாக மாணவர்கள் மத்தியில் விழுமிய மேம்பாட்டுக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் திருவாளர் க. மயில்வாகனம் அவர்களது சேவை போற்றுதற்குரியது.

சிவமும் அன்பும் ஒன்றே என்பதனை உணர்ந்து, அதனை உணர்த்திடும் வகையில் சேவையாற்றி வரும் இந் நிதியத்தினரது செயல் எல்லைகள் எதிர்காலத்தில் விரிவுபடுவது நன்று. இதற்கு வேலன்பிராய் வந்துறைந்திடு வீரபத்திரன் ஆசிகளை வேண்டியே பணிந்து நிற்கின்றேன்.

*- நன்றி -*

**சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார்,**

**வலயக்கல்விப் பணிப்பாளர்,**

**வலயக்கல்வி அலுவலகம்,**

**தென்மராட்சி — சாவகச்சேரி.**

**-: 1 :-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைப்பாறிய தென்மராட்சி கல்வி வலய
# பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
# அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

பொது நூலகம் யாழ்ப்பாணம்

பூமியில் பிறந்த மனிதர்கள் தங்கள் சுயவாழ்வுக்காகவும் நலனுக்காகவுமே வாழ்கின்றார்கள். ஒரு சிலர் பிற மனிதர்களுக்காகவும் வாழ்கிறார்கள். மனிதர்களை மனிதர்களாக வாழ வைக்கும் ஆர்வத்துடனும் திடசிந்தையுடனும் செயற்பட்டு வருபவர் தச்சன் தோப்பு உயர் திரு. க.மயில்வாகனம் ஐயா அவர்கள்,

இப் பெரியார் ஆற்றிவரும் அறப்பணிகள் பற்றிக் கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக அறிந்தும் கண்டும் இருக்கிறேன். சைவமும் தமிழும் வளர்க்க எண்ணிப்போட்டிகள் நடாத்தியும் ஊக்குவிப்பு நிதிகள் வழங்கியும் வருவதுடன் சிறார்களின் ஊட்டச்சத்து, மனஒருமைப்பாடு, தியானம் என்பவற்றிலும் ஈடுபட்டு உழைத்து வருகிறார்.

இலைமறை காய்களாக இருக்கும் இப்பிரதேச மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் வகையில் இளந்தளிர் சஞ்சிகையை வெளியிட்டு வருவதன் மூலம் களம் அமைத்துக் கொடுத்து வருகிறார். இளந்தளிர் 3 இவ்வாண்டும் அவர்கள் நடாத்தும் பரிசில் நாள் நிகழ்வில் சிறுவர்களின் ஆக்கங்களுடன் வெளிவரவுள்ளது.

போரின் அனர்த்தங்களின் பின்னரும் கூட எமது சந்ததியினரின் போக்கு, சிந்தனைகள் மாறிவிடவில்லை என வாய்மொழியாகவும், ஊடக வாயிலாகவும் உரக்கப் பலர் உரைத்த வண்ணம் உள்ளனர். பரிகாரம் காணமுயல்பவர்கள் மிக அரிது. ஆனால் தான் வாழும் பிரதேசத்து மாணவர்களுக்குப் பரிவுகாட்டி, அரவணைத்து தம் பெற்றோர் நினைவாக நிதியம் ஒன்றை உருவாக்கி குடும்பத்தவரனைவரையும் ஒன்றிணைத்து அறம்சார்ந்த, அறிவுசார்ந்த நூல்கள் வெளியிடும் பணி போற்றுதற்குரியது.

மாணவர்கள், உறவுகள் ஊரவரை அரவணைத்து உத்தம வழியில் பயன்படுத்தும் பணி, மகத்தான சிந்திக்கத்தூண்டும் சீரிய பணி. எக்காலத்தும் நன்றியோடு பாராட்ட வேண்டிய பணி. இவ்வரிய அறவழியில் பயணிக்கும் இவரும் இவரது உறவினர்களும் என் அன்புக்குரியவர்களாகட்டும். இளந்தளிர் தொடர்ந்து செளித்து வளர்ந்து பிரதேசத்துக்கு மட்டுமல்ல அறம் விரும்பி வரும் அனைவருக்கும் நிழல் தரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர்
# சிற்றம்பலம் துரைராசா அவர்கள்
# வழங்கிய ஆசிச் செய்தி

நாவற்குழி பிரதேசத்தில் ஒரு பொது மண்டபம் இல்லாமை இதுவரை காலமும் பெருங் குறையாகவே இருந்து வந்தது. இந்தக் குறையை பெருமனதோடு எந்தவித எதிர்பார்ப்புமின்றி உயர்ந்த நோக்கோடு நிவர்த்தி செய்து வைத்த பெருமை கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தையே சாரும். பெற்றோர் பெயரில் இந்த நிதியத்தை உருவாக்கிசிறப்பாக வளர்த்து, வருடாவருடம்பல சேவைகள்செய்து வருவதை தமது பெரும் நோக்காகக் கொண்டவர்கள் கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தினர். அவ்வா றான பெருமைமிகு நிதியம் வருடாவருடம் வெளியிட்டு வருகின்ற இளந்தளிர் இவ்வ ருடம், கந்தையா கனகம்மா நினைவாலயத் திறப்பு விழா சிறப்பு மலராக வெளி வரு கின்ற வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து பெருமகிழ்வடைகின்றேன்.

நிதி செலவிடுவதோடு மட்டுமல்லாது தனது உடல் உழைப்பையும் அர்ப் பணிப்போடு வழங்கிவரும் பெருமை இந்த நிதியத்திற்குப் பொறுப்பாகத் துலங்கும் திரு. க. மயில்வாகனம் அவர்களையே சாரும். அவருடைய அயரா உழைப்பு, விடா முயற்சி எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கின்ற ஆற்றல் எல்லாம் இந்த நிதிய வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக நிற்கின்றது. மேலும் தந்தை தாய் பெயரில் அவர்களது பிள்ளைகள் ஆற்றிவரும் சேவை என்றும் எல்லோராலும் மதித்து போற் றப்படுவதோடு, என்றும் அவர்களது சேவை நாவற்குழி பிரதேச மக்களால் நன்கு உணரப்பட வேண்டியதொன்றாகும். இவர்களைப் பின்பற்றி இது போன்று ஏனைய கிரா மங்களும் எழுச்சியுற, நாடு வளர்ச்சியடையும்.

எவருடைய தூண்டுதலும் இல்லாமல், அவர்களுடைய உயர்ந்த உள்ளத்தில் உரு வெடுத்ததுதான் இந்த கந்தையா கனகம்மா நினைவு நிதியமாகும். எங்கள் பிரதேச சபையின் நாவற்குழி நூலக வளர்ச்சியில் பெரும் அர்ப்பணிப்போடு பல கோணங் களிலும் உதவி வழங்குகின்ற இந்நிதியத்தின் சேவை நாவற்குழி நூலக வரலாற்றில் ஒரு பெருமைல்கல். அவர்களுடைய சேவை எமது நூலகத்திற்கு என்றும் ஒளிவீச எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து, அவர்களது குடும்பத்தினர் நீண்ட ஆயு ளும் சிறந்த உடல் நலமும் மங்காத புகழும் பெற்று நீடு வாழ வாழ்த்துகின்றேன்.

திரு. சிற்றம்பலம் துரைராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

கல்விதான் நாகரீகத்தின் திறவு கோல். கல்விதான் பண்பாட்டின் அளவுகோல். பிறக்கவிருக்கும் சமுதாயத்தில் கல்விதான் தலைமை தாங்கப்போகிறது. இவற்றை நன்கு உணர்ந்து நாவற்குழி பிரதேச கல்வி வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றிவரும் கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தின் இளந்தளிர் - 03 ஆண்டு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இச்சஞ்சிகையானது இவ்வாண்டு கந்தையா கனகம்மா நினைவாலயக் கட்டிடத் திறப்புவிழா சிறப்பு மலராக வெளிவருகின்றது.

'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'. எமது கண்கண்ட முதற் தெய்வங்கள் அன்னையும் தந்தையுமாகும். அவர்களுக்குச் சேவை செய்வதில், அவர்களை நினைவு கூருவதில் மனிதருக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. அந்தவகையில் திரு. கந்தையா மயில்வாகனம் தமது சகோதரர்களையும் இணைத்து, தந்தை தாயை நினைவு கூர்ந்து, கல்விச் சமுதாயத்திற்கு பெரும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அவர்கள் எமது நாவற்குழி உபஅலுவலக வளாகத்தில் தம் பெற்றோர் நினைவாக புதியதொரு மண்டபத்தினை அமைத்து வழங்கியமையினால், பொதுப்பணியில் நிதியத்தின் பங்கு உயர்வடைந்து நிற்கிறது. இம்மண்டபமானது எமது நூலக செயற்பாட்டின் பொது நிகழ்வுகளுக்கும் உப அலுவலகத்தின் பொது நிகழ்வுகளுக்கும் உறுதுணையாக அமையும். இதற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிதியத்தின் செயற்பாடுகளாக,

1. வருடந்தோறும் பரிசளிப்பு விழா
2. சமய அறிவுப் போட்டிகள்
3. வாசிப்பு மாதப் போட்டிகள்
4. வாசிப்பு மாத நிகழ்வுகள்
5. அறநெறி நூல்களைத் தொகுத்துப் பதிப்பித்து மாணவர்களுக்கு வழங்குதல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக நாவற்குழி பிரதேசத்தின் வளர்ச்சியிலும் சமூக மேம்பாட்டிலும் அதிக அக்கறை கொண்ட கந்தையா கனகம்மா நிதியமும் அவர்களின் குடும்ப உறவுகளும் இனிதே சிறப்பாக வாழ இறையாசி வேண்டி அவர்தம் பணி சிறக்க மனதார வாழ்த்துகின்றேன்.

**செல்வி. தியாகராஜா தர்சினி**

**செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உபபணிமனை வளாகத்தில் புதிய ஆண்டான 2014இல் இப் புதிய மண்டபம் திறந்து வைக்கப்படுவது கண்டு மிகவும் மகிழ்வடைகின்றேன். ஆண்டுதோறும் வெளியிடப்படும் இளந்தளிர் சஞ்சிகையின் இவ்வாண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பிரசேத மாணவர்களினதும், மக்களினதும் கல்வி, உடல் உள மேம்பாட்டுக்காக தமது பெற்றோர் நினைவாக நிறுவிச் சிறப்புடன் செயற்பட்டுவரும் இந்நிதியமானது, இங்கே கம்பீரமாகக் காட்சி தருகின்ற கந்தையா கனகம்மா நினைவாலயம் என்னும் மகா மண்டபத்தை அமைத்துத்தந்துள்ளனர். இப்பிரதேச மாணவர்கள், மக்கள் ஒன்று கூடும் இடமாகவும் அவர்களை வளர்த்தெடுக்கும் நிலையமாகவும் நினைவாலயம் திகழும். அத்துடன், இப்பிரதேச மாணவர்களின் எழுத்தாற்றலை, அவர்களது சிந்தனைகளைப் பதிவு செய்யும் களமான இளந்தளிர் 03 உங்கள் கைகளில் இன்றும் துளிர் விட்டுள்ளது. எமது வாழ்வியலில் நாம் பேணத் தவறிய ஆவணப்படுத்தலை பேணிக்காக்கும் அச்சுச் சாதனமாக இளந்தளிர் செயற்பட்டு வருவது கண்கூடு.

இச் செயற்பாடுகளினூடாக, இப்பிரதேச மாணவர்கள், மக்களின் வளர்ச்சியில் இந்நிதியத்தினர் கொண்டுள்ள அளப்பரிய அக்கறை தெரிகின்றது. அவர்களது தாராள சிந்தனை, தளராத செயற்பாடு, எதிர்கால நன்நோக்கு என்பன மிகவும் வேகமானது, காத்திரமானது, நுண்மையானது. அவர்களது நன்நோக்கச் செயற்பாடுகள், அறவழிப்பயணங்கள் முழுவீச்சுடன் தொடர்ந்து பயன்தந்து இப்பிரதேசம் மேலும் செளிப்புற வேண்டும் என இறையாசி வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

*- நன்றி -*

நாகலிங்கம் தங்கவேல்
பொறுப்பதிகாரி,
சாவகச்சேரி பிரதேச சாபை,
உப பணிமனை நாவற்குழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகரின் உள்ளத்திலிருந்து ..........

யாழ்.மாவட்டத்தின் வளம் மிக்க தென்மராட்சியில் நாவற்குழி பிரதேசத்தில் சாவகச்சேரி பிரதேச சபை உப பணிமனை வளாகத்தில் வியக்க வைக்கும் விதத்தில் கோவிலாக்கண்டி மேற்கு தச்சன்தோப்பை சேர்ந்த அமரர்கள் கந்தையா, கனகம்மா நினைவு நிதியத்தினரால் அமைக்கப்பட்டுள்ள கந்தையா கனகம்மா நினைவாலய சிறப்பிதழ் இளந்தளிர் 03க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த பல வருடங்களாக இங்குள்ள மக்களுக்கு பல வகையான சேவைகளை ஆற்றி வரும் இவ்வமைப்பின் சேவைகளை கண்டு வியப்படைகின்றேன். அசாதாரண சூழ் நிலைக்கு பின்னரான நாவற்குழி பிரதேசத்தையும் மக்களையும் முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்கும் மேலும் வளர்ச்சி அடையச் செய்வதற்கும் இவ்வமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர்.

கல்வி வளர்ச்சி, தாய்சேய் நலன்புரி சேவைகள், உடற்பயிற்சிகள், அறநெறிச் செயற்பாடுகள், போட்டி நிகழ்வுகள், மரம் நடுகை போன்றவற்றுடன் நின்று விடாது எமது நூலக வாசகர் வளர்ச்சி கருதி பல வகையான கல்விசார் சேவைகளையும் எமது நூலகத்தின் ஊடாக செய்து வருகின்றனர்.

"கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்" எனும் மகுட வாசகத்தைத் தாங்கி இப்பிரதேச மக்களின் நலனில் மட்டும் அன்றி அயற் பிரதேச மாணவர்களின் நலனிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

மாணவர்களுக்கு தேவையான பல நூல்களை வெளியிட்டு இலவசமாக வழங்குவதுடன், அவர்கள் புத்தி ஜீவிகளாகவும் அறிவாளிகள் ஆகவும் எதிர் காலத்தில் திகழ பல வகையான உற்சாகப்படுத்தும் செயற்பாடுகளிலும் அயராது உழைத்து வருவதைக் காண்கின்றேன்.

சரியான பாதையில் முறையான ஓர் கொள்கையுடன் சரியாக இனம் காணப்பட்ட செயற்திட்டங்கள் ஊடாக செயற்படுத்தப்படும் இவ்வமைப்பின் சேவை இத்துடன் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது இச் சேவைகளை செவ்வனவே சிறப்பாக செய்வதற்கு பொருத்தமான ஓர் மண்டபம் தேவைப்பட்டது.

கடந்த ஆண்டு கடினமான முயற்சிகள் ஊடாக இதற்கான இடத்தினை தெரிவு செய்து மண்டபத்தினை குறுகிய காலத்திற்குள் சிறப்பாக முடித்து இந் நினைவு மண்டபத்தினை திறப்பதனையிட்டு உவகை அடைகின்றேன்.

எமது நூலக சேவையினை சிறப்பாக ஆற்றுவதற்கு மண்டபம் இல்லாது சிரமப் பட்டதனையும் எமது பகுதி தாய்சேய் நலன்புரி நிலையத்தின் சேவை இடப்பற் றாக்குறையினையும் கருத்தில் கொண்டு 13.11.2013 இவ் நினைவு மண்டபத்திற்கான அடிக்கல் நிகழ்வினைத் தொடங்கி மிகக் குறுகிய காலத்தினுள் அமைத்தமையும் பாராட்டப்பட வேண்டியது. தனியொரு குடும்பமாய் தமது பெற்றாரின் பெயரில், பிள்ளைகள் அனைவரும் இணைந்து ஆற்றும் சேவைகள் மக்கள் மயப்பட வேண் டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் இவர்களது முயற்சிகள் தொடர வாழ்த் துவதுடன் இப்பணியில் ஈடுபட்டுழைத்து வரும் அனைவரும் நீண்ட ஆயுளும் சகல சௌபாக்கியங்களும் அடைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

*- நன்றி -*

திருமதி. இராணி சிவசுப்பிரமணியம்
நூலகர்,
சாவகச்சேரி பிரதேச சபை,
பொது நூலகம் நாவற்குழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

2007ம் ஆண்டில் அவர்களது தாயாரின் மரணத்தின் பின், 1995ல் இறந்த தகப்பனார் நினைவாகவும் கந்தையா கனகம்மா நினைவு நிதியம் என ஒரு அமைப்பை அவர்களது பிள்ளைகள் இணைந்து உருவாக்கி, இப்பிரதேச மாணவர்களின் கல்வி, நல்லொழுக்கம், ஆக்கத்திறன் போன்றவற்றை வளர்த்து வரும் இவர்கள், சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப பணிமனை வளவில் கந்தையா கனகம்மா நினைவாலயம் என்ற மண்டபத்தை அமைத்து நூலக, பிரதேசசபைப் பாவனைக்கு விடுகிறார்கள். இந்நாளிலே இவர்கள் ஆண்டு தோறும் வெளியிடும் இளந்தளிர், மண்டப திறப்புவிழாச் சிறப்புமலராகவும் வெளிவருகின்றது. இளந்தளிர் 03 சிறப்பு மலருக்கான வாழ்த்துரையை எமது சனசமூக நிலையத்தின் சார்பில் வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் கிராம அலுவலராகக் கடமையாற்றியதுடன், இப்பிரதேசத்தின் மைந்தன் என்ற வகையிலும் இவர்களது தொடர்முயற்சிகளை நன்கு அறிவேன். பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப், போட்டிப் பரீட்சைகள் நடாத்தியும், ஊக்குவிப்பு நிதிகள் வழங்கியும், அறநெறி பாடநூல்களைத் தொகுத்துப் பதிப்பித்து இலவசமாக வழங்கி வருகின்றமையுடன், தாய் சேய் சிறுவர்களின் ஊட்டச்சத்து நிறைவிலும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இவர்களின் இதுபோன்ற அறக்கொடைப்பணிகள் மென்மேலும் விரிவடையவும், தொடர்ந்து நடைபெறவும் இறைவனின் அருளை வேண்டிப் பிரார்த்திப்பதுடன், இப்பணியில் ஈடுபட்டுழைத்து வரும் அனைவருக்கும் வாழ்த்துக்களும் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

- நன்றி -

**ஆ. நடராசா**
**தலைவர்,**
நாவற்குழி சனசமூக நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சாவகச்சேரி நாவற்குழி பிரதேசசபை, உப பணிமனையில், கந்தையா கனகம்மா நினைவாலயம் என்ற பொது மண்டபம் அமைத்து அதன் திறப்பு விழாச் சிறப்பு மலராக வெளிவருகின்ற இளந்தளிர் 3க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் காந்தி சனசமூக நிலையம் பெருமகிழ்வடைகின்றது.

எமது பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக சிறப்புடன் இயங்கி மாணவர்களின் கல்வி, நல்லொழுக்க, ஆன்மீக வளர்ச்சிக்காகவும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் உழைத்துவரும் கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தினர் இம்மண்டபத்தை அழகுற அமைத்துள்ளனர்.

மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேண, அறநெறி நூல்களையும், கற்றல் உபகரணங்கள், நூல்கள் வழங்கியும், போட்டிப்பரீட்சைகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கியும், பொதுத் தேர்வுகளில் சித்தியடையும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கியும் பல முனைகளில் இயங்கிவரும் இந்நிதிய உறுப்பினர்கள் மென்மேலும் நலமாகவும் வளமாகவும் வாழவும் இது போன்ற அரிய பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துவரவும் இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்திப்பதுடன், இது போன்ற பணிகள் ஏனய எல்லாக்கிராம மட்டங்களிலும் எடுத்துச் செயற்பட வேண்டும் எனவும் காந்தி சனசமூக நிலையத்தினர் வாழ்த்துகின்றோம்.

*- நன்றி -*

செ. அழகராசா
*தலைவர்,*
காந்தி சன சமூக நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கோவிலாக்கண்டி மேற்கு தச்சன்தோப்பு திரு. திருமதி. கந்தையா கனகம்மா அவர்களின் பிள்ளைகளால் நிறுவப்பட்ட கந்தையா கனகம்மா நினைவு நிதியம் தொடர்ந்து வெளியிட்டு வருகின்ற இளந்தளிர் சஞ்சிகையானது இவ்வருடம் கந்தையா கனகம்மா நினைவாலயத் திறப்பு விழாச் சிறப்பு மலராக வெளிவருவது கண்டு பெரு மகிழ்வடைவதுடன், எமது நிலையத்தின் சார்பாக வாழ்த்துரை வழங்குவதைப் பெரும் பேறாகவும் கொள்கின்றேன்.

இந்த அமைப்பு கடந்த பல ஆண்டுகளாக இப்பிரதேச மக்களுக்குப் பல சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றது. இப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல போட்டிப் பரீட்சைகளை நடாத்திப் பெறுமதிமிகு பரிசில்களை வழங்கி ஊக்குவித்து வருகிறது. இந் நிதியமானது, திறமைமிகு வசதிகுறைந்த மாணவர்களை இனங்கண்டு உதவியும் ஊக்குவித்தும் வருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

போட்டிப் பரீட்சைகள் நடாத்துதல் பொதுத் தேர்வுகளில் சித்தியடையும் மாண வர்களுக்கு உதவிகள் செய்தல், தாய்சேய் நலன் கருதி இலைக்கஞ்சி ஊட்டச்சத்தை வழங்குதல். இவ் ஊட்டச்சத்து மிகு இலைக்கஞ்சியை, கைதடி சித்த மருத்துவ வெளி நோயாளர் பிரிவில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்தும் வழங்குதல் போன்ற செயற்பாடுகளின் தொடராக, எமது பிரதேசத்துக்கு மிகவும் தேவைப்பட்ட, பொது மண்டபமொன்றை, நாவற்குழி பிரதேச பணிமனை வளாகத்தில் அமைத்து வழங்குகின்றனர். இம்மண்டபமானது இப்பிரதேச மாணவர்களின் கல்வி, கலாச்சார, உடல் உள மேம்பாடுகளை வளர்த்தெடுக்கும் மையமாகத் திகழ வேண்டுமென வாழ்த்துவதுடன், இது போன்ற பலதரப்பட்ட நன்முயற்சிகள் ஒவ்வொரு கிராம மட்டத்திலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமெனவும் வேண்டுகின்றேன்.

இப்புனிதப் பணிகளில் தம்மை அர்ப்பணித்து முன்நின்று உழைத்து வருகின்ற நிதியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பல்லாண்டு சுகமாக வாழ - இது போன்ற அரிய பெரிய பணிகளை ஆற்ற - இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்தித்து மகிழ்வடைகின்றேன்.

*-நன்றி-*

க. முத்துராஜா
தலைவர்,
ஸ்ரீ முருகன் சனச சமூக நிலையம், தச்சன்தோப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

கோவிலாக்கண்டி மேற்கு, தச்சன்தோப்பு, கந்தையா கனகம்மா நிதியத்தினர் ஆண்டுதோறும் நடாத்தி வருகின்ற பரிசில் நாள் நிகழ்வில் வெளியிட்டுவரும் இளந்தளிர் சஞ்சிகையானது இவ்வருடம், நிதியத்தினர் அழகுற அமைத்து சாவகச்சேரி பிரதேச சபையிடம் கையளிக்கும் கந்தையா கனகம்மா நினைவாலயச் சிறப்பிதழாகவும் வெளிவருகின்றவேளை, இம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலையத்தினர் பெருமகிழ்வடைகின்றோம்.

ஒரு குடும்பத்தவர்கள் தமது பெற்றோரின் நினைவாக ஆரம்பித்து, இப்பிரதேச மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுழைத்து வரும் இந்நிதியமானது பல சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு அறம் வளர்த்து வருவது பாராட்டப்படவும் பின்பற்ற வேண்டியதுமாகும்.

இப்பிரதேச மாணவர்களின் ஆக்கங்களுடன், அறிவுசார் சான்றோர்களது படைப்புக்களும் பல்வேறு ஆவணங்களின் பதிவேடாகவும் வெளிவரும் இளந்தளிர் 3 முழுமை பெற்று வருகின்றது. கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம் என்ற மகுட வாசகத்தைக் கொண்டியங்கி வருகின்ற இந்நிதியம் பல்வேறுபட்ட தளங்களில் இயங்கி மாணவர்களைக் கற்கத் தூண்டி வருவது கண்கூடு. ஆளவோர் விட்டு இளந்தளிரானது, கிளைகள் பரப்பிச் செளித்து, விழுது விட்டுப் பரந்து இப்பிரதேச மாணவர்களுக்கும் மக்களுக்கும் நிழல்தர நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் அருள் வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

நன்றி.

கு. குலறஜீஸ்
தலைவர் சித்திவிநாயகர் சனசமூக நிலையம்
நாவற்குழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயங்களிலிருந்து.........

இவ்வருடமும், தொடர்ந்தும் இளந்தளிர் 3 ஐ வெளியிட்டு வைப்பதில் பெருமிதம் அடைகின்றோம். வழமை போலவே இவ்வாண்டும் எமது பிரதேச மாணவர்களின் ஆக்கங்களுக்கும் தேடல்களுக்கும் களம் அமைத்து கொடுத்ததுடன் அவர்களிடையே நடாத்திய போட்டியில் பரிசு பெற்றவர்களின் ஆக்கங்களும் பதிவு செய்யப்படுகின்றது. அத்துடன் அறிவுசார் ஆய்வாளர்களின் ஆக்கங்களும் இணையப்பெற்று முழுமையான சஞ்சிகையாக வெளிவருகின்றது.

இளந்தளிர் 3, கந்தையா கனகம்மா நினைவாலயத் திறப்புவிழாச் சிறப்பு மலராகவும் வெளிவருவதுடன் நிகழ்வின் நிழல்கள் அழகிய வண்ணப்பதிவாகவும் உள்ளன. இப்பிரதேச மாணவர்களுக்கான இவ்வாறான மண்டபத்தின் தேவையை உணர்ந்து அமைத்து தந்ததுடன் திறப்பு விழா நிகழ்வையும் சிறப்புற நடாத்தி, சிறப்பு மலரையும் வெளியிடுவதானது மாணவர்களை மேலும் மேலும் தேடித் தெரிந்து கற்கவும் எழுதவும் தூண்டும் என நாம் திடமாக நம்புகின்றோம்.

மாணவர்களை வாசிக்கத் தூண்டவும், தாம் வாசித்து அறிந்தவற்றை ஏனையவர்களுடன் பங்கிடுவதற்காக எழுதத் தூண்டுவதாலும் மாணவர்கள் மிகுந்த பயனடைவார்கள் என்பதுடன், செய்திகள் பரிமாறும் சாதனமாகவும் நிகழ்வுகளின் ஆவணமாகவும் இவ் வெளியீடுகள் அமையும் என்பது திண்ணம்.

இச்சஞ்சிகையை வெளியிடத் தூண்டிய, நிதியக் காப்பாளர் அவர்களுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும், தகமையாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இனிவரும் காலங்களிலும் இளந்தளிர் சிறப்பாய், தொடர்ச்சியாய் துளிர்த்து வளர வேலன்பராய் காதவாய்க்கால் அருள் மிகு வீரபத்தீஸ்வரர் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*- நன்றி -*

***கற்பதால் உயர்வோம் ! காலத்தை வெல்வோம் !!***

**செல்வன். வ. கபிலன்**

**செல்வி . து. ரஜிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாளர் அறிக்கை

புதிது புதிதாகத் தினம் தினம் உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் அளவற்ற ஆற்றல்களுடனும் திறன்களுடனும்தான் பிறக்கின்றன. ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆற்றல்களை வழங்கித்தான் இறைவன் அவர்களைப் படைத்திருக்கின்றார். அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களை வளர்த்தெடுப்பதன் மூலமே ஒவ்வொருவரும் தம்மை வளப்படுத்திக் கொள்கின்றனர். இதை நாம் நன்கு உணர்ந்து கொண்டமையால்தான் இப்பிரதேச மாணவர்களின் கல்வி முயற்சிகளை வளர்த்துவிட, தூண்டிவிட, ஊக்கிவிட முயன்று வருகிறோம். அவர்களின் ஆற்றல்களை வளர்த்துவிட போட்டிப் பரீட்சைகள் நடத்தி இதுபோன்ற பாராட்டு விழாக்களும் பணக் கொடுப்பனவுகளும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தும் வருகின்றோம். அதன் தொடராக இவ்வாண்டும் மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வை இன்று இங்கு நடத்திக்கொண்டிருக்கிறோம். இவ்வரிய எண்ணக்கருவை எம்முள் வளர்த்து அதற்கான வளங்களையும் தந்து தொடர்ந்தும் நாம் இயங்க வல்லமை தந்துகொண்டிருக்கும் வேலன்பிராய் காதவாய்க்கால் அருள் மிகு ஆதி வீரபத்தீஸ்வரரின் பாதாரவிந்தங்களைப் பற்றிப் பணிந்து வணங்குகின்றோம்.

**இவ் இனிய நிகழ்வினை ஒழுங்கமைத்து நடாத்திக் கொண்டிருக்கும் தலைவர் அவர்களே !**
**இங்கு வந்து கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் முதன்மை விருந்தினர் அவர்களே !**
**சிறப்பு விருந்தினர்களே !**
**கௌரவ விருந்தினர்களே !**
**இப்போட்டிப் பரீட்சையை நடத்தி முடிக்க பல வகைகளிலும் உதவிபுரிந்த நல் இதயங்களே !**
**சமூக நலன்விரும்பிகளே !**
**எம் இனிய மாணவச் செல்வங்களே ! அவர்களின் பெற்றோர்களே !**
**உங்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி வரவேற்கின்றோம்.**

முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் திரு. விநாயகன் மாணிக்கம் அவர்களே, பின்தங்கிய கிராமம் ஒன்றில் நீங்கள் பிறந்து வளர்ந்து, உங்கள் இடையறா முயற்சியாலும், அர்ப்பணிப்புமிகு தேடல்களாலும் இன்று உயர்நிலை அடைந்து, கற்றுக்கொள்ள வேண்டும் என விரும்பும் எவருக்கும் எதுவும் தடையாக அமையாது என்று நிரூபித்துள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலைப் பாடமாகக் கொண்டு பட்டப்படிப்பு, பின்பட்டப்படிப்பு, தத்துவமானி போன்ற தகைமைகளைக் கொண்டு ஆசிரியர் சேவை அதிபர் சேவை, கல்வி அதிகாரி போன்ற பதவிகளை வகித்து அவற்றுக்குப் பெருமை சேர்த்து, இன்னும் பல சமூக மேம்பாட்டுப் பணிகளில்- சமய வளர்ச்சிப் பணிகளிலும், நீதி வழங்கும் கனவானாகவும் வாழ்ந்து வருகின்றீர்கள். பலதரப்பட்ட சமூகப்பணிகளில் ஈடுபட்டு வரும் உங்கள் நேரத்தின் பெறுமதி அள விட முடியாதது. அவ்வாறான சூழ்நிலையிலும் எமது அழைப்பை ஏற்று இங்கு வந்து கலந்து சிறப்பிக்கின்றீர்கள். தன்னலமற்ற சேவைக்காகவும், தாராள சிந்தனைக்குமாக இறைவன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நீண்ட ஆயுளும் நல்ல ஆரோக்கியமும் வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

எமது சிறப்பு விருந்தினர் இப்பிரதேசத்தின் சொத்து. வாழ்விடம் வேறாக இருந் தாலும், வேர் விட்டதெல்லாம் இம்மண்ணில்தான். வளமான இம்மண்ணில் வேர் விட்டு. பயன்தரு தகைமையாளனாக இன்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரி வுரையாளராகக் கடமையாற்றி வருகின்றீர்கள். மாணவர்களை வளர்த்தெடுக்கும் பணியில் நாம் இயங்க, கல்வியியல் துறையில் முதுமானிப் பட்டம் பெற்ற திரு. மகா லிங்கம் சத்தியகுமார் அவர்கள் மாணவர்களை நல்வழிப்படுத்தும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து வருவதுடன், உளநல மேம்பாட்டு ஆலோசகராகவும் செயற்பட்டு வரு கின்றீர்கள். இடையறா உங்களது பணியின் சேவைகளுக்கு இடையேயும் எமது அழைப்பை ஏற்று இன்று இங்கு வந்து கலந்து சிறப்பிக்கின்றீர்கள். மிக இளவயதிலேயே இவ் வாறான உயர்பதவிகளை வகித்துவரும் நீங்கள் தொடந்தும் பல சேவைகள் ஆற்ற ஏதுவாக நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் சுகவாழ்வும் நீண்ட ஆயுளும் எல்லா வளங்களும் பெற்றுவாழ வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்குழி மகாவித்தியால முதல்வர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் இப்பிரதேச மாணவர்களின் கற்றல் நல்லொழுக்க மேம்பாடுகளில் இடையறாது ஈடுபாடு காட்டி வருபவர். உள்ள வளங்கள் அனைத்தினதும் உச்சப் பயன்பாட்டை பெற்று உன்னத நிலைக்கு எமது மாணவர்களை இட்டுச் செல்வதற்கு, இவர் இப்பிரதேசத்துக்கு ஆற்றுகின்ற சேவை என்றும் நினைவில் கொள்ள வேண்டியது. நீங்கள் நோயில்லா வாழ்வும் வளமும் பெற்று நீண்டகாலம் வாழ இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். அவ்வாறே கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி ஜெயந்தி சந்திரகாந்தன் அவர்கள் எவ்வேளையிலும் மாணவர்களுடனும் அவர்களின் கற்றல், ஆளுமை வெளிக்கொணரும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு உழைத்து வருவதை அவதானித்துள்ளோம். பிரதேச பற்று றுதியுடன் உழைத்துவரும் இவர் இங்கு கலந்து சிறப்பிப்பது எமக்குப் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கின்றது. இவர்களது நன்நோக்குச் செயற்பாடுகள் தொடர நீண்ட ஆயுளும் சுகமும் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து மகிழ்வடைகின்றோம்.

மறவன்புலோ வித்தியாலய ஆசிரியர் திரு. நாகராசா கேதீஸ்வரன் அவர்கள் எம்முடைய முயற்சிகள் அனைத்திலும் விருப்புடன் ஈடுபடுவதுடன் ஆலோசனைகள் வழங்கியும் வருபவர். இவரும் இவரைப்போன்ற துடிப்புடைய ஆசிரியர்களையும் கொண்டியங்கி வரும் இவ்வித்தியாலயம் மிக விரைவில் புதுச்சாதனைகள் படைக்கும். அந்த அரிய பணிகள் சிறப்புற நிறைவேற இவர் சுகம் வளத்துடன் நீண்ட காலம் வாழ வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

கோயிலாக்கண்டி மகாலஷ்மி வித்தியாலய அதிபர் திரு. க.தேவநேசன் அவர்கள் எமது அறப்பணியில் ஆரம்பம் முதல் இணைந்து ஆலோசனை வழங்கி வருபவர். இவர் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எமக்குப் பெருமை சேர்க்கிறது. இவர் நீண்ட காலம் சுகமாக வாழப் பிரார்த்திக்கின்றோம்.வழமை போலவே எமது கௌரவ விருந்தினர் எமது கிராமத்தவர். இவர் எமது கிராம வளர்ச்சிக்கு எம்முடன் இணைந்து பல வழிகளில் செயற்பட்டு வருபவர். கோயிலாக்கண்டி மேற்கு ஸ்ரீ சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவராகவும் கோயிலாக்கண்டி விவசாய சம்மேளனத்தின் செயலாளராகவும் செயலாற்றி வரும் திரு.சோ.செல்வராசா அவர்கள் மிகவும் வளம்குன்றிய எமது கிராமம் மேம்படவேண்டும் என அயராது உழைத்து வருபவர். இவர் நீண்டகாலம் சுகமும் வளமும் பெற்று வாழ இறைவன் அருள்புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இப்பிரதேச மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், பிரதேசத்தின் நலனில் அக்கறைகாட்டி உழைத்துவரும் சமூகப் பணியாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், எமது இனிய நண்பர்கள் அனைவரும் நீண்ட ஆயுளும் சுகமும் பெற்று வாழ்வதுடன் தொடர்ந்தும் இதேவிருப்புடன் எம்முடன் இணைந்து வளர வேண்டும் எனவும் விரும்புகின்றோம்.

**நல்லதை எண்ணுவோம் ! நல்லதே நடக்கும் !!**

பொதுவாக விழாக்கள் மக்களை ஒன்று கூட்டவும், ஒன்று கூடிக் குதூகலித்துக் கொண்டாடி மகிழவும்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளன, எனத் தோன்றினாலும்கூட, சகோதரத்துவம், விட்டுக்கொடுத்தல், சேர்ந்து உண்ணல், அன்பு காட்டுதல் போன்ற உயரிய விழுமியங்கள் அதன் ஊடாக வளர்த்துக்கொள்ளவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுதலும் தட்டிக்கொடுத்தலும் மாணவர்களை மட்டுமல்ல அனைவரையும் இன்னும் இன்னும் முயலத்தூண்டும். முயலமுயல வெற்றி நிச்சயம் இருக்கும். கீழே நிற்பவனை, மலை உச்சிக்கு ஏற்றுவதும் மலை உச்சியை அடைந்ததும் வானத்துக்கு ஏற்றுவதும் இப்படியான பாராட்டு, பரிசளிப்பு, கௌரவிப்பு விழாக்கள்தான். ஆனால் விழாக்கள் வெறும் விழாக்களாகி போனதுதான் வேதனைக்குரிய இன்றைய நிதர்சனம். 3,4 பேர் அல்லது அதற்குமேல் மக்கள் கூடும் இடங்களில் எல்லாம் தற்போது பேசப்படும் விடயம் சிறுவர் துஷ்பிரயோகம்தான். சிறுவர் துஷ்பிரயோகம் என்றதும் பாலியல் துன்புறுத்தல்தான் கருதுபொருளாக உள்ளது. ஆனால் மிகுந்த ஆற்றல்களுடன் பிறந்து வளரும் குழந்தைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாமை, படிக்கத் தூண்டாமை குழந்தைத் தொழிலாளிகளாக்குவது, விழாக்களிலும் அவை சார்ந்த செயற்பாடுகளிலும் அவனைப் பயம்காட்டி ஈடுபடுத்தி மூடநம்பிக்கைகளை வளர்ப்பதும் சிறுவர் துஷ்பிரயோகம்தான். மாறாக நாம் வருடந்தோறும் நடத்தி வருகின்ற போட்டிப் பரீட்சைகளும் உடல், உளஆரோக்கிய செயற்பாடுகளும் அவளை தன்னம்பிக்கை மிக்கவனாக மாற்றுவதுடன் உடல் உறுதி, மனஉறுதியையும் ஏற்படுத்தி வருவது கண்கூடு.

எமது போட்டிப் பரீட்சைகளில் மாணவர்கள் சந்திக்கும் கேள்விகள் அனைத்தும் இவர்களது பாட நூல்களில் இருந்து இவர்களே தேர்ந்தெடுத்து ஆசிரியர்களால் சரிபார்க்கப்பட்டவை. இவர்களே தங்களது கேள்விகளை தேர்ந்தெடுத்து தந்ததன் மூலம் இவர்கள் பாடங்களை ஊன்றிக் கற்கவும், நாங்கள்தான் வினாக்களை தேர்ந்தெடுத்தோம் என்ற ஈடுபாட்டையும் ஏற்படுத்தி வருகின்றது. இதுவும் ஒரு வகை மனவளர்ச்சிதான். ஒரு வகைத் தூண்டல் தான். மாணவர்களின் ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் புனிதப் பணியில் உழைத்துவரும் நாம் மாற்றுத் திறனாளிகளின் ஆற்றல்களை வெளிக்கொணரவும், ஊக்குவிக்கவும் , அவர்களையும் அறிவு ஜீவிகளாக ஆற்றல் மிகுந்தவர்களாக வெளிக்கொணர்ந்தும் ஆற்றுப்படுத்தும் பணியிலும் ஈடுபட்டு பாராட்டுப்பெற்றது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள இசை ஆர்வமுள்ள முதியவர்களை இன்றைய நிகழ்வில் பாடவைப்பதன் மூலம் அவரை சமூகம் தனித்து விடவில்லை என்பதை அவருக்கு உணர்த்துவதுடன் வயசும் வறுமையும் அடையத் துடிப்பவனுக்கு தடைகள் அல்ல என்பதை மாணவர்களுக்கு விளக்கி இருக்கின்றோம். இவ்வாறான மாற்று ஆனால் ஊக்குவிப்பு சிந்தனைகளை எமக்கு அளித்துவரும் இறைவனுக்கு இவ்வேளையில் நன்றிகலந்த வணக்கங்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றோம். இவற்றையெல்லாம் சாதனைகளாக நாம் பட்டியலிடவில்லை. பரிசோதனைகளாக முன்வைக்கின்றோம். எந்தெந்த வழிமூலம் மாணவர்களைக் கற்கத்தூண்ட முடியுமோ அனைத்து வழிகளிலும் முயல்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஆரம்பித்து நடத்தி வந்த யோகாசன பயிற்சி வகுப்பு போதிய மாணவர்களின் வருகையின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் ஆர்வம் காட்டாதது அவர்களது குறையல்ல. பன்னெடுங்காலங்களாக பயின்றுவந்த இக்கலையானது இடையில் சில காலங்கள் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளதால் புத்தூக்கம் கொடுத்து நடைமுறைப்படுத்துவது சற்று கடினமாக விடயம் என்பதனை உணர்ந்துள்ளோம். இருப்பினும் போதிய விளக்கங்கள் அறிவுறுத்தல்கள் வழங்கி இவ்வருடம் மீண்டும் ஆரம்பிக்க உள்ளோம். இப்பிரதேச பாடசாலை மாணவர்களின் சத்துணவு ஊட்டல் நடவடிக்கையாக இலைக்கஞ்சி வழங்க உள்ளோம். ஆசிரியர்கள், அதிபர்களின் உதவியுடன் இவற்றை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.

நாம் புதிதாக அமைத்து சாவகச்சேரி பிரதேச சபையிடம் கையளித்த கந்தையா கனகம்மா நினைவாலய மண்டபத்தில் பிரதி மாத பௌர்ணமி தினத்தன்றும் சமயக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்துள்ளோம். அறநெறி வகுப்புகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இன்று இங்கு பாராட்டும் கௌரவமும் பெற்றுள்ள இப்பிரதேச மாணவர்கள் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றிருந்தபோதிலும் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் வழமை போன்று இவ்வாண்டும் ஊக்குவிப்பு நிதி வழங்கியுள்ளோம். எமது பரிசில் நாள் விழா ஏற்பாடுகளில் ஏற்பட்ட காலதாமதத்தால் இவ்வாண்டு க.பொ.த. சாதாரணதரத்தில் சித்திபெற்ற மாணவர்களையும் தேர்ந்தெடுத்து ஊக்குவிப்பு நிதி வழங்கியுள்ளோம். இனி வரும் காலங்களில் இவ்வாறே எமது பரிசில் நாள் நிகழ்வுகளில் பரிசில்களையும் ஊக்குவிப்புகளையும் வழங்க உத்தேசித்துள்ளோம். மணப நிர்மாணப் பணிகளில் கவனம் செலுத்தியதாலும், பரிசில் நாள் நிகழ்வு பின்போடப்பட்டிருந்ததாலும் நாம் வழமையாக வழங்கி வரும் மரக்கன்றுகள் இவ்வருடம்வழங்க முடியாமல் போய்விட்டமை வேதனைக்குரிய விடயம். ஏனைய பிறசெயற்பாடுகள் வழமை போல நடைபெற்று வருகின்றன. எமது செயற்பாடுகளால் கவரப்பட்டு சம்பத் வங்கியினர் எமது பிரதேச மாணவர்களுக்கென சிறுவர் பூங்கா ஒன்றை நிறுவித்தர எம்முடன் இணங்கியுள்ளனர். அதற்கான இறுதிக்கட்ட நிர்வாக வேலைகள் யாவும் முடிவடைந்துள்ளன. இதற்குப் பற்றாக்குறையாக இருந்த காணியை (கிட்டத்தட்ட 2 குளி) வழங்கிய திரு. பரமு மார்க்கண்டு அவர்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்து மகிழ்வடைகின்றோம். எமது புனிதப் பயணத்தில் எம்மோடு இணைந்து செயற்படும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் நல்வாழ்வும் வளமும் இறைவன் வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

*- நன்றி -*

***கற்பதால் உயர்வோம் ! காலத்தை வெல்வோம் !!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01

# வாழும் கலை ( ART OF LIVING)

மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான் வாழும் வகை புரிந்து கொண்டான். எல்லாம் தெரிந்தும் மனிதனுக்கு நோயில்லா வாழ்வு வாழ மட்டும் தெரியவில்லை. நோய் வந்த பின்னர் தவிப்பதைவிட, பரிகாரம் தேடுவதைவிட நோய் வராமல் தடுக்கும் வகை புரியவில்லை. பண்டையகால மனிதர்கள் திடமாக இருந்தார்கள். உடலை உறுதியாக மட்டுமல்ல மனதையும் திடமாக வைத்திருந்தார்கள். இயற்கை உணவு வகைகளை உண்டு வாழ்ந்ததால் நோயில்லாமல் வாழ முடிந்தது. இயற்கையிலே இறைவன் படைத்த அத்தனையும் மனிதனைச் சுகவாழ்வு வாழ வைக்கத்தான். சூழலுக்கேற்ப இசைவாக்கம் பெற்று வாழத் தெரிந்த மனிதனுக்கு இயற்கையோடு இசைந்து வாழத் தெரியவில்லை. மூதாதையர் வாழ்ந்த வாழ்வு முறையின் உண்மைத் தத்துவங்களை உணர்ந்து வாழ மறந்து விட்டான். எம்மிடம் இருந்த அரும்பெரும் சொத்துக்களான, வேத ஆகம சித்தாந்த உபநிடத, வைத்திய நூல்களை வாசிக்கத் தவறிவிட்டான். இவற்றையெல்லாம் எடுத்துக்கூறும் போது எதிர்மறையாகச் சிந்திப்பது போலவே தோன்றும். சிலர் வாதிடவும்கூடும். உண்மை நிலை அதுவல்ல. நாம் வாழ்ந்த வாழ்வு எமது மூதாதையோர் வகுத்து வைத்த வாழ்வு நெறி, கவனிப்பாரற்றுப் போய் விட்டதே என்ற ஆதங்கம்தான்.

அன்று, மக்கள் தொகை குறைந்திருந்த படியால் நகரத்திலும் சரி நாட்டிலும்சரி போதிய இடவசதி இருந்தமையால் மனித வாழ்வுத் தேவைகளான உணவுப் பயிர்களனைத்தும் அவரவரே வளர்த்து வந்தனர். பண்டமாற்று முறையில் தம்மிடையே உணவுப் பொருட்களைப் பரிமாறிக் கொண்டனர். வளர்க்கும் தாவரங்களின் இலை குழைகளை வெட்டி கால்நடைகளை வளர்த்தனர். கால்நடைகளின் கழிவுகளைக் கொண்டு பயிர் வளர்த்தனர். அவற்றிலிருந்து தனது உணவுவகைகளை ஆக்கிக் கொண்டனர். அவை, சத்து மிகுந்திருந்ததுடன் சுகாதாரமாகவும் இருந்தன.

இன்று அதற்கான இடமும் நேரமும் சுருங்கி விட்டது. மக்கள் இனம் பெருகப் பெருக காணிகள் துண்டாடப்பட்டு சிறுபரப்பளவு காணிகளில் வாழும்நிலை வந்த போதும், வேலிகளிலும் வெற்றிடங்களிலும் பயன்தரு மரங்களை வளர்த்தான். வேலியில் முருங்கை அகத்தி போன்ற மரங்களை வளர்த்துப் பயன்பெற முசுட்டை, முல்லை, குறிஞ்சா போன்ற கொடிகளும் அவற்றில் படர்ந்து வளர்ந்து அவனது உணவை நிறைவுணவாக்கியது. துளசி, வல்லாரை, பொன்னாங்காணி, கற்பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி போன்ற மூலிகைகளையும் வளர்த்து நோயெதிர்ப்பை வளர்த்துக்கொண்டான். கோழி, ஆடு, மாடு வளர்த்து போஷாக்குணவுகளைப் பெற்றுவாழ்ந்தான். அக்காலத் தில் இன்றுள்ளது போன்று வைத்தியசாலைகள் இல்லை. ஆய்வுகூடங்களும் இல்லை. தேவையும் இருக்கவில்லை. எல்லோரும் ஆரோக்கியமாக வாழ்ந்ததால் வைத்தியசாலைகளின் பயன்பாடுகள் இல்லாமல் போனது. வேலிகளுக்கு பதிலாக மதில்களும், மச்சு வீடுகளும் என மனிதன் வாழ ஆரம்பித்த போது கட்டிடம் அமைப்ப தற்கான இடத் தேவைக்காக வெட்டி எறிந்த மரங்களும், கட்டிடத் தேவைக்காக வெட்டப்பட்ட மரங்களுமாக பூமி வெட்ட வெளியாயிற்று. கட்டிடக் காடுகளாயிற்று. இயற்கையான உயிர்க்காற்று இல்லாமல் போனது. அதனால் நோயாளியானான். இலை வகை, உணவில் சேராததால் பலமிழந்து போனான். மூலிகைகளின் பயன் அறியாததால் மருந்துக் குளிசைகளை விழுங்கி மேலும் மேலும் உடலைப் பலம் குன்ற வைத்தான்.

இன்று எதிலும் அவசரம், எங்கும் அவசரம். வாழ்க்கைப் போராட்டம் என்று கூறிக் கொண்டு ஓடத் தொடங்கி விட்டான். முன் செல்பவனை இழுத்து விழுத்தி விட்டாயினும் தான் முந்தி ஓட வேண்டும் என்று ஓடுகிறான். பணத்தின் தேவை நன்கு உணரப்பட்டதால் , பணம் சேர்ப்பதற்காகப் பறக்கிறான். நீதி, நேர்மை, அறம், தர்மம் போன்ற உயர் பண்புகளை மறந்து எவ்வாறாயினும் பணம் சேர்த்துவிட ஓடுகின்றான். "பொருளிலார் பொருட்சேர்த்தல் முதற்கடன்" என்ற பாரதியின் கூற்றை எடுத்தாளுகின்றான். பழியின்றி பகுத்துணர்ந்து நீதி நெறிநின்று பொருள் சேர்க்கவே பாரதி கூறினான். தீர்க்கதரிசிகளின் கூற்றை தனக்குச் சாதகமாக்கித் திருத்தி எழுதுகின்றான். இந்த ஓட்டம் இவனை உடல் ஆரோக்கியத்தைப் பற்றி கருத்தில் எடுக்க அனுமதிக்கவேயில்லை. பணம் பணம் என்று பறக்கும் இவன் நோயில்லா வாழ்வின் அவசியத்தையும் அருமையையும் உணரவில்லை. நாப்பிளக்க பொய்பேசி நவநிதியம் தேடி, கோடிக் கணக்காய் பணம் வைத்திருப்பவன், நோயினால் அவஸ்தைப் படும் போது அப்பணம் அவனுக்கு சுகத்தைத் தரப்போவதில்லை, சந்தோசத்தையும் தரப்போவதுமில்லை. நோயில்லா வாழ்வும், சந்தோசமான வாழ்வும், பிற உயிர்களை நேசித்தலுமே நாம் தேட வேண்டிய சொத்துக்களும் உயர் பண்புகளுமாகும்.

இப்படியாக விரைந்து பறக்கும் மனிதன் விரைவுணவுக் கடைகளை (Fast food) நாடுகின்றான். அங்கு உணவுகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்பது பற்றி கருதிப்பார்ப்பதே இல்லை. அப்போதைக்கப்போது கிடைக்கும் உணவுகளை யெல்லாம் வயிற்றில் போட்டு வயிற்றை நிரப்புகின்றான். இன்று மலிந்து காணப்படும் நோய்களுக்கும் புதிது புதிதாய்த் தாக்கும் வியாதிகளுக்கும் இந்த விரைவுணவுகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம். இன்று பார்த்தால் வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு விரைவுணவுக் கடைகள் பெருகிவருகின்றன. அதே நேரத்தில் அதனருகில் மருந்தகங்களும் ஆரம்பிக்கப்படுகின்றன. இங்கே வாங்கி உண்ணும் உணவால் ஏற்படும் வியாதிகளுக்கு பரிகாரம் செய்ய அங்கே மருந்துக்குளிசைகள் விற்கப்படுகின்றன. சாதாரண தலையிடிக்கே மருந்து போடும் வழக்கம் வந்து விட்டது. தலையிடி நோயே அல்ல. ஒரு ஒவ்வாமையின் அறிகுறி. நோய் வரப்போகின்றது என்ற எச்சரிக்கை அவ்வளவு தான். அதற்கும் மருந்தா? அந்த மருந்து சாதாரண பலசரக்குகள் விற்கும் கடைகளிலும் விற்கப்படுகிறது. உணவு உண்ணும் போதும் அவை பற்றி ஆய்வதில்லை. மருந்து உட்கொள்ளும் போதும் அது பற்றி அறிந்து கொள்வதில்லை.

கண்ட கண்ட உணவுகளையும், மருந்துகளையும், தண்ணீர் வகைகளையும் போட்டு நிரப்ப வயிறு என்ன குப்பைக் கூடையா? சாதாரண தலையிடியோ காய்ச்சலோ வந்துவிட்டால் உடனே மருந்து எடுப்பதால் உடலில் வளரக்கூடிய நோயெதிர்ப்புச் சக்தி வளர்வதில்லை. அவற்றை சுரக்கும் சுரப்பிகளுக்கும் வேலையில்லாமல் போக, அவை செயலிழக்க, எடுத்ததற்கெல்லாம் குளிசை விழுங்கி விழுங்கி குளிசையில் தங்கிவாழ வேண்டிய நிலை வந்துவிட்டது. இன்று பார்த்தால் ஒவ்வொருவரிடமும் ஒரு Bag இருக்கும் அதற்குள் குளிசைகள் காணப்படும். அந்தக் குளிசைகளின் பயன்பாடுகள் பற்றி தனக்குத் தெரிந்த அரை குறை விளக்கத்தை கூறி அதுதான் சரியென வாதிடுவர். ஆனால் அக்குளிசைகளின் மூலம் என்னவென அறியமாட்டார்கள். அவை உட்கொள்வதால் ஏற்படும் எதிர் விளைவுகளைப் பற்றியும் சிந்திப்பதேயில்லை. அதற்கான நேரமும் அறிவும் அவர்களிடம் இல்லை.

பொதுவாக யுத்த வெற்றியுடன் நாட்டின் வளங்களும், சொத்துக்களும், செல்வங்களும் கொள்ளையிடப்படுவது நாம் அறிந்த உண்மை. அறிவாலயங்களைத் தீயிட்டு கொழுத்துவதும் நாம் வாழ்வில் கண்டவை. அவ்வாறே ஆங்கிலேயன், போத்துக்கேயன், ஒல்லாந்தனால் எமது நாடு வெற்றி கொள்ளப்பட்டவேளைகளில் எமது அரும்பெரும் சொத்துக்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு போய்விட்டனர். எமது முன்னோர் அறிவாலும், அவதானத்தாலும், அனுபவத்தாலும், ஆராய்ச்சிகளாலும் கண்டுபிடித்துக் குறித்து வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளைக் கொள்ளை யிட்டுச் சென்றனர். பிரான்ஸ் தேசத்தில் **கீழைத்தேச சுவடிகள் காப்பகம் என்றும், பாண்டிச்சேரி ஆய்வு நிறுவனம்** என்றும் வெளிப்படையாகவே விளம்பரப்படுத்திக் கொண்டு பேணிக்காத்து வருகின்றார்கள். இந் நூல்களில் குறிப் பிட்டிருக்கும் மூலிகை விளக்கங்களைக் கொண்டே, விஞ்ஞான ஆய்வுகளும் விளக்கங்களும் உலகுக்குக் கூறுகின்றார்கள். எமது மக்களும் உண்மை நிலை அறியாது நாம் வாழ்ந்த வாழ்வின் பெருமை அறியாது எல்லாவற்றுக்கும் வெள்ளைக்காரனை நம்பிக்கொண்டும், துதித்துக் கொண்டும் வாளாவிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிச் செல்லும் போது கொட்டிச் சிந்தப்பட்ட வாகடங்கள், சித்த மருத்துவ நூல் களை ஒன்று சேர்த்து அலசி ஆய்ந்து சித்த மருத்துவம் சிங்கள தேசத்தில் மிகச் சிறப் பாக வளர்ந்து வருகின்றது. "சித்தாலேப" "தந்தமுத்த" "சுக்கிரி விக்கி" எனப் பல பெயர் களில் வியாபாரமாகப் பெருக்கி வருகின்றனர். நாங்கள் - தமிழர்கள் இன்னமும் யாரிடமும் எப்ப தருவார்கள், எது தருவார்கள் என வேண்டுவதற்காகக் காத்தி ருக்கிறோமே தவிர, உற்பத்தி பண்ணவும் அறிவாற்றலை விரிவு படுத்தவும் தயாராகவில்லை.

போத்தலில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பழரசங்கள், குடிதண்ணீர்கள் என்பன உற்பத்தி செய்யும் முதலீட்டாளன், தனது வருமானம் கருதி, இவை கெடாம லிருக்க - நீண்ட நாட்கள் பாதுகாத்து வைத்து விற்பனை செய்வதற்காக போதுமான அளவுக்கும் மேலாக இரசாயன உப்புக்களைக் கலந்து விடுகின்றான். அதனை அருந்தும் நுகர்ச்சியாளர்கள் உணவு, நீருடன் இரசாயன உப்புக்களையும் சேர்த்தே உள் எடுத்துவிடுவதால் இவ்விரசாயனங்கள் உடல் கூறுகளில், உடலுறுப்புக்களில் உண்டாக்கும் தாக்கங்கள் நாளடைவில் ஒருவனை மரணத்துக்குள்ளாக்கி விடு கின்றது. உடலில் காணப்படும் தேமல், படை, சொறி, முட்டு, ஆஸ்த்மா, தொய்வு, காசநோய், கான்சர் எனப் பல பல புதுப்புது தீர்வு காண முடியாத வருத்தங்களுக் கெல்லாம் காரணமாய் அமைவது இவ் விரைவு உணவுகளே, அத்துடன் சேர்த்து உண்ணப்படும் இரசாயன உப்புக்களே. உணவில் சுவை சேர்ப்பதற்காக கலக்கப்படும் Sauce, வினிகர், அஜினோமோட்டோ போன்றவை உணவை ருசியாக்கினாலும், நச்சுத்தன்மை கொண்டவையே. நோயின்றி வாழ வேண்டுமானால் ஒருவன் இயற்கை உணவுமுறைக்கும், மூலிகை மருத்துவ முறைக்கும் மாற வேண் டும். சித்த வைத்தியத்தின் தாரக மந்திரம் "Motto" உணவே மருந்து! மருந்தே உணவென்பதாகும்.!! அளவறிந்து, காலமறிந்து, சுத்தமறிந்து, உண்மைத்தன்மை அறிந்து சம உணவு எடுத்துவரும் ஒருவனை நோய் அணுகுவதே இல்லை. தவிட்டுடன் கூடிய அரிசி, பருப்பு வகை, கிழங்குவகை, தானியங்கள், கீரை வகை என்பன நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். வாரமொரு நாளாவது இலைக்கஞ்சி தயாரித்து வீட்டில் உள்ள அனைவரும் பருக வேண்டும். ஒடியல் கூழ் ஒரு சிறந்த ஔடதம். கூழ் பருகுவதால் நோய்கள் அகன்று உடல் வலுவடைவதுடன் ஒன்றுகூடி இருந்து அருந்துவதால் சகோதரத்துவம், அன்பு, சமத்துவம், விட்டுக்கொடுத்தல், பகிர்ந்துண்ணல் போன்ற வாழ்வின் விழுமியங்களும் வளர்கின்றன.

தினமொரு கீரை உணவில் சேர்ப்பதால், இரும்பு, அயடின், தாது உப்புக்கள் உடலில் சேர்வதுடன் நார்த்தன்மை மிக்க இவ்வுணவு குடலில் உள்ள கழிவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவாக வெளியேற்றவும் உதவுகின்றது.

தினமொரு பழம், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் போன்றவற்றை அளவறிந்து (ருசிக்காக அல்ல) உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாரமொரு தடவையாயினும் முளைகட்டிய பயறு, கடலை போன்ற தானியங்களை உணவில் சேர்க்க வேண்டும்.

உடலினை உறுதியாக்கவும், மனதை வலிமையாக்கவும், மன அடக்கத்துடனும், உடலுள்ளுறுப்புக்கள் சீராகச் செயல்படத் தூண்டவுமாக தினமும் யோகாசனம் செய்து வரல் வேண்டும்.

இப்படியாக நம் முன்னோர் எமக்களித்துச் சென்ற வாழ்வு முறையை இனங்கண்டு, ஏற்று அதன்படி ஒழுகி - வாழ்ந்து தேகாரோக்கியத்துடனும், வலிமையுடனும் நோயில்லா வாழ்வு வாழப் பயில்வோம்.

பிரம்மன்

---

பொன், மண், பெண் என்பவற்றை அடைய மிகக் கேவலமான வழிகளைப் பின்பற்றுபவர்களாலேயே இவ்வுலகம் நிரம்பி வழிகின்றது. ஆனால் உண்மையான தைரியம் நல்லொழுக்கம் விவேகம் உள்ளவர்களை ஏமாற்ற முடியாது. வெல்வதும் முடியாது. உலகம் என்ன சொல்கிறதோ சொல்லட்டும் என தன் கடமைகளைச் செய்பவன்தான் வீரன். ஊரார் பாராட்டட்டும் அல்லது பழிக்கட்டும். செல்வம் சேரட்டும் அல்லது வறுமை வரட்டும். மரணம் இன்று வரட்டும் அல்லது பல வருடங்கள் கழித்து வரட்டும். உண்மை பேசுவதை விட்டுவிடாதே! மனிதனுக்கு சேவை செய்வதை மறந்து விடாதே! பலவீனர்களுக்கு அன்பு காட்டத் தயங்காதே! உன் வழி சரியென உணர்ந்து ஏற்றுக்கொண்டு உழைத்துக் கொண்டே இரு. உதவிக்கு வர முழு உலகமும் உண்டு. புரியகொஞ்சம் காலம் எடுக்கலாம் அவ்வளவே.

-வழிப்போக்கன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

# ஔவையார்

1. ஔவையார் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவராவார்.
2. சங்க இலக்கியங்களில் அவர் பாடிய பாடல்கள் பல உள்ளன.
3. அவர் ஆத்திசூடி, ஞானக்குறள், அசதிக்கோவை எனப்பல பாடல்களைப் பாடியுள்ளார்.
4. அவற்றிலே ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் அகரத்தில் தொடங்கி சூத்திரம் போல அமைந்துள்ளன.
5. இவர் விநாயகரிடத்திலும் முருகனிடத்திலும் மிகுந்த பக்தி கொண்டவர்.
6. இதனால் "பாலுந் தெளிதேனும்......." எனும் பதிகத்தைப்பாடி சங்கத்தமிழ் மூன்றையும் பெற்றுள்ளார்.
7. ஒருமுறை இவர் திருக்கைலாய மலைக்குச் செல்ல விரும்பிய போது விநாயகர் தனது துதிக்கையால் அவரைத் தூக்கி திருக்கைலாய மலையில் சேர்ப்பித்தார்.
8. இறைவனிடம் நாரதர் கொடுத்த மாங்கனியைப் பெறுவதற்காக முருகன் சண்டை பிடித்து கோபம் கொண்டு பழநி மலைக்குச் சென்ற போது ஔவையார் அவரைப் புகழ்ந்து பாடி அவரின் கோபத்தைத் தணித்தார்.
9. இவர் சிறுவர்களுக்காக நல்ல பல அறிவுரைகள் இயற்றியுள்ளார். அவை இன்றும் என்றும் அழியாப் புகழ் பெற்றவையாகும்.
10. அத்தோடு சைவசமயத்தை வளர்க்க பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
11. அதியமான் எனும் வள்ளல் பெருந்தகை கொடுத்த நெல்லிக்கனியை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தார் எனசொல்லப்படுகிறது.
12. தமிழ் உள்ளவரை ஔவையாருடைய நூல்கள் யாவும் பெருமையும் சிறப்பும் பெறும் என்பதில் ஐயமில்லை.
13. ஒரு சமயம் மன்னரைப் புகழ்ந்து பாடும் வேளையில் "வரப்புயர" என்று மட்டும் கூறியமர்ந்த சிறப்பு அறிஞர் இவராகும். உட்பொருளை ஔவையார் விளக்க மகிழ்ந்த அரசர் நிறைய பரிசில் வழங்கிப் பாராட்டியதாகவும் வரலாறு உண்டு.

செல்வி . ஸ்ரீ . கதிர்விழி
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03

# நம்பிக்கையே நம்மை உயர்த்தும்

ஒரு வாரம் மழைபெய்த அடையாளம் கொஞ்சமுமில்லை. நிலம் காய்ந்து இருந்தது. கீழ்வானம் சிவந்து சூரியன் பவனிவந்ததால் வயல்நிலம் காய்ந்து புழுதி கிளம்பியிருந்தது. வயலிலே விதைக்கப்பட்ட நெற்கள் வீணாகியிருந்ததைக் கண்ட பிரபுவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வானத்தை அண்ணாந்து பார்த்த போது மழைக்கான அறிகுறி எதுவுமே தென்படவில்லை. மக்கள் மனம் போனபடி மரங்களை வெட்டி இயற்கைச் சமநிலையைக் குழப்பினால் மழை எவ்வாறு பெய்யும் என வேதனைப்பட்டான். வயலிலே நெல் விளைந்தால் அதைவிற்று தந்தையின் வைத்திய செலவைப் பார்க்க எண்ணியிருந்தான். அந்த எண்ணம் தவிடுபொடியாகிவிட்டதை எண்ணிய போது அவனால் அழாமலிருக்க முடியவில்லை. அழுது கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டின் முன்வாசல் கதவைத்திறந்து அப்பா படுத்திருந்த இடத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டான். பிரபுவின் அப்பா மாணிக்கம் இருமிய போது அவனின் கண்களில் கண்ணீர் மேலும் பெருகத் தொடங்கியது. கடந்த பல மாதங்களாக கொடிய இருமல் அப்பாவை வருத்திக் கொண்டிருக்கின்றது. நடந்ததை எண்ணிக் கலங்குவது கோழைத்தனம் இனி அடுத்த நடவடிக்கையாக என்ன செய்யலாம் என எண்ணிக் கொண்டிருந்த போது பிரபுவின் தங்கை வாசுகி அழைத்தாள். “என்னம்மா” எனத் தங்கையை நோக்கினான் பிரபு. “இண்டைக்கு அக்காவீட்ட கூட்டிக் கொண்டு போறனெண்டு சொன்னனியல்ல” எனக் கேட்ட வாசுகியின் கேள்விக்குப் பிரபு உடனே பதில் கூறவில்லை. வாசுகி மீண்டும் பிரபுவை நோக்கிக் கேட்டாள். “இப்ப நேரமில்ல பிறகு பாப்பம்” எனக் கூறிவிட்டு தலையிலே கைகளை வைத்து யோசித்துக் கொண்டிருந்தான்.

வாடகைக்கு ஆட்டோ எடுத்து ஓடி உழைக்குமாறு நண்பன் ராமு கூறிய செய்தி பிரபுக்கு ஞாபகத்திற்கு வந்தது. “ராமுவுடன் தொடர்பு கொண்டால் வாடகைக்கு ஆட்டோ வாங்கித் தருவான் அதை ஓட்டி வாற பணத்தில ஆட்டோ வாடகைக் காசைக் கொடுத்துவிட்டு எஞ்சிய பணத்தை அப்பாவின் வைத்திய செலவுக்காகச் சேர்க்கலாம்” என எண்ணினான். “வாசுகி நானொருக்கா ராமு வீட்ட போட்டுவாறன் அப்பாவக் கவனமாப் பாத்துக்க” என வாசுகியை நோக்கிக் கூறிவிட்டு பொடி நடையாக நடந்து சென்றான். “என்ன பிரபு இந்தப்பக்கம்” ராமு கேட்ட போது “வாடகைக்கு ஆட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கித் தாறனெண்டு சொன்னனி அதுவிசயமா பேசிட்டுப் போகலாமெண்டு வந்தனான்." "ஆ" சரி பிரபு நாளைக்கு வா கூட்டிக் கொண்டு போறன்" என ராமு பிரபுவைப் பார்த்துக் கூறியதும் "சரி ராமு நான் போட்டு வாறன்" எனக் கூறிவிட்டு மீண்டும் கால்நடையாக வீட்டை நோக்கி பிரபு நடக்க ஆரம்பித்தான்.

இருள் எங்கும் சூழ்ந்து கொண்டது மாணிக்கத்தினருகே பிரபு உறங்கிக் கொண்டிருந்தான். "கம் கம்" என மாணிக்கம் இருமிய போது பிரபு விழித்துக் கொண்டான். "என்னப்பா செய்யுது" என பதற்றத்துடன் கேட்டான். "ஒண்டுமில்ல கொஞ்சம் தண்ணிதா" எனக் கரகரத்த குரலிலே கேட்டான் மாணிக்கம். தண்ணீரைக் கொண்டு வந்து தந்தைக்குக் குடிக்கக் கொடுத்துவிட்டு உறங்கத் தொடங்கினான். ஆனால் பிரபுவுக்கு உறக்கமே வரவில்லை. வயல் விதைச்சு அதில விழைந்த நெல்லை விற்று மூத்த தங்கைக்குத் திருமணம் செய்து வச்சனான். ஆனா இந்த முறை கிடந்த நெல்லையும் வயலில் விதைச்சிட்டன். மழை இல்லாததால் அந்த நெல்லும் வீணாப் போட்டுது" என எண்ணி வருந்தினான். எனினும் அவன் சோர்ந்து விடவில்லை.

பொழுது மெல்லெனப் புலரத்தொடங்கியது. நித்திரைவிட்டெழுந்த பிரபு உடலை ஒருமுறை முறுக்கி முறிவெடுத்துவிட்டு முகத்தைக் கழுவினான். மாணிக்கத்திற்கு குளிக்க வார்த்து உடைகளை மாற்றிவிட்டு வாசுகியை தந்தைக்கு உணவை ஊட்டிவிடுமாறு கூறிவிட்டு ராமு வீட்டிற்குப் புறப்பட்டான். ராமு பிரபுவை அழைத்துக் கொண்டு சென்று அவனுக்கு வாடகைக்கு ஆட்டோவைப் பெற்றுக் கொடுத்தான். ராமுவிற்கு நன்றி கூறிவிட்டுப் பிரபு மகிழ்ச்சியோடு ஆட்டோ ஓட ஆரம்பித்தான். ஒரு வாரமாக ஆட்டோ ஓட்டிக் கொஞ்சம் பணம் சேர்த்திருந்தான். எனினும் அவனது மகிழ்ச்சி நிலைக்கவில்லை. ஒருநாள் பிரபு ஆட்டோ ஓட்டிக் கொண்டு போகும் போது விபத்து ஒன்றுக்கு ஆளாகி இரண்டு கால்களையும் இழந்து விட்டான். அவனுக்கு என்ன செய்வதென்றெ தெரியவில்லை. உலகமே இருண்டு கிடந்தது போலத் தெரிந்தது. அம்மா போனதிலிருந்து அம்மாவிற்கு சமமாகவிருந்து தன்னை வளர்த்த அண்ணா இப்படியான நிலைக்கு ஆளாகிவிட்டாரே என வாசுகி கலங்கினாள். பிரபு தனது நம்பிக்கையைக் கைவிடவில்லை தனக்கு இரண்டு கால்கள் போனாலென்ன மனதிலே அளவுக்கதிகமாக நம்பிக்கையிருக்கிறது அதுபோதும். அதுவே என்னை உயர்த்தும் என எண்ணிக் கொண்டான்.

பிரபு அழகிய கைவேலைப் பொருட்களைச் செய்யத் தொடங்கினான். அதை வாசுகியிடம் கொடுத்து கடையிலே விற்று வருமாறு கூறினான். இவ்வாறு அழகிய புதிய முறையிலான பல பொருட்களை அவன் செய்து வந்தான். வாசுகியும் அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைக் கடையில் சென்று விற்று வந்தாள். ஒரு நாள் பிரபு கொடுத்த கைவேலைப் பொருட்களை விற்பதற்காக வாசுகி கடைக்குச் சென்று கொண்டிருந்த போது இரு நபர்கள் அப்பொருட்களைப் பார்த்துவிட்டு பிரபுவிடம் வந்து தமது நிறுவனத்திற்கு இவ்வாறான பொருட்களைச் செய்து தருமாறு கூறினார்கள். பிரபுவிற்குப் பெருமகிழ்ச்சி. உடனே சம்மதித்து விட்டான். அந்த நிறுவனத்துடன் இணைந்து உழைக்கலானான். இதன் மூலம் அவன் நல்ல நிலையை அடைந்து விட்டான். அப்பாவின் நோயையும் மாற்றினான். வாசுகியையும் ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தான்.

இன்று பிரபு ஒரு நல்ல நிலைக்கு வந்துவிட்டான். தனது தந்தை மாணிக்கத்துடன் சந்தோசமாகவிருந்தான். எனினும் பிரபுக்கென்று ஒரு துணை அமையவில்லை. இருந்தாலும் தனது ஒவ்வொரு செயற்பாட்டையும் நம்பிக்கையின் பாதையிலேயே செயற்படுத்தத் தொடங்கினான்.

*- முற்றும் -*

ஜெயச்சந்திரன் ஸோபனா
நாவற்குழி தெற்கு கைதடி. A/L (2013),
யா / நாவற்குழி மகா வித்தியாலயம்.

---

மனிதர்களுக்கு ஆசை இருக்கும் வரை சச்சரவும் இருக்கும். சச்சரவு உள்ளவரை சண்டையும் இருக்கும். மனித ஆசை நியாயமானதும் அடையத் தகுதியுடைய ஆசையாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளாத வரை சண்டை சச்சரவுகள் ஓய்போவதில்லை. ஆசை இருக்கவேண்டியதே. பேராசை சில சந்தர்ப்பங்களில் மன்னிக்கப்படலாம். ஆனால் பேயாசை கூடவே கூடாது. தகுதியுடையவனாய் இரு! பின்னர் ஆசைப்படு! தலைவனாக வாழ விரும்பினால் முதலில் தொண்டனாக வாழ்ந்து அறிந்து கொள்.

– வழிப்போக்கன் –

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# தந்தை தாய் பேணல்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற கூற்றுக்கு இணங்க நாம் அன்னையையும், தந்தையையும் கண்கண்ட தெய்வங்களாக போற்ற வேண்டும். பெற்றோரின் நலன்களினை கவிஞர்கள் நல்லறிஞர்கள் மட்டுமன்றி பெரியோர்கள் முதல் சிறுவர்கள் வரை தாய் தந்தையரை போற்றி வருகின்றனர். ஒரு தாயானவள் எம்மிடம் காட்டும் அன்பு, பாசம், அரவணைப்பு போன்று மற்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது.

நாம் பிறந்தவுடன் அன்னையின் அரவணைப்பிலே வளர்ந்து வருகின்றோம். அன்னையானவர் எம்மை எவ்வாறு வழிப்படுத்துகின்றாரோ தந்தையானவர் எவ்வாறு இரக்கம் காட்டுகின்றாரோ அது போலவே எமக்கு வேறு யாரிடமிருந்தும் அரவணைப்பினைப் பெற முடியாது. "தாயிற் சிறந்த கோவிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்ற கூற்றானது தாயை விட மேன்மையான கோயில் இல்லை தந்தையின் சொல்லுக் கீடாக மந்திரம் இல்லை இவ்வாறு தாய், தந்தையின் பெருமைகளை காணலாம்.

மண்ணில் பிறக்கின்ற அனைத்து ஜீவன்களும் தாய், தந்தையின் அரவணைப்பில் வாழ்கின்றன. தாய் எவ்வளவு தான் கருணை காட்டினாலும் அவர்களின் முதுமைக் காலங்களில் தாயினை மதியாது, தாயின் சொற்படி நடக்காது தாயினை சொல்லத் தகாத சொற்களால் பேசுதல் இவ்வாறு சிலர் வாழ்கின்றனர். இவ்வாறன மனிதர்கள் முதியோராகி தன் தாய், தந்தைக்கு மேலாக ஏற்பட்ட கலகத்தை விட கலக்கமடைகின்றனர். இவ்வாறு தாய், தந்தையின் சொற்களினை அறச் சொற்களாக மதித்து நடக்கப் பழகல் வேண்டும்.

ஒரு குழந்தையானது நல்ல பிள்ளையாகவும், தீய பிள்ளையாகவும் வாழ் வதற்கு பெற்றோர்களே காரணமாக இருக்கின்றனர். ஒரு சிறந்த வழிப் படுத்தலை சிறிய வயதிலே பிள்ளைகளுக்கு கொடுப்போமாயின் அவர்கள் சிறந்த நற் பிரஜை களாக வாழ்வார்கள். "நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என கவிஞர்கள் கூறி வைத்திருக்கிறார்கள்.

சிறிய வயதிலே சிறந்த கருத்துக்களை பெற்றோர் எடுத்துக் கூற வேண்டும். எடுத்துக் காட்டாக வாழ்ந்தும் காட்ட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா..." என்ற முதுமொழியானது சிறிய வயதிலே சிறந்த ஞானத்துடன் வாழ வேண்டும். சிறிய வயதில் திருந்தாவிட்டால் அவர்களை திருத்துவது மிக கடினம் இள வயதில் நற் பழக்கவழக்கங்களுடன் வாழப் பழக வேண்டும்.

நாம் குருவை சென்றடைவதற்கு முன்னரே தந்தை, தாயிடம் ஞானத்தைப் பெற்றுக் கொள்கின்றோம். ஒரு தாயானவள் ஒரு குழந்தையை பெற்று வளர்ப்பது என்பது ஒரு கடினமான காரியமே. பத்து மாதம் சுமந்து தன் மடியிலே வைத்து அரவணைத்து வளர்த்து குருவினை சென்றடைவது வரையில் கற்றல் செயற்பாடானது மிகவும் நுண்ணியமாக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான கற்றல் செயற்பாடானது குழந்தை கருவுற்று தாயின் கருவறையிலே குழந்தைக்கு தேவையான ஞானமானது போதிக்கப்படுகின்றது குழந்தைகள் தாய், தந்தையை பேண வேண்டும்.

ஒரு மனிதனின் வாழ்வானது காலங்கள் வரையறுத்து இருந்தாலும் மனிதராக பிறந்த அனைவரும் பெற்றோரை மதித்து நடக்க வேண்டும். சிறிய வயதிலிருந்து இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் எம்மை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரினை நாம் என்றும் மறக்க இயலாது சிலர் தாய். தந்தையார் முதியோர்களாக ஆகியவுடன் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி விடுகின்றனர். இவ் முதியோர்கள் இல்லாமல் விட்டால் நாம் இல்லை என்பதனை அவர்கள் ஒரு போதும் நினைத்துப் பார்ப்பதில்லை. முதியவர்களாக இவர்கள் படும் இன்னல்களை நாம் நீக்கி வைக்க வேண்டும்.

எந்த ஒரு குடும்பத்திலும் தாய். தந்தையாரைக் காணலாம் இவர்களின் பெருமைக்கு குழந்தைகள் காரணமாக இருக்கின்றனர். குழந்தையானது மண்ணில் வந்து தோன்றும் போதே பெற்றோர்களின் பெருமைகளை காக்க வேண்டும். குழந்தையானது படித்து நல்ல நிலைக்கு வந்து மற்றவர்களால் மதிக்கப்படுவதால் அவர்களது பெற்றோர்கள் போற்றப்படுவார்.

ஔவையார் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என கூறி வைத்துள்ளார். அன்னையின் மகத்துவத்தினை கற்கும் குழந்தைகளாகிய நாம் இள வயதிலிருந்தே நல்ல பழக்கவழக்கங்களையும் கற்று சிறந்த நற்பிரஜைகளாக வாழ வேண்டும்.

பெற்றோரது சொற்களைக் கேட்டு நாம் அறிவில் உயர்ந்தவர்களாக வாழ்வோமாயின் எம்மை விட எமது பெற்றோர் பெரிதும் மதிக்கப்படுவர் இவ்வாறு பெற்றோர்கள் போற்றப்பட வேண்டுமாயின் நாம் சிறந்தவர்களாக வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தந்தை, தாயை மட்டுமன்றி பெரியோர்களையும், மூத்தோர் களையும் மதித்து நடக்க வேண்டும் வாழ்க்கையானது சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு தந்தை, தாயின் சொற்படி நடக்க வேண்டும். எந்த ஒரு பெற்றோர்களும் தமது பிள்ளைகள் சிறந்த வழியில் வாழ்வதையே விரும்புவார். இவ்வாறு அனைவரும் தந்தை, தாயின் சொற்களினை கேட்டு அவர்களையும் பாதுகாத்து கொள்ள வேண்டும். பெற்றோர்கள் சிறந்த முறையில் போற்றப்படுவாராயின் கல்வியினூடாகவும் தாய், தந்தையரது பெருமைகளை வளர்க்க முடியும். நாம் மட்டுமன்றி அனைவரும் தாய், தந்தையை பேணி வாழ வேண்டும்.

*- நன்றி -*

**செல்வன் ப.லக்சன்**
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 யோகக்கலை பயில்வோம் வாங்க...

சுகமாகவும், புகழுடனும், சகல வசதிகளுடன் சந்தோசமாகவும் அமைதியாக நீண்ட காலம் உயிர்வாழ வேண்டும் என்பது உலகிலுள்ளவர்கள் அனைவரது விருப்பும் எதிர்பார்ப்புமாகும். ஆயினும் இவையாவும் ஒருவர் சுகமாக வாழ்ந்தாலே அனுபவிக்க முடியும் என்பதால் சுகத்தையும் மன வளத்தையும் தேடிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனைய எல்லாம், முயற்சியால் அடைந்துவிட முடியுமாயினும் சுகமும் நலமும் ஒழுங்கான பயிற்சிகளாலும், நற் பழக்க வழக்கங்களாலும், கட்டுப்பாடான உணவு முறைகளைப் பின்பற்றுவதாலும்தான் அடைய முடியும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறப்பட்டுள்ளதன் அர்த்தம் இதுவாகத்தான் இருக்கும். ஒருவன் எவ்வளவு புறச் செல்வங்கள் நிறைந்து வசதிகள் மிகுந்து ஆடம்பர வாழ்வு வாழ்ந்தாலும் நோயாளியாக இருந்தால் அவற்றை அனுபவிக்க முடியாமல் போய்விடும். அதனால்தான் முன்னோர்கள் நோயில்லா வாழ்வு வாழப் பழகிக் கொண்டிருந்ததுடன், கற்றும் தந்திருக்கிறார்கள். பணம் தேடிப் பறக்கும் இவ் அவசர உலகில் சுகம் தேடி வாழ நேரம் ஒதுக்க யாரும் முன்வருவதில்லை. அதனாலேயே வைத்தியர்களும், வைத்தியசாலைகளும், புதுப்புது மருந்து மாத்திரைகளும் அவற்றை விற்பதற்கு மருந்தகங்களும் அதிகம் அதிகமாய் தேவைப்படுகின்றது. நோய் வரு முன்னர் தடுப்பது, நோய் வந்த பின் தவிப்பதை விட மேலானது அல்லவா.

மனித வாழ்வு வெறுமனே உடல் வளர்ச்சியுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. உள வளர்ச்சியுடனும் தொடர்புடையது. உடல் வலுவடைவதுடன், உளமும் வலுவடைய வேண்டும். உடலுடன் உள்உறுப்புகளும் வலுவடைய வேண்டும். நன்றாகத் தொழிற்பட வேண்டும். உடலுள்ளுறுப்புக்கள் கணையங்கள், சுரப்பிகள் போன்றவை நன்றாகத் தொழிற்பட்டால் நோயெதிர்ப்புச் சக்தி உடலுள் வளரும். நோய்க்கிருமிகள் உடலைத் தாக்குவது தடைப்படும். சற்று ஆழமாக நோக்கினால், சில காலங்களுக்கு முன்னர், நுளம்புகளுக்கெதிராக வீசப்பட்ட D.D.T என்னும் மருந்துக்கு நுளம்புகள் இசைவாக்கம் பெற்று விட்டதால் மலத்தியோன் என்னும் நச்சுக்கூடிய நுளம்பு கொல்லி பாவிக்கப்படுகின்றது. இதற்கும் நுளம்பு தன்னுள்ளே எதிர்ப்புச் சக்திகளை வளர்த்து விடும்போது அவற்றை அழிக்க பிறிதொரு நச்சுமருந்தை தெளிக்க வேண்டிய தேவை ஏற்படும். அவ்வாறில்லாமல் நுளம்புகள் மலேரியா நோயைப் பரப்பினாலும், மலேரியா நோய்க்கெதிரான சக்தியை உடலில் வளர்த்துக் கொள்வதன் மூலம் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேரியாவிலிருந்து பாதுகாக்கப்படுகின்றான். அவ்வாறே ஒவ்வொரு நோயையும், நோய்க் கிருமிகளையும் எதிர்க்கும் ஆற்றலை உடலினுள் வளர்த்துக் கொள்வதன் மூலம் ஒருவன் நோயில்லா வாழ்வு வாழ முடியும். இவ்வாழ்வு முறையைக் கற்றுத் தரும் கலை தான் யோகக்கலை. மிகுந்த கட்டுப்பாடுகளற்ற எல்லோராலும், எல்லா வயதினராலும் பயிலக்கூடிய இலகு நெறி. தனது உடலின் சதைத் திரட்சிகளை வளர்த்துக் காண்பிக்க "ஜிம்" என்றழைக்கப்படும் உடற்பயிற்சி மையங்களுக்குச் செல்லும் ஒருவனுக்கு உடல் உள வளத்தைப் பேண யோகா பயிற்சி நிலையங்களுக்குப் போக நேரம் ஒதுக்க முடியவில்லை. இறைவன் ஒவ்வொரு நாளும் 24 மணித்தியாலங்களை வெகுமதியாகத் தந்து கொண்டிருக்கிறார். இலகுவாகுவும், இனாமாகவும் தொடர்ந்தும் கிடைப்பதாலும். நேரத்தின் பெறுமதியை உணர்பவர்களாக இல்லை. புறச்சந்தோசங்களைத் தேடி அலையும் மனித குலம் உள்ளிருக்கும். சந்தோசத்தைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. அவ்வாறு நேரம் இல்லை என்று கூறுபவர்களுக்குக் கூட யோகா எந்த வேளையிலும் பயிலமுடியும். வயிற்றில் உணவில்லாத நேரம் எதுவோ அவ்வேளைகளில் அச்சமின்றி யோகா பயில்வோம். அச்சந்தர்ப்பதிலும் கூட யோகாவைக் காலையில் பயில்வதால் பித்தநோய்களும், நடுப்பகலில் பயின்றால் வாத நோய்களும் மாலை நேரத்தில் பயின்றால் கபம் - சளிநோய்களும் குணமாகும் எனவும் விளக்குகின்றது. சித்த மருத்துவமும், மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்களை பித்தம், வாதம் கபம் என்ற பிரிவுகளுக்குள் அடக்கியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. யோகாவும் சித்த மருத்துவமும் இணைந்து மனிதர்களைச் சுகமாக வாழவும் நோய் வராமல் இருக்கவும் வழிகளைக் கற்றுத் தந்திருந்தும் கூட, பின்பற்றப்படாமல் போவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். உடற் பயிற்சிகளின் போது சக்தி வெளியேற்றப்பட, யோகப் பயிற்சியின் போது சக்தி உள்வாங்கப்படுகின்றது. உடற்பயிற்சி வெறும் சதைவளர்ச்சியை ஏற்படுத்துவது யோகாப்பயிற்சியால் வளர்த்தெடுக்கப்படும் நரம்பு மண்டலங்களோ ஞாபகசக்தியை அதிகரிக்கும், நோயெதிர்ப்பை வளர்த்தெடுக்கும், உற்சாகமாகச் செயல்பட வைக்கும். இளமைத் தோற்றத்தைத் தரும், மன அடக்கத்தையும் சுய கட்டுப்பாட்டையும் வளர்த்தெடுப்பதன் மூலம் பிறரை வசியப்படுத்தக் கூடிய பயன்களைத் தரக்கூடிய யோகாப்பயிற்சியை எவ்வயதினரும் பழக முடியும். ஆதலால் யோகாவைப் பயின்று பார்ப்போம் எனும் மன விருப்புடன், பெருங்கடலாகிய யோகாவினை அவசரகாலத்து வாழ்வுக்கு ஏற்றவாறான சில யோகாப்பயிற்சிகளை அறிந்து பயில்வோம்.

உடல், உள, ஆன்மீக சமுதாய ஆரோக்கியத்தைப் பேணிக் காத்து வரும் கலையாகிய யோகக்கலை எமது பழம் பெரும் சொத்து. எமது ஞானிகளும் யோகிகளும் அனுபவத்தாலும், ஆராய்ச்சிகளாலும், அவதானிப்புக்களாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்துதந்த, இக்கலையின் சொந்தக்காரர் சைவசமயிகளாகிய நாம் என அறியும் போது உளம் பெருமிதம் அடைகின்றது. ஆனால் இன்று இக்கலை கைவிடப்பட்டு, அல்லது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சொல்லப்படாமல் விட்டுவிட, இக்கலையின் தொன்மையையும், அது தரும் சுகங்களையும் அது கொண்டிருக்கும் வாழ்வியல் உண்மைகளையும் அறிந்து மேல் நாட்டவர்கள் பின்பற்றி வருகின்றார்கள். 15000 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த இக்கலையானது செலவற்ற மருத்துவமாக மட்டுமல்ல, நோய்வராமல் தடுக்கும். ஆரோக்கியம் பேணும் வல்லமைமிகு அறிவாகவும் போற்றி பேணி வருகின்றனர்.

ஹதயோகம், ராஜயோகம், லயயோகம், மந்திரயோகம், வாசியோகம், குண்டிலினியோகம் எனப்பல பிரிவு கொண்ட இக்கலையின் முதலிரு யோகங்களும் சேர்ந்தே உடல், உள ஆன்மீக சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் அட்டாங்க யோகமாகும். இவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என வகுக்கப்பட்டுள்ளன. எண்பத்து நான்கு லட்சம் வகையான பயிற்சி ஆசனங்கள் ஆரம்பத்தில் கைக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், தற்போது 84 ஆசனங்களே பின்பற்றப்பட்டு வந்து தற்போது அட்டாங்க யோகங்களாகிய எட்டுயோகப்பிரிவுகளின் 18 ஆசனங்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. அவசர உலகில் மனிதனின் நேரம் இன்மை, ஆர்வம் இன்மை போன்ற காரணங்களால் மனித உடல் உள வளத்திற்கு தேவையென கருதப்படும் இப்பதினெட்டாசனங்கள் பின்பற்றப்படுகின்றன.

இயமமானது பேச்சு, செயல், நினைவாலும், எவ்வுயிரையும் துன்புறுத்தாமல் இருத்தல், பிறர் பொருளைக் கவராதிருத்தல். பிரமச்சாரியத்தைக் கடைப்பிடித்தல் (அளவோடு உடலுறவு கொள்ளல்) உண்மையை அனுஷ்டித்தல், அறிமுகமற்றவர் தருகின்ற எப்பொருளையும் பெற்றுக் கொள்ளாதிருத்தல் என 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு செய்தியையும் ஆழமாக புரிந்து கொண்டால் இன்றைய வாழ்க்கைக்கு அவை எவ்வளவு துணை புரிகின்றன என்பது தெளிவாகும்.

“நியமம்” உடல் உளத்தூய்மையாக இருத்தல். நல்ல பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளல், பிற உயிர்கள் மீது அன்பு செலுத்தல், திருப்தி காணல் இறைவழிபாடு என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகளில் அமைந்துள்ள செயற்பாடுகளை அவதானித்தால் மனித வாழ்வு பூரணமடையவும், சந்தோஷமாகவும், சாந்தமடையவும் போதுமான அளவு அறிவு அதனுள் அடக்கப்பட்டுள்ளதை அறிய முடியும். இந்த இரண்டும் யோகாப் பயிற்சிக்கு மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா செயற்பாடுகளுக்கும் தேவையான தயார்ப்படுதலுக்கான நெறிகளாகும். இவ்விரு எளிய வாழ்வு முறைமையை வழமையாக்கிக் கொள்ளும் ஒருவர் யோகாவின் அரைப்பங்கு பயன்களை பெற்று விடுகிறார்.

"ஆசனமானது" இயமம் நியமத்தை ஒழுங்காக கடைப்பிடிப்பதன் மூலமே அடையமுடியும். உடல் உள ஆரோக்கியமும் மனோவலிமையும் அதிகரிக்கும். ஒரு விரிப்பில் உடலை நேராக வைத்துக் கொண்டு, விரும்பிய , வசதியான நிலையில் சின் முத்திரையுடன், கண்களை மூடியவாறு நிமிர்ந்திருத்தலே ஆசனமாகும். கல்வி கற்கும் ஒருவரோ, தொழில் புரியும் ஒருவரோ தனக்கு வசதியான நிலையில் ஆனால் முள்ளந்தண்டு நேராக நிற்கும் நிலையில் இருத்திக் கொண்டு செயற்பட்டாலே முழுப்பயனை அடைய முடியும். அதே போல, யோகாவின் முழுப்பயனையும் அடைவதாயின் "ஆசனம்" நன்கு அமைய வேண்டும். "ஆசனத்தில்" இருக்கும் போது ஒருவரது உடல் , மனம் ஒன்றுபடுகிறது. இரத்தோட்டம் சீராக நடைபெறும். மனம் அமைதி பெறும். உடலின் எல்லா உறுப்புக்களும் வலிமை பெறும். சோர்வைத்தடுத்து எப்போதும் சுறுசுறுப்புடனும் இளமையுடனும் வைத்திருக்க உதவும். களைப்பை அறவே நீக்கி விடும். இப்பயன்களையும் வசதியான ஆசனத்தில் நிமிர்ந்திருக்கும் ஒருவர் இலகுவாக அடைய முடியும்.

"பிரணாயாமம்" மூச்சுப்பயிற்சி எனவும் அழைப்பர். ஒரு பக்க மூக்குத் துவாரத்தால் முடிந்தளவு காற்றை உள்ளிழுத்து, சிறிது நேரம் உள்ளடக்கி, மறுப்பக்க மூக்குத் துவாரத்தால் மெதுவாக - மிக மெதுவாக வெளிவிடும் பயிற்சி இது. உடல் வலிமை இல்லாதவர்களும் இலகுவாக இப்பயிற்சியை மேற்கொள்ள முடியும். புதிய காற்று ஒழுங்காக உள்ளெடுக்கப்படுவதால், இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு, உடலின் நுனி வரை செலுத்தப்படுவதால் புத்துணர்வு பெறலாம். சுறுசுறுப்பாக இயங்கலாம். தொற்றுநோய்கள் பிடிக்காதவாறு தடுக்கப்படும்.

"பிரத்தியாகாரம்" மனதைப் புலன் வழி செல்லவிடாது தடுத்து, அடக்கி கட்டுப்படுத்துவது. மனவடக்கம் மனக்கட்டுப்பாடு உள்ள ஒருவரால் எந்த நேரத்திலும் எதையும், எவரையும் கட்டுப்படுத்த முடியும். உணவு ஆடம்பரப் பொருட்கள், இளம் பெண்கள், மலர்கள் என அழகுள்ள எவையையும் கண்டால் எவர்க்கும் ஆசை வருவது படைப்பின் இயல்பு, இவ்வாறு எழும் ஆசைகளுள் தப்பான ஆசைகளைக் கட்டுப்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

"தாரணை" என்பது ஆசைகொண்ட ஒரு பொருளில் விருப்புடன் ஒடுங்குவதாகும் (Cocentrate) ஒருமுகப்படுத்தல் ஆகும். வரம் வேண்டித் தவம் இருத்தல் ஆகும்.அர்ச்சுனன் பாசுபதம் பெற்றது போல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தியானம்" என்பது ஒரு விடயத்தையோ, பொருளையோ விரும்பி மனதை நிறுத்தி இடைவிடாது சிந்தித்தலாகும். அடைய வேண்டும் என அடங்கா விருப்புடன் அப்பொருள் பற்றியே எண்ணங் கொண்டிருப்பதாகும். தியானத்தின் போது மனம் அமைதி அடைகின்றது. முன்கோபம், படபடப்பு, இரத்த அழுத்தம், நரம்புத்தளர்ச்சி போன்றன குறைவடையும்.

"சமாதி" என்பது இறுதி நிலையாகும். நான் என்ற ஆணவம் முழுவதுமாக நீங்கி எப்போதும் இறைவனைத் தியானித்திருக்கும் நிலையாகும்.

உடலோடு சம்பந்தப்பட்ட இயமம் , நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம் ஆகிய பயிற்சி நெறிகள் ஹதயோகம் என்றும் தியானம் சமாதி என்பன உளத்தோடும் தொடர்புடையவை ஆதலால் ராஜயோகம் எனவும் அழைக்கப்படுகின்றது.

பொதுவாக நோய் ஏற்படுவதற்கான காரணிகளாக நோய் ஏற்படுத்தும் நோய்க்கிருமிகளே காரணமெனக் கூறப்பட்டாலும், உடலுள் உணவு சமிபாடடையாமை, ஒழுங்காக உடற்கழிவுகள் அகற்றப்படாமை, இரத்தம் சுத்தமாய் சுத்திகரிக்கப்பட்டு இல்லாமை, போதியளவு நீர் அருந்தாமை, சுவையாக இருப்பின் மிகையாக உணவு அருந்துதல் போன்றனவே உண்மையான காரணங்கள் ஆகின்றன. இதை அறிந்தே நம் முன்னோர்கள் உணவு பழக்க வழக்கங்களை வகுத்துள்ளனர். யோகா மூலம் உடல் கட்டுப்பாட்டுக்குள் வருவதுடன், மனதும் கட்டுப்படுத்தப்படும் போது, அளவான உணவு அவசியமான நீர், சுத்தமான குருதிச் சுற்றோட்டம், நரம்புத்தொகுதியின் வலிமை என்பன வளர்க்கப்படுவதால், ஒருவனுக்கு ஏற்படும் மன அழுத்தம் பதற்றம், படபடப்பு, நரம்புத்தளர்ச்சி, பய உணர்வு, சோர்வு போன்றவை இல்லாதொழிக்கப்படுகின்றது. எவ்வேளையிலும், சாந்தமாகவும், முகமலர்ச்சியுடனும், மற்றவர் மீது இரக்கம், கருணை, அன்பு செலுத்துபவராகவும் வாழ முடிகின்றது. ஊழல் சதை, தொப்பை, உடல் கொழுப்பு ஏற்படாதவாறு தடுப்பது மட்டுமன்றி கவனக்குறைவால் ஏற்படும் உடல், உள நோய்களைக் குணமாக்கவும் முடிகின்றது.

இக்கருத்துக்களை அறிந்து ஏற்றுக் கொண்ட மேலை நாட்டவர்கள் தற்போது மூலிகை மருத்துவத்துக்கும், தாவர உணவுகளுக்கும், யோகாபயிற்சிகளுக்குமாகத் தங்களைத் தயார்ப்படுத்தி வர யோகாவின் பிறப்பிடமும், மூலிகை மருத்துவத்தின் தாயகமுமாகிய பூமியில் வாழும் நாம், எப்போதும் மாத்திரைகளையும் விலங்குணவுகளையும், மதுசாரங்களையும் நாடி அலைகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரியஉயரிய பயிற்சிகளின் அவசியமும் பயன்களும் மக்களிடையே எடுத்துச் செல்லப்படாமையே - அறியாமையே இதற்குக் காரணமாக இருக்க முடியும். இங்கு சில அமைப்புக்களும் நிறுவனங்களும், ஆரண்யங்களும் யோகாவின் அருமை பற்றி எடுத்துக் கூறும் முயற்சிகளில் ஈடுபட்டாலும் ஆதரவும் விருப்பும் நேரம் இல்லாமையையும் காரணமாகக் கூறி தடங்கல்கள் ஏற்படுகின்றன. ஆனால் இவையெல்லாவற்றையும் தாண்டி - வென்று இன்னும வீரியத்துடன் இவை பயணிக்க வேண்டும். பணியாற்ற வேண்டும் அவ்வாறான ஒரு நெருக்கடி நிலையில் இன்று மக்கள் வாழ்கின்றார்கள். எதிர்வரும் 5 - 10 வருடங்களுள் மேலும் புதுப்புது மாற்றமுடியாத வியாதிகளைச் சந்திக்க வேண்டி வரும் அதற்காக தயார் நிலையில் உடலையும் மனதையும் வளர்த்தெடுத்து வைத்திருக்க, ஆன்றோர் அருளிச் சென்ற யோகாப் பயிற்சிலேயே முடியும்.

*நோயில்லா வாழ்வு வாழ யோகா பயில்வோம் வாங்க!*

பிரம்மன்

---

உலகில் நல்லதும் கெட்டதும் பிரிக்கமுடியாததும் இணைந்தே இருக்கின்றது. சமுதாயம் தன் சொந்த முயற்சியாலேயே தன்னை உருவகித்துக் கொள்கிறது. ஒருவர் தான் கொண்ட கருத்தை மற்றவர் மேல் செலுத்தவோ அல்லது அதுதான் சரியென நிறுவவோ முயல வேண்டியது இல்லை. சமுதாயத்தில் உள்ள ஆண், பெண் இருவருக்கும் உண்மைக் கல்வியினை வழங்கிவிட்டோமானால் அவர்கள் நல்லது கெட்டதைப் பிரிந்தறிந்து பகுத்துணர்ந்து தம்மை தாமே வடிவமைத்துக் கொள்வர். அதுவே உண்மையான சமூக வளர்ச்சி

– வழிப்போக்கன் –

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

# கல்வி

மனிதர்களாலே தேடற்பலனாகிய பொருட்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியானது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கற்றற்குரிய நூல்களாவன அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப்பொருட்களை அறிவிக்கும் நூல்களும் அந்நூல்களை அறிதற்குக் கருவியாகிய நிகண்டு இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமாம்.

செல்வப்பொருள் பங்காளிகள், கள்வர், வறியவர், அரசர் எனும் இவர்களாலே கொள்ளைப்படக் கூடியன. கல்விப் பொருளோ ஒருவராலும் கொள்ளைப்படமாட்டா. செல்வப் பொருள் வெள்ளத்தாலும் அக்கினியாலும் அழியும். கல்விப் பொருள் ஒன்றாலும் அழியமாட்டாது. செல்வப்பொருள் பிறருக்கு கொடுக்குந்தோறும் குறையும். கல்விப் பொருளோ பிறருக்குக் கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டேவரும். கொடுப்பதற்கெனவே தேடவும் கூடும். செல்வப் பொருள் பலரையும் துன்பம் செய்து பகைவராக்கும் கல்விப் பொருள் உடையவர் இம்மையிலே சொற்சுவை, பொருட்சுவை அடைந்து பொருளும் புகழும் பெற்று இடையறாத இன்பத்தை பெறுவர்.

உயர்குலமும் செல்வாக்கும் உடையவராயினும் கல்வி அறிவு இல்லாதவர் முருக்கம்பூவுக்கு சமமானவர். அரசர்களுக்கு அவர் தேசத்தில் சிறப்பு உண்டாம் கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டாம். எனவே கல்வியை விரும்பித் தேடி வருந்திக் கற்றல் வேண்டும்.

அழுக்குப் படியா சிலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும் அழுக்குப் படிந்த சிலையிலோ சாயம் நன்றாகப் பிடிக்கமாட்டாது. சிறு பராயத்தில் கற்றால் கல்வி நன்றாக மனதில் பதியும். முதிர்ந்த பராயத்தில் கற்றாலும் கல்வி, நன்றாக புத்தியிலே பதியமாட்டாது. அதனால் தான் ஔவையார் “இளமையில் கல்” என்று அருளிச் செய்தார்.

கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒரு நாள் ஊக்கமாகவும் மற்றொரு நாள் சோம்பலாகவும் இராமல் எப்பொழுதும் தங்கள் சக்திக்கேற்ப கல்வியை பயில வேண்டும். சோர்வு அடையாது தினமும் கிரமமாகவும் சிறிதாயினும் நன்றாகவும் கற்பவர் எவ்வகையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுள்ளவராவர் தாம் சமத்தர் என நினைத்து ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்பவர் அதிக தேர்ச்சி அடையமாட்டார். மணற் கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்று நீர் பெருகி வருவது போல கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். எனவே கல்வியைச் சிறிது கற்றால் போதாது மேன்மேலும் கற்றல் வேண்டும். கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு ஆதலால் தேடித்தேடி, விரும்பி கற்று அறிய உலகில் நிறைய விடயங்கள் உண்டு.

தான் கற்று அறிந்ததை ஏனையவர்களுக்கு அறிவித்தலும், தாம் ஐயுள்ள பொருள்களை ஏனைய மாணவர்களிடம் வினாவுதலும், வினாவியவர்க்குத் தாமும் சொல்லிக் கொடுத்தலும் கல்வி பயிலும் மாணவர்களுடைய கடமை ஆகும். ஒருவர் கற்ற கல்வி அப்பிறப்பினன்றி ஏனைய பிறப்பிலும் சென்று உதவும் தாம் கற்ற கல்வியை கருணையோடு கற்பியாதவர் காட்டிலே வளரும் நச்சுமாமரமாவர்.

*-நன்றி -*

**வினோஜா வன்னியசிங்கம் 10E**
**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

---

**மகத்தான கொள்கைகள் வெறுமனே கதைத்து விடுவதாலோ கேட்டு விடுவதாலோ வளராது இடையறாத கடுமையான உண்மை உழைப்பால் அவற்றைச் செயல்படுத்திக் காட்டவேண்டும்உயர்ந்த தத்துவங்களும் சாத்திரங்களும் ஓசை அளவில் மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதால் பயன் இல்லை. உட்பொருள் உணர்ந்து அதன்படி வாழ்ந்து காட்டி உயர்வு பெற வேண்டும்.**

**–வழிப்போக்கன்–**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07

# ஔவையார்

01. ஔவையார் ஒரு சிறந்த புலவராவார்.

02. ஔவையார் ஒரு பெண் புலவராவார்.

03. ஔவையார் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

04. ஔவையாரை தமிழ் அறிந்த பாட்டி என்று அழைப்பார்.

05. எளிய, இனிய சொற்களைச் சேர்த்து இனிய பாடல்களைப் பாடியுள்ளார்.

06. தெள்ளுதமிழ் அவர்நாவில் என்றும் துள்ளி விளையாடும்.

07. ஔவைப்பாட்டி பிள்ளையார் மீதும், முருகன் மீதும் மிகுந்த பக்தி உடையவர்.

08. ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை போன்ற பாடல்களைப் பாடியுள்ளார்.

09. இவற்றை நாம் கற்பதினால் வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும் வாழ முடியும்.

10. முருகப் பெருமானிடம் நாவல் பழம் கேட்டுத் தமிழில் விளையாடிய பாட்டி ஔவைப்பாட்டி ஆவார்.

11. ஔவையாரின் அறநெறி கூறும் பாடல்கள் எமது மிகப் பெரிய சொத்துக்கள் ஆகும்.

12. ஔவைப்பாட்டி தமிழ்நாட்டில் வாழ்ந்த பெண் புலவர்களுள் முதன்மையானவர் ஆவார்.

செல்வி . நா . சங்கீதா
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

# தவளைகள்

தவளைகள் நிலத்திலும் நீரிலும் வாழக் கூடியவை. திடமான கொள்கைப்பிடிப்பு இல்லாதவர்களும் தவளைகள்தான் . ஈரூடக வாழ்வு வாழத் தவளைகளால் மட்டும் முடியும். ஆமைகளும் ஈரூடக உயிரினங்கள்தான். ஆனால் அவை தவளைகள் போல கத்தித் திரிவதில்லை. ஆயிரக்கணக்கான முட்டைகளை இட்டு விட்டு அமை தியாக இருக்கும். ஆபிரிக்கா காட்டில் வாழும் தவளைகள்தான் உலகில் மிகப்பெரும் தவளைகள் என அறிய முடிகின்றது. அவை நச்சுத்தன்மை மிகுந்தவை. மிகச்சிறிய இனங்களும் உண்டு. தவளைகள் நீரில், நிலத்தில் மட்டும் அல்ல, கல்லுக்குள்ளும், பாறைப் பொந்துகளிலும் கூட வாழும் வல்லமை கொண்டவை. கிணற்றில், குளங் களில், கடலில் என இவை எங்கும் வாழும் தன்மை கொண்டவை. அவ்வாறு குளத் தில் வாழ்ந்து வந்த தவளை ஒன்று 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட சுனாமி என்று அழைக்கப்படும் பெரு அலை வெள் ளத்துடன் அள்ளுப்பட்டு வந்தது. அதன் உறவுகளும் சுற்றமும் எங்கு அள்ளுப்பட்டு அழிந்து போயினவோவென்பதும் தெரியவில்லை. இலங்கையின் தென் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய இவ்வனர்த்தம் போரால் இடம்பெயர்ந்து வன்னியில் மர நிழல்களிலும், குடிசைகளிலும் வாழ்ந்த மக்களை மீண்டும் அலைக்களித்தது. அந்தியேட்டிக் கிரியைகள் செய்யவென கீரிமலை புனித தீர்த்தக்கரை சென்ற மக்களையும் அள்ளிக் கொண்டு போனது. ஒரே குடும்பத்தவர் 21 பேர் காணாமலே போயினர். அவ்வாறானதொரு வெள்ளத்துடன் அள்ளுப்பட்டு வந்த தவளை ஒன்று சுனாமிப் பெரு அலை ஓய்ந்து வெள்ளம் வடிந்த வேளை கிணறு ஒன்றில் சிக்கிக் கொண்டது. சிறை போல இருந்தது அதற்கு அங்கே இருந்த தவளைகள் இந்த தவளையை வெறுப்புடன் பார்த்தன. கத்தித் தீர்த்தன. கண்ணீர் விட்ட படி இந்த தவளை வேறு வழியின்றி அவற்றுடன் வாழ்ந்து வந்தது. ஒருநாள் சற்று சினேகமான தவளை கேட்டது.

நண்பா நீ, எங்கிருந்து வருகிறாய்.

நான் குளத்தில் வாழ்ந்து வந்தேன். வெள்ளம் அடித்து வந்து இங்கே விட்டுவிட்டது.

குளம் எப்படி இருக்கும். இந்தக்கிணறு அளவில் இருக்குமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றைப் போல பல மடங்கு பெரியது. தனிவரி கிணற்றில் வாழ்ந்த தவளை எம்பிக் குதித்து விட்டு நான் பாய்ந்த அளவு பார்த்தாயா? அந்தளவு இருக்குமா குளம் என்று கேட்டது.

இல்லை இதை விடவும் மிகவும் பெரிது. எல்லைகள் அற்றது. ஒரு கரையில் இருந்து மறுகரைக்குப் போய்ச்சேர எனக்குப் பல நாட்கள் எடுக்கும் என்றது.

முதலாவது தவளை அதுதான் இத்தவளையுடன் சற்று நட்புரிமையுடன் பழக முற்பட்ட தவளை. அதற்குக் கோபம் வந்து விட்டது. இப்போ பார் என்று தன் முழு பலமும் சேர்த்துத் துள்ளிப் பாய்ந்து விட்டு இவ்வளவு பெரிதாக இருக்குமா என்று கேட்டது.

குளத்துத் தவளை சற்று யோசித்தது . நட்பாகப் பழக முற்பட்ட தவளைக்கே கோபம் வருகிறது போல உள்ளது, ஏதோ எனது கஷ்டகாலம் இங்கே வந்து சேர்ந்து விட்டேன். இனி ஒரு மாற்றம் வரும் வரை இவர்களுடன் தான் வாழ வேண்டும். ஆதலால் இவர்களுடன் இணங்கிப் போவதே புத்திசாலித்தனம் என எண்ணி , நண்பா நீ துள்ளிப்பாய்ந்த தூரத்தை விட கொஞ்சம் சின்னது தான் நான் வாழ்ந்த குளம் என்றது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஏனைய தவளைகளும் வெறுப்பு நீங்கி நட் புரிமையுடன் பழக ஆரம்பித்தன. குளத்தை கிணற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் இத் தவளைகளின் சிறுமதி கண்டு உள்ளத்துள் நகைத்துக் கொண்டு இவர்களுடன் வாழ்ந்து வந்தது வருத்தத்துடன்.

மீண்டும் ஒரு நாள் 23 - 11 - 2008 இல் நிஷா புயல் வந்தது. பெருமழை பெய்தது. நெடுந்தீவுக்கு அருகில் மையம் கொண்ட தாழமுக்கம் வன்னி யாழ்ப்பாணப் பகுதி களில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. எங்கும் ஒரே வெள்ளக் காடு வாழ்விடங்கள் அழிந்தன மரங்களும் முறிந்து வீழ்ந்தன, வீதிகள் அள்ளுப்பட்டுச் சென்றன. குளத்துத் தவளை வாழ்ந்த கிணற்று நீர் மட்டம் மெல்ல மெல்ல மேலுயர்ந்தது. ஒரே தாவாகத் தாவிய குளத்துத் தவளை கிணற்றை விட்டு வெளியே சுதந்திர உணர்வுடன் வந்தது.

கனகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

# நான் சென்ற இந்தியச் சுற்றுலா

அன்று 11.02.2014 காலை 9.30 மணிக்கு முதன் முறையாக விமானத்தில் ஏறி இந்தியாவுக்குப் பயணம் செய்தேன். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புறப்பட்ட விமானம் மெது, மெதுவாக உயர உயரச் செல்லச் செல்ல ஒருவகைப் பயமும் ஆனந்தமாகவும் இருந்தது. முகில்களிடையே நுழைந்து விமானம் செல்லச் செல்ல மிகவும் சந்தோசமாக இருந்தது. விமானத்திலிருந்து கீழே பார்த்த போது மாங்காய் வடிவில் இலங்கை முழுமையாகத் தெரிந்தது. ஒரு மணிப் பயணத்தின் பின் இந்திய சென்னை விமான நிலையத்தில் இறங்கிச் சுங்கச் சோதனைகள் எல்லாம் முடித்து, நாங்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டை அடைந்தோம்.

மறுநாள் மாலைப் பொழுதினிலே மெரீனா கடற்கரைக்குச் சென்றோம். அதன் அழகும், வெண்மணற்பரப்பும், மணலுள் கால் புதையப் புதைய நடந்ததும், கரை வந்து மோதிச் செல்லும் அலைகளும் மிகவும் ரம்மியமாக இருந்தன. அவ்வாறே எம்.ஜி.ஆர் நினைவுத் தூபியும் கல்லறையும் அதனுள் இருந்து டிக், டிக் கென ஒலி எழுப்பும் அவரது கடிகாரமும் வியப்பைத் தந்தன. கல்லறையில் எரிந்து கொண்டிருக்கும் அணையா ஜோதி பற்றியும் அறிந்து ஆச்சரியமடைந்தேன். அறிஞர் அண்ணா நினைவாலயத்தையும், கல்லறையையும் பார்த்துவிட்டுத் திரும்பும் வழியில் A.V.M திரைப்படக் கலையகத்தையும், சென்னை பல்கலைக்கழகத்தையும் ராணிமேரி கல்லூரியையும் பார்த்துவிட்டு வீடு திரும்பினோம். முதன் முறையாகச் சினிமாத் திரையரங்கு சென்று திரைப்படம் பார்த்தோம். இதுவும் எனக்குப் புது அனுபவம்தான்.

அடுத்த நாள் காலை வெங்கீஸ்வரர் சிவன்கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டுத் தொடர்ந்து வடபழநி ஆலயம் சென்று வழிபட்டோம். அழகேயுருவாக அமர்ந்திருக்கும் முருகன் மனதில் பரவசத்தை ஏற்படுத்தினார். 15.02.2014 காலை ஆதிவராஜப் பெருமாள் சந்நிதியில் வீற்றிருக்கும் நித்திய கல்யாண சுவாமியை வணங்கிவிட்டு மாமல்லபுரம் சென்றோம். இந்நகரம் கடலுள் மூழ்கியிருந்ததாகவும், கடல் கோள் ஏற்பட்டதால் கடல் பின்செல்ல நகரம் தென்பட்டதாவும், அகழ்ந்து எடுத்து, அழகு மிகுந்த சிற்ப வேலைகள் கொண்ட கோவில்களும் மண்டபங்களும் பஞ்சபாண்டவர் சிலைகளும் தேர்களும் கல்லில் செதுக்கியும் இராசேந்திர சோழன் வைத்ததாகவும் வரலாறு அறிந்து கொண்டேன். பின்னர் தஞ்சைப் பெரிய கோவில் பார்க்கப்போனோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பிரமாண்டமான கோவில், கோபுரம், வளாகம் அமைந்திருந்தது. இயந்திர வலுவற்ற அக்காலத்தில் இது போன்ற பெரிய கட்டிடங்களை அமைத்த தொழிலாளர்கள்- கலைஞர்களின் மனிதவலு ஆற்றலையும் எண்ணி வியப்படைந்தேன். இந்தக் கோவில் இராசஇராசசோழனால் கட்டுவிக்கப்பட்டதாகவும் அறிந்து கொண்டேன். அருகில் இருந்த மாரி அம்மன் கோவில் வியாழபகபான் கோவிலுக்கும் சென்று வழிபட்டோம். தஞ்சாவூர் மண்ணில் செய்து விற்பனை செய்யப்படும் பொம்மைகள் மிக அழகாக இருந்து மனதைக்கவர்ந்தன.

மறுநாள் அதிகாலை வேளாங்கண்ணி மாதா கோவிலுக்குச் சென்றோம். கடற்கரை ஓரத்திலே, வெண்மண் பரப்பிலே, மிகப்பிரமாண்ட ஆலயமும் உயரே தெரிந்து ஒளி வீசிக் கொண்டிருக்கும் சிலுவைக் குறியீடும் என்மனதைக் கொள்ளையிட்டன. அங்கு பேணப்பட்ட தூய்மையும் நேர்த்தியான கட்டமைப்பும் பாராட்டப்பட வேண்டியவை. வழியில் திருக்கடவூர் ஆலயம் சென்று வழிபட்டோம். இங்கேதான் மார்க்கண்டேயர் என்னும் தனது பக்தனைக் காப்பாற்றுவதற்காக சிவன் யமனைக் காலால் உதைத்தார் என்றும், அபிராமிப்பட்டர் என்ற அம்பிகை பக்தருக்காக அம்பிகையானவள், முழு அமாவாசை இரவில் நிலவு தோன்றச் செய்த அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும் அறிந்து கொண்டேன்.

18.02.2014 இல் இராமேஸ்வரம் சென்று சிவனை வழிபட்டோம். இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள முனை இராமேஸ்வரம் என்று அறிந்தேன். நெடுந்தீவில் இருந்து பூக்கொண்டு சென்று இங்கே எழுந்தருளி இருக்கும் இறைவனை பக்தர்கள் வழிபட்டனர் எனவும் அறிந்து கொண்டேன். மதுரை சென்று கள்ளழகர் கோவிலை வழிபட்டோம். அவ்வாறே பழமுதிர்சோலை சென்று முருகனை வழிபட்டுவிட்டு வந்தோம்.

அடுத்த நாள் திருப்பரங்குன்றம் சென்றோம். மலையைக் குடைந்து கோவில் அமைத்திருந்த வண்ணமும், நாயக்கர் அரண்மனையின் அழகும் சிற்பவேலைப்பாடுகளும் மனித உளைப்பின் வெளிப்பாடுகள் என உணர்ந்தேன். தொடர்ந்து கொடைக்கானல் மலைக்குச் சென்றோம். மிகவும் உயரமான மலையும், எழில் கொஞ்சும் நீர்வீழ்ச்சிகளும், பயின் மரக்காடுகளும் பார்க்கும் இடமெல்லாம் மரகதப் பாய் விரித்தது போல பச்சைப் பசும் காடுகளும் என இயற்கை அன்னையின் அழகு கண்டு பரவசமடைந்தேன். அழகிருக்கும் இடத்தில்தான் ஆபத்தும் இருக்கும் என அறிந்திருந்தேன். உலகத்தின் முடிவு என கருதப்படும், தடுப்புச் சிவர் போடப்பட்டிருந்த தற்கொலைப் பாறைக்குச் சென்றேன். கிடுகிடு பாதாளத்தைக் கண்டு ஒருகணம் நடுநடுங்கிப்போனேன். குளிரூட்டியில்லாமலே குளிராகவிருந்த போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வியர்த்துக் கொட்டியது. வாழப் பிடிக்காதவர்கள் இங்கே வந்து பாதாளத்தில் குதித்து தற்கொலை செய்து கொள்வதுண்டு எனவும் அறிந்து கொண்டேன்.

மறுநாள் காலை, பழநி மலையில் அமர்ந்திருக்கும் முருகனைத் தரிசிக்க இழுவை ரயிலில் (Tolly) சென்றோம். உயரேஉள்ள மலைக்குச் செல்லப் படிக்கட்டுகள் இருந்த போதிலும் மக்களில் அநேகமானோர் இவ் இழுவை ரயில் மூலம்தான் சென்று வழிபடுகிறார்கள். புழநி முருகனின் பஞ்சாமிர்தம் மிகவும் சுவையானதும் பிரபல்யமானதுமாகும்.

21.02.2014 அன்று திருச்சிராப்பள்ளி உச்சிப்பிள்ளையார் கோவில் சென்று வணங்கினோம். ஒரு கரையில் காவிரி ஆறு பாய்ந்தோட மறுபுறம் அழகிய மலைகள் சிறுசிறு குன்றுகளும் காணப்பட்டன. காவிரி ஆற்றுக்கு மேலாக அமைக்கப்பட்ட பாலம் வழியே சென்று ஸ்ரீ ரங்கநாதரை வழிபட்டோம். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் போல இங்கும் திரும்பிய பக்கமெல்லாம் அழகிய உயரமான கோபுரங்கள். முதன்முறை செல்பவர் பாதை தெரியாது திகைப்பர் என்பது திண்ணம். அடுத்த நாள் திருப்பதி சென்று வெங்கடேஸ்வரப் பெருமானைத் தரிசித்துவிட்டுவந்தோம். வழியெங்கும் பக்தர் கூட்டம். எமக்கு வாய்ப்புக் கிடைத்தது பெரும் அதிசயம்தான் என உணர்ந்து கொண்டேன். பழநியில் பஞ்சாமிர்தம் போல இங்கே திருப்பதி லட்டு மிகவும் பிரபல்யமானது. தொடர் பிரயாணங்களால் உடல் களைப்புற்றிருந்தாலும் மிகவும் பயனுள்ள பிரயாணமாக இவ் ஆண்டு விடுமுறை நாட்கள் அமைந்திருந்தது.

*- நன்றி -*

ஸ்ரீ. கதிர்விழி

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 சுப்பிரமணியம் சுபாஸன் உடனான நேர்காணல்.........



தென்மராட்சிகல்வி வலயத்திலே, மிகவும் பின்தங்கிய நாவற்குழி பிரதேசத்தில் மிகுந்த பௌதீக வளப்பற்றாகுறைகளுடன் இயங்கிவருகின்ற பிரதேசத்தின் ஒரே ஒரு மகா வித்தியாலயம் ஆகிய நாவற்குழி மகா வித்தியாலயத்திலே, தினக்கூலி வேலைக்குச் சென்று உழைத்து குடும்பத்தை காத்து வரும் ஆச்சாரி குடும்பத்தில் பிறந்து வளர்ந்து நாவற்குழி மகாவித்தியாலத்தில் கல்வி கற்று 5ஆம் ஆண்டு புலமைபரிசில் தேர்வில் சித்தியெய்தியிருந்தும் கூட நகரத்துப் பாடசாலைகளில் ஒன்றுக்கு அனுமதிப் பெற்று செல்லாமல் இங்கேயே படித்துச் சாதனை புரிய வேண்டும் என்ற பேரவாவுடன் கற்றுவரும் சுப்பிரமணியம் சுபாசன், கணித வினாவிடைப் போட்டியில் வலயமட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கங்கள் பெற்று ஒலிம்பியாட் போட்டியில் கலந்து கொண்டு பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் வேளை சர்வதேச கணிதப்போட்டியில் பங்குபற்றுவேன் என திடமாக நம்புகின்ற, இவரை போன்று இலைமறை காய்களாக இப்பிரதேசத்தில் சாதனைகள் படைத்து வருகின்ற இளந்தளிர்களை வெளிக்கொணரும் நோக்கில் ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் கந்தையா கனகம்மா நிதிய வெளியீடான இளந்தளிர் - 3 இற்காக நேர்காண சென்று இருந்தோம்.

**வணக்கம் தம்பி. இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

வணக்கம் உங்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**கந்தையா கனகம்மா நிதியத்திலிருந்து இளந்தளிர் 3 இற்கான நேர்காணல் ஒன்றுக்காக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.**

நன்றி ஐயா , வாருங்கள்.

**உங்கள் ஆரம்பக்கல்வியை எங்கு ஆரம்பித்தீர்கள்?**

எனது ஆரம்பக்கல்வியை யாழ் / நாவற்குழி மகா வித்தியாலயத்தில்தான். ஆரம்பித்தேன். அங்கேதான் தொடர்ந்தும் கற்று வருகிறேன். எனது முன்பள்ளிக் கற்றல் நடவடிக்கைகள் எமது கிராமத்தில் இயங்கும் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் நடாத்தி வருகின்ற முன்பள்ளியில் ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 05 புலமைபரிசில் தேர்வில் நீங்கள் சித்தியடைந்துள்ளதாக அறிகின்றோம்..........**

ஆம், 2009 ஆம் ஆண்டு தரம் 05 புலமைபரிசில் தேர்வில் 147 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தேன். என்னுடன் மேலும் இருவர் எமது பாடசாலையில் சித்தியடைந்திருந்தனர். எனக்கும் இருமாணவர்களுக்கும் கந்தையா கனகம்மா நிதியத்தினர் ஊக்குவிப்பு உதவியும் கௌரவமும் வழங்கினர். என்னுள் இருந்த கற்றல் வேண்டும் என்ற ஆசையை தூண்டி விட்டனர்.

**புலமைபரிசில் தேர்வில் சித்தியடைந்திருந்தும் ஏனைய மாணவர்கள் போல இடைநிலை, உயர்நிலை கல்விகளுக்காக நகரத்துப் பாடசாலைகளை நீங்கள் ஏன் தேர்ந்தெடுக்கவில்லை.**

எந்தப்பாடசாலையாயினும் கற்பது மாணவர்களாகவே இருக்கும். அடுத்தது கிராமத்துப்பாடசாலைகள் வெறும் தரிப்பிடங்களும் அல்ல. கவனமாகவும், தொடர்ந்தும், ஆர்வத்துடனும் கற்கும் மாணவர்களுக்கு எந்த பாடசாலைகளிலும் தங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வர முடியும். நகரத்துப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் சித்தியடைவதும் இல்லை. கிராமத்து மாணவர்கள் சாதிக்காமல் விட்டதும் இல்லை. இன்னும் கூறுவதாயின் இன்று நகரத்தில் உள்ள கல்விமான்களில் பெருபான்மையோர் கிராமங்களில் இருந்து கற்று வளர்ந்து வந்தவர்களே.

**கணிதவினாவிடைப் போட்டிகளில் நீங்கள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் விருதுகள் பற்றி.............**

தரம் 6 - 7 இல் கணித வினாவிடைப்போட்டியில் வலயமட்டத்தில் பங்கு பற்றியும் இலக்கை அடையமுடியவில்லை. இத்தோல்வியானது என்னைத் தூண்டியது சாதிக்க வேண்டும் என்ற வேகம் எழுந்தது. தொடர்ந்து தரம் 9 இல் கணித வினாவிடைப்போட்டியில் 2ம் இடம் மாகாணமட்டத்தில் 1ம் இடம் தேசிய மட்டம் 1ம் இடம் பெற்று பதக்கங்களையும் வென்று எடுத்தேன்.

**இன்று நீங்கள் அடைந்துள்ள வளர்ச்சிக்காக உங்களை ஊக்கியவர்கள் - தயார்ப்படுத்தியவர்கள் பற்றி.......**

என்னை ஆண்டு 7 இல் இருந்து அர்ப்பணிப்புடன் ஊக்குவித்துத் தொடர்ந்தும் ஊக்கியும் உதவியும் வரும் எமது கணித ஆசிரியர் செல்வி தயாநிதி சடாச்சரம் அவர்களை முதற்கொண்டு, பலவகைகளிலும் என்னை மட்டுமல்ல ஏனைய மாணவர்களையும் தாய்போல அரவணைத்து ஊக்குவித்து வரும் அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களுக்கும் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வழிப்படுத்திவருகின்ற எல்லா ஆசிரியர்களுக்கும் பெரியவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளை தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

**உங்கள் குடும்ப பின்னணியும் அவர்களது ஊக்குவிப்பும் எவ்வாறு அமைகின்றது?**

எங்கள் அப்பா ஆச்சாரியார், தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எங்களை வளர்த்தும், படிப்பித்தும் வருகிறார். எனக்கு மூன்று அண்ணாக்களும் ஒரு அக்காவும். எல்லோரும் உயர்கல்வி கற்றவர்கள் அக்கா கொழும்பில் ஆசிரியராக பணியாற்றுகிறார். எமது குடும்பத்து பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அப்பா ஏனைய பிள்ளைகளுக்கு வழங்கிய கல்வியை எனக்கும் வழங்கவேண்டும் என மிகவும் கஷ்டப்பட்டு எமது கல்வித் தேவைகளை கவனிக்கிறார். அண்ணாக்கள் படித்தவர்கள் ஆனதால் எனது சந்தேகங்களை உடனடியாகவே தெளிவுபடுத்துகின்றனர். அவர்களுக்கும் எனது பெற்றோர்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றேன். தனது பிள்ளைகளை சான்றோர்களாக்க வேண்டும் என அம்மா எடுத்துவரும் முயற்சிகள் அளவு கடந்தவை. அர்ப்பணிப்பு மிகுந்தவை. ஆரவாரமற்றவை.

**கணிதம் கஷ்டம் என ஏனையோர் அஞ்ச நீங்கள் கணிதத்தில் ஈடுபாடு காட்டுகிறீர்கள் ஏதாவது விசேட காரணங்கள் உண்டா?**

முதலில் கணிதம் கஷ்டம் அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாள் கணிதம், ஆண்டு கணிதம், பருவக்கணிதம், காலக்கணிதம் என மனித வாழ்வியலில் கணிதம் பின்னிப்பிணைந்துள்ளது. கணிதமும் மொழியறிவும் வாழ்வுக்கு மிகவும் அவசியம் என்பதனை "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று ஔவையார் கூறியுள்ளார். இன்னொன்று கணிதம் மட்டுமல்ல ஏனைய பாடங்களும், செயல்களும் - விளையாட்டுகளும்கூட விருப்பத்தோடு முயல்பவனுக்கு வெற்றிக்கனியைத் தரும் எனவே மாணவர்களும் எவரும் முழு ஈடுபாட்டுடன் முழுக்கவனத்துடன் மனஒருமைப்பாட்டுடனும் விரும்பிக் கற்றால் வெற்றி நிச்சயம்.

**ஒலிம்பியாட் தேர்வுகளிலும் நீங்கள் பங்குபற்றி இருக்கிறீர்கள். இப்படியான தேர்வுகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?**

ஒலிம்பியாட் கணிதப் போட்டி எம்மைப் பொறுத்தளவில் மிக கடினமான இலக்கு. கடினமான இலக்குகளை வெல்வதில் தான் மகிழ்வு இருக்கும். அந்தவகையில் இதையொரு சவாலாகவே எடுத்துக்கொண்டேன். இப்போட்டியில் ஆண்டு 9 ,10,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களிடையே தொகுதிகளாக பிரித்து போட்டிகள் நடைபெற்றன. எமது பிரிவில் 9, 10, 11 ஆம் மாணவர்கள் இணைந்து இருந்தனர். இப்போட்டியில் நான் 11 ஆம் ஆண்டு மாணவர்களுடன் போட்டியிட்டு பெற்ற இவ்வெற்றியானது எனக்கும், எனக்கு கற்று தந்த ஆசிரியர்களுக்கும் எனது பாடசாலைக்கும் கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும். கிராமத்து மாணவர்களாலும் முடியும் என்ற தென்பைத் தந்த வெற்றியாகும் இவ்வாறான சந்தர்ப்பங்களை எனக்கு தந்த இறைவனுக்கு இவ்வேளையில் எனது வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். இப்போட்டியின் தேசிய மட்டப்போட்டி 22.03.2014 இல் கொழும்பு ஆனந்தாக்கல்லூரியில் நடைபெற்றது. அதிலும் வெல்வேன் என்ற நம்பிக்கையுடன் பெறுபேறுகளுக்காக காத்திருக்கிறேன்.

**எதிர்க்கால குறிக்கோள்கள் எவை?**

சர்வதேச மட்ட ஒலிம்பியாட் கணிதப்போட்டியில் கலந்து வெற்றி பெறுவதுதான் எனது உடனடி இலக்கு ஆகும். வாழ்க்கையில் நான் ஒரு மருத்துவனாக வரவேண்டும், எமது கிராம மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பது எனது விருப்பாகும். அதற்கான வாய்ப்புகள் இப்போது உள்ள நிலையில் எமது பாடசாலையில் இல்லை ஆண்டு 11 வரையும் இங்கே தான் கற்று உயர் பெறுபேறுகள் பெற்று சாதனை புரிவேன். உயர்தர விஞ்ஞானப்பிரிவை இங்கும் கல்வித்திணைக்களமும் அதிகாரிகளும் அமைத்து தருவார்களாயின் இப்பாடசாலையில் இருந்து முதலாவது மாணவனாக மருத்துவபீடத்திற்கு தெரிவாகி சாதனை படைத்து கிராம பாடசாலை மாணவர்கள் எவர்க்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிறுவுவேன்.

**உங்களுக்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியர்கள் பற்றி...........**

அவர்கள் தெய்வத்துக்கும் மேலானவர்கள். மிகுந்த ஈடுபாட்டுடன், ஆர்வத்துடன், அர்ப்பணிப்புடன், கற்றுத்தருகிறார்கள். விஷேட வகுப்புக்கள் எடுத்து பயிற்றுவிக்கிறார்கள். எமது அதிபருடன் இணைந்து எமது பாடசாலையின் தரத்தை மேலுயர்த்தவும் கல்வி நல்லொழுக்கத்தில் சிறந்த மாணவர்களை தயார் செய்யவும் அரும்பாடுபடுகிறார்கள். மாணவர்கள் ஒத்துழைத்து கற்றால் சாதனையாளர்கள் பலர் இங்கேயும் உருவாகுவர்.


**உங்கள் மாணவ நண்பர்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

ஆம், மிகுந்த வறிய நிலையில் உள்ள இப்பிரதேச பெற்றோர்கள், கல்வி கற்பதன் மூலமே தமது பிள்ளைகளின் வாழ்வு உயர்வடையும் எனக் கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு அனுப்புகின்றனர். பாடசாலை பருவம் கடவுள் எமக்கு அளித்த வெகுமதி. இதை வீணடிக்காமல் எமது கற்றல் நடவடிக்கைகளில் மட்டும் ஆர்வம் காட்டி ஒழுங்காகவும், கவனமாகவும் தொடர்ச்சியாகவும் கற்றால் எல்லோராலும் முன்னேற முடியும். முயலும் வெல்லும். ஆமையும் வெல்லும். ஆனால் முயலாமை ஒருபோதும் வெல்லாது. ஆதலால் முயல்வோம் வாருங்கள் நண்பர்களே.



நன்றி தம்பி உங்கள் இலட்சியங்கள் கனவுகள், விருப்பங்கள் எல்லாம் மெய்ப்பட எமது நல்லாசிகள் இறைவன் அருளுக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

நன்றி ஐயா, நன்றி வணக்கம்.

மிகவும் தற்துணிவுள்ள, மிகுந்த பணிவுள்ள நல்ல மாணவர் ஒருவரை நேர்கண்ட சந்தோசத்துடன், பொருள் மிக வைத்திருப்போர் இவரைப் போன்று சாதிக்க துடிக்கின்ற பிள்ளைகளுக்கு உதவ முன்வரவேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

*- நன்றி -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# எண்களின் ஊடே எங்கள் வாழ்வு

கணிதம் என்றால் கடினமானது எனும் கணிப்பே பொதுவானது. இப்புரிதல் தவறானது என சிந்திக்கமுனைவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும். ஏனெனில் கணிதம் வாழ்வியலில் பின்னிப்பிணைந்து பாமரர் முதல் படித்தவர்வரை பின்பற்றப்பட்டே வருகின்றது. இதனைப்புரிந்து கொள்வதும், தவிர்க்கவியலாதது எனவறிதலும் அவசியமானதாகும்.

கணிப்பின் அவசியத்தை ஔவையார் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என குறிப்பிட்டு உள்ளார். இதில் ஒரு மனிதனின் கண்ணுக்கு ஒப்பாக கணிதம் "எண்" என சுட்டப்பட்டுள்ளது.

இதே கருத்தியலை பொய்யாமொழிப் புலவரும் வலியுறுத்தியுள்ளார். மனித வாழ்வியலுக்கு அவசியமான கலைகள் இரண்டு. அவையாவன எண்ணெனப்படும் கணிதம், மற்றையது எழுத்து எனப்படும் மொழியறிவு இதனை "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என பதிவு செய்கின்றார்.

***பழமொழிகளில் கணிதம்***

தமிழ் இலக்கிய வடிவங்களில் காலத்தால் முந்தியதும், அறிவுரைசார்ந்ததும், வாய்மொழியாலும் எழுத்துவடிவாலும் பாமரர் முதல் படித்தவர்வரை பயன்படுத்தும் இலக்கியமாக இதுவுளது. இவை ஏதோவோர்வகையில் கணிப்பின் அடிப்படையிலேயே கூறப்படுதல் உற்றுநோக்கின் உணரலாம். அவ்வகையில்

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது"

"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு"

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"

"ஆடி உழவு தேடி உழு"

"மாசிப்பனி மூசிப் பெய்யும்"

"வளரும் பயிரை முளையிலேயே தெரிவும்"

போன்ற அளவு, சந்தர்ப்பம், காலம், வளர்ச்சி என்பனவற்றைக் கணித்துக் கூறுவதனை தரப்பட்டிருக்கின்ற எடுகோள்களால் உணரலாம்.

***கருவில் கணிதம்***

மனிதவாழ்வில் தாய்மையின் சிறப்பை உணராதவர் இல்லையெனலாம். தாய்மை நிலையில் தாய் பத்து மாதங்கள் கருவைச் சுமக்கின்றாள் எனக் கணக்கிடப்படுகின்றது. ஏனைய உயிரினங்களும் இயற்கையின் உன்னதத்தால் வேறுபட்ட காலக் கணிப்பில் தமது கருவைச்சுமந்து இனவிருத்தியைப் பெருக்கிக் கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விட மனிதர்கள் தமது திருமண வயதினை மரபால் அல்லது சட்டத்தினால் வரையறைத்து உள்ளமை கணிப்பின்பாற் பட்டதேயெனலாம். இதனடிப்படையிலேயே பொதுவாக 18 வயது எல்லைவயதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

அதே போல ஏனைய உயிரினங்கள் பருவகாலத்திலேயே இனவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடல் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக காகம் ஆடி மாதத்தில் கூடுகட்டுவதனைக் குறிப்பிடலாம்.

***வாழ்வியல் முறையில் கணிதம்***

தமிழர்கள் வாழ்வில் பண்டிகைகளும் விழாக்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை காலக்கணிப்பின் அடிப்படையிலேயே கொண்டாடப்படுதல் குறிப்பிடத்தக்கது. சித்திரையில் வருடப்பிறப்பு, ஆடியில் ஆடிப்பிறப்பு, ஐப்பசியில் தீபாவளி போன்றன குறிப்பிடக்கூடியன.

பிறந்த குழந்தைக்கு குறிப்பு எழுதுதல் எனும் சோதிடத்தின் அடிப்படையிலான சாதகம் குறித்தற் செயற்பாடு குழந்தையின் பிறந்த நேரத்தை அடிப்படையாக கொண்டு அந்நேரத்தில் கோள்களின் இருப்பிடங்களை கணிப்பதாகவே உள்ளது.

சடங்குகள், சம்பிரதாயங்களை மேற்கொள்ளும்போது பஞ்சாங்கம் எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு சுபநேரங்களைக் குறித்தலும் ஒருவகை கணிப்பின் செயற்பாடேயாகும்.

மேலைத்தேசமுறையில் 21 வயதில் Key Birthday எனும் கொண்டாட்டம் காணப்படுதலும் கணிதத்தின் அடிப்படையானதே எனலாம்.

பிறந்த குழந்தைகள் 5 வயதில் பள்ளியில் சேர்த்தலும், பதின்நான்கு வயதுவரை கட்டாயம் கல்வி கற்கவேண்டும் எனும் சட்டமும் வயதின் அடிப்படையிலான கணிப்பாகும்.

அதேபோல பிறந்த குழந்தைகள் உடும்புபிடித்தல், தவளுதல், நடத்தல் போன்ற செயற்பாடுகளை எத்தனையாம் மாதங்களில் செய்வார்கள் என்பதனை அனுபவத்தால் மட்டுமல்ல உளவியலாலும் வரையறுத்துள்ளமை கணிப்பின் செயற்பாடே எனலாம்.

***காலங்களின் கணிப்பு***

நேரம், நாள், திகதி, வாரம், மாதம், வருடம், யுகம் என காலங்கள் வரையறை செய்துள்ளமை கணிப்பின் அடிப்படையிலேயே ஆகும்.

நேரம், விநாடி, நிமிடம், மணித்தியாலம் என கணிப்பிடலும் 24 மணித்தியாலங்கள் சேர்ந்தது அல்லது ஒரு பகல் ஒரு இரவு சேர்ந்தது ஒரு நாள் என்றும் ஏழு நாள் சேர்ந்தது ஒரு வாரம் என்றும், நான்கு வாரம் சேர்ந்தது ஒரு மாதம் என்றும் தொடர்ந்து செல்லல் யாவரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல தமிழ் மரபில் காலத்தை ஆறு வகையாகப்பிரித்து நோக்குவர். சாதாரணமாக மாரி, கோடையென முன் ஆறு பின் ஆறு மாதங்களை அடிப்படையாக கொண்டு வாய்மொழியால் வகுப்பர். நாம் பாவிக்கும் கலண்டர் எனும் நாட்காட்டி காலக்கணிப்பேயாகும்.

இவற்றை விட இந்துமரபில் யுகங்கள் நான்காக வகுக்கப்பட்டிருக்கின்றன. கிருதயுகம், திரேதாயுகம், துபாபரயுகம், கலியுகம் என்பன அவையாகும்.

இவையாவும் சூரியனதும் ஏனைய கோள்களினதும் சுழற்சியை மையப்படுத்தி கணிக்கப்பட்ட கணிப்பின் பெறுபேறுகளாகும்.

பாமரமக்கள் கூட மப்பும்மந்தாரமாக உள்ளபோது மழை வரும் என்றும், காற்று வீசும் திசையை வைத்து வடைக்காற்று, சோளகக்காற்று என இனங்காணலும் மனக்கணித செயற்பாடே எனலாம்.

***வேலைகளில் கணித செல்வாக்கு***

கற்றற் செயற்பாடுகளில் கவனம் செலுத்த முடியாத மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகி தமக்கு பிடித்த வேலைகளில் இணைந்து கொள்வர். இவ்வேலைகளில் கூட கணிதச் செயற்பாடு பின்னிப்பிணைந்தே காணப்படுகின்றது.

மேசன் வேலைகளில் கல், மண் கலவைகளின் அளவு, கட்டட நீள அகலம், உயரம், கல்லறுப்பதற்கான அளவு, நீர்மட்டம், கூரைச்சாய்வு போன்றனயாவும் கணக்கின் அடிப்படையிலானவை.

தச்சுவேலையில் கனம், அடிமட்டம், மூலைமட்டம் போன்றவாறு பல்வேறு கணித செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

சாரதியாகவுள்ளவர்கள் வேகம், தூரம், எனும் அடிப்படையில் தமது தொழிலையாற்றுகின்றனர். விவசாயிகள் நாற்று மேடையளவு, நீரோட்ட சரிவு, பாத்திகள், எக்காலத்தில் பயிரிடல், போன்றவாறு கணித செயற்பாட்டினடிப்படையில் வேலையாற்றுகின்றனர்.

மீனவர்கள் கடலின் ஆழம், காற்றின்வேகம், திசை, காலம் போன்றவற்றையும் அதற்கேற்ப வரும், மீன் வகையையும் மீனுக்கேற்ற வலையினையும் தீர்மானிக்கின்றனர்.

இவ்வாறு எத்தொழிலிலும் கணிதம் செல்வாக்கு செலுத்துதலைக் காணலாம்.

***விளையாட்டில் கணிதம்***

விளையாட்டு விளையாட்டல்ல எனக் கூறும் வழக்கு ஒன்றுண்டு. விளையாட்டின் நோக்கமே தலைமைத்துவ பாங்கை வளர்ப்பதாகும். விளையாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி தோல்வி முக்கிய இடம் வகிக்கின்றது. வெற்றி தோல்வியினைத் தீர்மானிப்பது நடுவரின் தீர்ப்பு. நடுவர் தீர்ப்பு வழங்குவதற்கு கணிப்பினையே பயன்படுத்துகின்றார்.

இதனை விட விளையாட்டுகளில் வீரர்களின் எண்ணிக்கை, அமைவிட அளவுத்திட்டம், ஒழுக்கவிதி, என்பன கணிதத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

சுவட்டு நிகழ்வுகளில் 100m, 200m என நீட்டல் அளவை பயன்படுத்தப்படுகின்றது. இதே அளவே நீளம், உயரம் என்பனவற்றிலும் பயன்படுத்தப்படும் ஓட்டத்தில் நேரமும் வெற்றியை கணிக்க உதவுகின்றது.

அதேபோல பெரு விளையாட்டுகளில் வீர, வீராங்கனைகளின் எண்ணிக்கையும், இலக்கினை அடையும் தடவைகளும் (கோல்), சுற்றுகளும் கணிதத்தின் அவசியத்தை உணர்த்துகின்றன.

விளையாட்டுக் குழுக்களின் மோதல் முறைத்தெரிவும் கணிதத்தின் நிகழ்தகவு சிந்தனையை அடியொற்றியது. உதாரணமாக விலகல்முறை நாணயற்சுழற்சி என்பனவற்றை குறிப்பிடலாம்.

கயிறுஇழுத்தல் போன்ற விளையாட்டுகளில் சமநிலை, பலம் ஆகியன கணிப்பிடப்படுகின்றன.

குழுக்கள் தமதணியில் சிறந்தவர்கள் என கணிப்பிடுபவர்களையே அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்கின்றனர்.

உண்மையில் விளையாட்டு பொழுதுபோக்கு தொடர்பானதாக காணப்படினும் அது உளவியலடிப்படையிலான கணிதம் என்பது யாராலும் மறுக்கமுடியாதது.

**அன்றாட செயற்பாட்டில் கணிதம்**

காலையில் எழுந்து வேலைக்கு செல்லுதல் வரை நேரம், முகாமை என கணிதச்செயற்பாடுகள் காணப்படுகின்றன. அதே போல பொருட்கள் கொடுக்கல் வாங்கல் செய்வதிலும் பணப்பரிமாற்றம் மேற்கொள்வதிலும் கணிதச்செயற்பாடே ஊடுருவி நிற்பதனை காணலாம். உதாரணமாக வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் என்றும் கூலி 1200 ரூபா எனவும் உள்ளமை.

**முடிவு**

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு எண் இன்றியமையாதது. எண்ணின் அடிப்படையிலேயே எண்மியம் (Digital) தோன்றி வேலைகளை இலகுபடுத்தியுள்ளது. ஆதலால் கணிதம் கற்று கனவான்களாக வாழ்வோம்.

*- நன்றி -*

சு. சுதர்சன்,
ஆசிரியர், யா/ நாவற்குழி. ம. வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## மாணிக்கவாசகர்

உலகிலே பக்தி நெறி நின்று இறைவனை மெய்யன்புடன் வழிபட்டு இறையடி சேர்ந்த நாயன்மார்கள் அறுபத்துமூன்று அடியார்கள் உள்ளனர். இவர்களின் வர லாற்றை கூறும் நூல் பெரியபுராணம் ஆகும். அந் நூலை சேக்கிழார் என்பவர் எழு தினார். சேக்கிழார் சிறப்பித்துக் கூறும் அடியார்களுள் மாணிக்கவாசகரும் ஒருவராவர்.

பாண்டிய நாட்டிலே திருவாதவூரிலே சம்புபாதாசிரியருக்கும், சிவஞான வதியாருக்கும் இவர் மகனாக பிறந்தார். இவருடைய பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர் என்பதாகும். இளம் வயதிலே சிறந்த கல்விமானாக விளங்கிய இவர் பாண்டிய நாட்டு மன்னனின் முதலமைச்சராகக் கடமையாற்றி வந்தார். அப்போது பாண்டிய மன்னனால் இவருக்குத் தென்னவன் பிரமராயன் எனும் பெயர் சூட்டப்பட்டது.

ஒரு நாள் மன்னனின் ஆணைப்படி குதிரைகள் வாங்குவதற்காக சென்றார். செல் லும் வழியில் திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் அருட்குரவராக வந்திருந்த சிவபெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டார். பக்தி நிலை முற்றிப் போயிருந்த வாதவூரர் குதிரை வாங்குவதற்கென அரசன் தந்த அனைத்துச் செல்வங்களையும் தான தருமம் செய்து விட்டார்.

குதிரை வாங்கச் சென்று வெறும் கையுடன் திரும்பி வந்த தென்னவன் பிரம ராயனை மன்னன் கடிந்து கொண்டான். மன வேதனையடைந்த வாதவூரர் இறை வனை வணங்கி மன்றாடினார். இறைவன் நரிகளைப் பரிகளாக்கி பாண்டிய மன்ன னிடம் அனுப்பி வைத்தார். மன்னன் மகிழ்ச்சி அடைந்தான். அன்றிரவே பரிகளாகிய நரிகளெல்லாம் சுய உருவரப பெறறதுடன, பல தீங்குகளையும செயது விட்டு ஊளையிட்டவாறே காட்டுக்குள் ஓடிச் சென்றன. பரிகள் எல்லாம் நரிகளாகியமையை கண்டு ஏமாற்றமடைந்த மன்னன் வேதனை கொண்டதுடன் வாதவூரரை சிறையில் அடைத்தான். சிறையில் வாடிய தன்னுடைய பக்தனுக்கு உதவும் வகையில் இறைவன் வைகை ஆற்றைப் பெருக்கெடுக்க வைத்தார். செம்மனச்செல்வி எனும் மூதாட்டிக்குக் கூலியாளாக வந்து பிரம்படி பட்டார். அவ்வடி எல்லோரது முதுகிலும் பட்டது. அப்போது தான் கூலியாளாக வந்தது சிவ பெருமான் என்று உணர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனும் தன் தவறை உணர்ந்து மாணிக்கவாசகரை விடுதலை செய்தார். அவரிடம் மன்னிப்பும் கேட்டான். மீண்டும் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்குச் சென்று பக்தி மழையில் நனைந்தார். இவர் இறைவன் மீது திருவாசகம், திருக் கோவையார் என்னும் நூல்களும் பாடினார். திருவாசகம் மிகவும் சிறந்த நூலாகும். "இதனால் திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற கூற்று மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.

இறைவன் மீது மணியான பாடல்களைப் பாடியமையால் இறைவனால் இவருக்கு "மணிவாசகர்" எனும் பெயர் வழங்கப்பட்டது. மணிவாசகர் ஊமைப் பெண் ஒருவரைப் இறைவன் அருளால் பேச வைத்தார். இறைவன் அடியவனாக வந்து இவருடைய திருவாசகத்தையும், திருக்கோவை யாரையும் கேட்டு எழுதியமை ஒரு சிறப்பான அற்புதம் ஆகும்.

இவ்வாறு இறைவன் மீது பக்தி கொண்டு இறைவனை குருவாகவும், தன்னை சீடனாகவும் கொண்டு சன் மார்க்க நெறியில் நின்று எழுபத்தெட்டு ஆண்டுகள் இப் பூவுலகில் வாழ்ந்து ஆனி மாத மகம் நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார்.

எனவே நாமும் மணிவாசகரைப் போல் இறையருள் பெற்று இறையடி சேரமுயல்வோமாக.

**"மேன்மை கொள் சைவநீதி**
**விளங்குக உலகமெலாம்"**

செல்வி அ. சர்விகா
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# கல்வி

இந்த உலகம் தோன்றிய நாள் முதல் மனிதன் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்வதிலும் புதியவற்றைக் கண்டுபிடிப்பதிலும் முயன்று வருகின்றான். அதன் பயனாகவே இன்றைய நாகரிக உலகம் தோன்றியுள்ளது. தற்கால உலகில் தொழில்நுட்பம் பெரிதும் வளர்ந்து விட்டது. இவ் வுலகில் வாழ்வதானால் கல்வியறிவு முக்கியமாகும். எந்தத்துறையை எடுத்துக் கொண்டாலும் கல்வியறிவு இன்று அவசியமானதொன்றாகி விட்டது.

இவ்வாறான கல்வியின் சிறப்பானது அளப்பரியது. இக் கல்வியின் சிறப்பை பலரும் எடுத்தியம்பியுள்ளனர். "கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு ஆனால் மன்னனுக்கோ தன் தேசத்தில் மட்டும்தான் சிறப்பு" என்ற வாசகமானது கற்றோரின் மதிப்பை எடுத்து இயம்புகிறது. மேலும் கல்வியானது கள்வர்களால் கொள்ளையிடப்பட முடியாது. தீயாலும், நீராலும் அழிக்க முடியாது. அவர்களது எல்லாப் பிறப்புகளிலும் கல்வியறிவு தொடர்ந்து வரும். இவ்வாறு கல்வியின் சிறப்பானது அளப்பரியது.

இவ்வாறு நாம் பெற்ற கல்வியறிவை பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும். இதனையே வள்ளுவர்

"கற்கக் கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என கூறியுள்ளார்.

அதாவது நாம் கல்வியை கற்ற பின் அதற்குத் தகுந்த படி நடப்பதே கல்விக்குரிய அழகாகும். கல்விச் செல்வத்தை நாம் அனைவரும் இளமையிலேயே பெற வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனும் வாசகம் இவ்வுண்மையை கூறுகின்றது. கல்விக்கு வயதெல்லை கிடையாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல விடயங்களை கற்றுக் கொள்கிறான். அனைத்து வயதினரும் அறிவைப் பெறலாம். அவ்வாறு இருந்த போதும் "நாம் கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதே உண்மை. ஆதலால் பல விடயங்கள் தேடல் மூலமும் கற்றுக் கொள்வது அவசியம்.

இத் தேடலுக்கு விருந்தாக நூலகம், பத்திரிகைகள் மற்றும் பல மூலாதாரங்களை பயன்படுத்தலாம். இன்றோ நாகரிக மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் பல வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் அறிவுத் தேடலுக்கு பயன்படுகின்றன. இணையம் மற்றும் கணணியில் பல விடயங்களை நாம் அறியமுடிகிறது. இச்சாதனங்கள் மாணவர்களுக்கு உலக அறிவையும் தொழில்நுட்ப உலகின் இரகசியங்களையும் வழங்குகின்றன. ஆனால் மனிதர்கள் இவற்றை தவறான வழியில் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும்.

மாணவர்களிடத்தில் இன்று அருகி வரும் ஒரு பழக்கமாக வாசிப்புப் பழக்கத்தை குறிப்பிடலாம். இது மாணவர்களின் மொழித் திறனை பாதிப்பதாக அமைகின்றது. இதற்கு தீர்வாக பெற்றோர் மாணவர்களின் வாசிப்புத்திறனை ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு சமூகத்திலும் நூல் நிலையங்களும், சன சமூக நிலையங்களும் அமைக்கப்பட வேண்டும். இவற்றில் உரிய நூல்களும் பத்திரிகைகளும் பேணப்பட வேண்டும். எமது பிரதேசம் இவ்வகையில் நிறைவு கண்டதும் இன்றி இவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதில்லை. இந்த நிலை மாறி, சிறந்த அறிஞர்களாக நாம் மாறக் கற்றுக்கொள்வோம்.

இன்றைய உலகில் கல்வியறிவு இன்றி எந்தத் தொழிலையும் செய்ய முடி யாது. உதாரணமாக காவலாளி தொழிலுக்குக் கூட க.பொ.த. சாதாரண தர சித்திகளை எதிர்பார்ப்பது குறிப்பிடத்தக்கது. அதனால் கல்வியறிவை அனைவரும் உரிய முறையில் உரிய காலத்தில் பெறுவது அவசியம். தொழில் செய்யும் ஒவ்வொருவரும் அதற்கான சரியான ஊதியம் வழங்கப்படுகின்றதா என அறியவும், வழங்கப்படும் ஊதியத்தை ஒழுங்கான வழியில் செலவு செய்து பயன் அடையவும் கல்வியறிவு மிக வும் தேவைப்படுகின்றது.

கல்விச் செல்வத்தை விட இன்று பலரும் விரும்புவது பொருட் செல்வம் ஆகும். ஆனால் இதன் பயன் என்ன? என்றாவது ஒரு நாள் பொருட் செல்வமானது அழிந்து விடக் கூடியது. மனிதர்கள் மாடமாளிகைகளையும், விலையுயர்ந்த பொருட் களையும், விளையாட்டு வினோதங்களையும் விரும்புவதால் அவர்களுக்கு கிடைப் பது மகிழ்ச்சி மட்டுமே. ஆனால் கல்வியைப் பெற்ற ஒருவரை இவை யாவும் தேடி வருவதுடன் அவர் புகழும் பாராட்டும் பெறுகிறார்.

ஆதலால் மனிதனானவன் கல்வியை தன் உயிருக்கும் மேலாக மதித்து போற்று வதன் மூலம் தன் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைகிறான். ஒவ் வாருவரும் சிறந்த இலட்சியத்துடன் தன் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்கையில் கல்வியானது அவனுக்கு சிறந்த வழியைக் காட்டுகிறது. ஆகவே மாணவர் களாகிய நாம் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்து வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் நாம் கல்வியால் உயர்ந்த பல அறிஞர்களை குறிப்பிடலாம். உதாரணமாக மகாத்மா காந்தி அவர்கள், உலகப் புகழ் மிகு தொல்காப்பியர் அவர்கள் மற்றும் பல அறிஞர்களும் அல்பேர்ட், ஐன்ஸ்டீன் போன்ற அறிவியல் விஞ் ஞானிகளையும் குறிப்பிடலாம்.

கல்வியை பலரும் பலவாறு சிறப்பிப்பார். "கல்விக்கடல் என கல்வியை கடலுக்கு ஒப்பிடுவர். அதாவது மிக விரிந்தது, மிகப் பரந்தது எளிதில்நீந்திக் கடந்து விட முடியாதது, தேடிச் செல்லும் ஒருவருக்கு மிக ஆழத்தில் முத்து, பவளம் போன்ற திரவி யங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது எனலாம்.

வள்ளுவர் கற்றவர்களை உயர்ந்த பொருட்களுக்கும் கற்காதோரை இழிவான விலங்குகளுக்கும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அத்துடன் கற்றவர் முகத்தில் இருப் பவையே கண்கள் எனவும் கல்லாதோர் முகத்திரண்டு புண்களே உள்ளன என சிறப்பித்துள்ளார். திருக்குறளில் இவ்வாறு ஒரு அதிகாரமே கல்விக்காக ஒதுக் கப்பட்டுள்ளது.

நாம் எமது வாழ்வை இவ்வாறு கல்வியின் உண்மையை அறிந்து அதன் வழியே செலவிட்டால் எமது வாழ்வு சிறப்பாக மிளிர்வது திண்ணம். ஆகவே கல்வியை உரிய முறையில் பெற்று வாழ்க்கையில் தடைகளை தகர்த்து முன்னேறுவோம்!

*- நன்றி -*

செல்வி ச. கஸ்தூரிகா
யா/ வேம்படி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# ஔவையார்

01. ஔவையார் ஒரு தமிழ்ப் பெண் புலவர் ஆவார்.

02. ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழிகள் கற்றுத் தந்த பாட்டியாவார்.

03. நீதி கூறும் அவரது பாடல்கள் எமது அரும்பெரும் சொத்தாகும்.

04. ஔவையாரின் சகோதரனின் பெயர் திருவள்ளுவர் ஆகும். அவர் உலகப் பொது மறையாம் திருக்குறள் நூல் எழுதினார்.

05. பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கொடுத்து பிள்ளையாரிடமிருந்து சங்கத்தமிழ் மூன்றையும் பெற்ற பாட்டி இவராகும்.

06. ஔவையாரின் பாடல்களை நாம் தினமும் விரும்பி பாடுவோம்.

07. அவர் பல நாடுகளுக்குச் சென்று அரசர்களிடம் தனது பாடல்களை பாடி பரிசில்களை பெற்றார்.

08. ஔவையார் பல நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் வாழ்ந்தவராவர்.

09. அதிகமான் என்ற மன்னன் கொடுத்த நெல்லிக்கனியை இவர் உண்டு நெடுங்காலம் வாழ்ந்து தமிழ் வளர்த்தார்.

10. ஔவையாரின் பல பாடல்கள் பல புத்தகங்களிலும் இருக்கின்றது.

11. அவர் மறைந்தாலும் அவரது பாடல்கள் எப்பொழுதும் என்றும் நிலைத்து நிற்கும்.

12. அவர் முருகனிடமும், பிள்ளையாரிடமும் மிகுந்த பக்தி கொண்டவர்.

**செல்வன் செ . கஜானனன்**
கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# மனைவியின் கோபம்

வேலன்பிராய் என்னும் இயற்கைவளம் மிகுந்த அழகிய கிராமம் சாவகச் சேரி பிரதேச சபையின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளது. ஆச்சாரிமார் பெரும்பான்மையாக வாழும் இக்கிராமத்தில் அறிவும், நுட்ப புத்தியுமுடைய கந்தசாமி என்பவர் வாழ்ந்து வந்தார். பொதுவாகவே அக் கிராமம் அமைதியாகவும் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் வாழ்வதால் பிரச்சினைகள் பெரிதாக எழுவதில்லை. எழுகின்ற பிரச்சினைகளை நுட்பமாக அணுகித் தீர்த்து வைப்பதில் கந்தசாமி வல்ல வராக இருந்தார். அதனால் அயலூர்களிலும் அவருடைய பெருமையும் கீர்த்தியும் பரவியிருந்தது. அயல் கிராமங்களிலும் மக்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டி யிருந்ததால் அவர் பின் இரவு நேரத்திலேயே வீடு வந்து சேர்வதுண்டு. அதனால் மனைவி அவர் மீது மிகுந்த கோபம் கொண்டிருந்தார். "ஊருக்கெல்லாம் நியாயம் கூறுவதால் நமக்கென்ன பயன் வந்துவிடப் போகிறது" என ஏசுவாள். மக்கள் என்னிடம் பிரச்சினைகளுடன் வருகிறார்கள். என்னால் இயன்றளவு அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து வருகின்றேன். எனது இந்தச் சேவையால் மக்கள் அமைதியாகவும், சந்தோசமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்கிறார்கள். இதைவிட வேறென்ன வேண்டும் என்று பதில் கூறுவார்.

அன்று வேலன்பராய் கண்ணகி அம்மன் கோவிலில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருவிழா காணச் செல்லும் ஆவலுடன் கந்தசாமி மிகவும் வேகமாக மிதிவண்டியில் வந்துகொண்டிருந்தார். வழியில் நன்றாகக் குடித்துவிட்டு வெறியில் வந்துகொண்டிருந்த விதானையாரின் மகனை மோதிவிட்டார். அவன் விழுந்ததும் தலையின் பின்புறம் அடிபட்டு மண்டை உடைந்து இறந்துவிட்டான். எல்லோரது பிரச்சினைக்கும் தீர்வு கண்டுவரும் நான், இன்று பிரச்சினைக்குள் அகப்பட்டு விட் டேனே என்ன செய்யலாம் என யோசித்தார். இறந்து கிடந்த விதானையாரின் மகனை தோளில் தூக்கிச் சென்று அவன் தினமும் மது அருந்தும் தவறணையின் கதவில் சாய்த்து வைத்து விட்டு வந்தார். எப்படியோ ஆபத்திலிருந்து தப்பிவிட்டேன் என வீட் டுக்கு வந்து குளித்து ஆடைகள் அணிந்து கோவில் செல்ல ஆயத்தமாகிக் கொண் டிருந்தார். அந்த நேரத்தில் ஆரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டு வந்து பார்த்தார். தவறணை முதலாளி நடுக்கத்துடன் நின்றிருந்தார். பேராபத்தில் சிக்கியுள்ளேன் என்னை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும் எனப் பணிந்தார். என்ன விடயம் எனக் கேட்டார். கந்தசாமி. ஐயா விதானையாரின் மகன் நன்றாகக் குடித்துவிட்டு நிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறி கதவில் சாய்ந்து கொண்டு நின்றிருக்கிறான் போலும், கோவிலுக்கு செல்லும் அவசரத்தில் நான் கதவைத் திறக்கவே நிலத்தில் விழுந்து தலை பிளந்து இறந்து விட்டான்.விதானையார் அறிந்தால் என்னைக் கொன்று போட்டு விடுவார் எனது சொத்துக்கள் அனைத்தையும் தருகிறேன் என்னைக் காப்பாற்றுங்கள் என இரந்து நின்றார். பயப்படாதீர்கள் பதட்டமடையவும் வேண்டாம் என்று கூறிய கந்தசாமி, தவறணை முதலாளியின் உதவியுடன் யாருமறியாமல், விதானையாரின் மகனின் உடலை எடுத்துச் சென்று விதானையாரின் பகையாளியாகிய பொன்னார் வீட்டுக் கதவில் சாத்திவிட்டு வந்தனர். தவறனை முதலாளி சில லட்சம் ரூபாக்களைக் கொடுத்து என்னைக் காப்பாற்றியதற்கு அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அம்மன் கோவிலில் நாதஸ்வரம் ஒலித்துக் கொண்டிருந்தது. காற்றில் கலந்து வந்த இசை அதிர்வலைகள் காதுச் செவிப்பறைகளில் தவழ்ந்து புத்துணர்வு ஊட்டிக் கொண்டிருந்தது. பஞ்சாபிகேசனின் நாதஸ்வரமும், பத்மநாதனின் தவிலும் சேர்ந்து ரம்மியமான ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. கந்தசாமி வீட்டுக்கு வந்து கை, கால் கழுவி அப்பாடா பிரச்சனை தீர்ந்தது என்று கோவிலுக்கு போகும் அவசரத்தில் சாப்பிட ஆரம்பித்தார்.

மீண்டும் கதவு டொக் டொக் கென தட்டும் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்க்க பொன்னார் நடுங்கிக் கொண்டு, “ஐயா என்னை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்” எனப் பணிந்து நின்றார். திருவிழாப் பார்க்க அம்மன் கோவிலுக்குப் போக அவ சரப்பட்டு புறப் பட்டேன் கதவைத் திறந்த போது கதவு மோதி விதானையாரின் மகன் விழுந்து இறந்துவிட்டான். மது மயக்கத்தில் வீடு மாறி வந்து எங்கள் வீட்டுக் கதவில் சாய்ந்து நின்றிருக்கிறார் போலும் நான் கவனிக் கவில்லை. விதானையார் அறிந்தால் என்னைக் கொன்று போடுவார். எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறி பல லட்சம் ரூபாக்களை கைகளில் திணித்தனர்.

பொன்னார் பயப்படாதே கஷ்டம் வரும் போதுதான் நிதானமாகச் செயல்பட வேண்டும் வேதனைகளைச் சாதனைகளாக்கி மகிழ வேண்டும் எனக் கூறி, பொன் னரின் உதவியுடன் கந்தசாமி, விதானையாரின் மகனின் உடலைத் தூக்கிச் சென்று விதானையாரின் வீட்டுக் கதவில் சாய்த்து வைத்துவிட்டு வந்தனர். வீட்டுக்கு வந்த கந்தசாமிக்கு உணவு உண்ணவும் மனசு வரவில்லை, கோவிலுக்கு போகவும் விருப்பமின்றி அசதியுடன் படுத்துவிட்டான். களைப்பு மிகுதியால் உறக்கம் வந்த வேளை மீண்டும் கதவு தட்டப்பட்டது. கந்தசாமி கதவைத்திற என்று விதானையார் அனுப்பிய ஆட்கள் கதவில் தட்டினார்கள். என்ன? யார் இந்த நேரத்தில் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்த கந்தசாமி விதானையாரின் ஆட்களைக் கண்டதும் பயந்துபோனர். வெளியில் பயத்தைக் காட்டிக் கொள்ளாமல், யாரப்பா நித்திரை கொள்ளவும் விடமாட்டீர்களோ என அதட்டிக் கேட்டார். "நீங்கள் கோவிலுக்குப் போகாமல் வீட்டில் நின்றது கடவுளின் அருள் ஐயா." விதானையாரின் வீட்டில் விபரீதம் ஒன்று நடந்துவிட்டது. உங்களை உடனடியாகக் கூட்டிவருமாறு கூறினார்கள். உண்மை பிடிபட்டு விட்டதோ, விதானையார் என்ன தண்டனை தரப்போகிறாரோ என அஞ்சியபடி கந்தசாமி அவர்களுடன் போனார். விதானையாரின் வீட்டில் மகனது உடல் கிடத்தப்பட்டிருந்தது. குடும்ப உறுப்பினர்கள் சுற்றி இருந்து அழுதபடி இருந்தனர்.

நாங்கள் அம்மன் கோவில் திருவிழா பார்த்து விட்டு வந்து வீட்டுக் கதவைத் திறக்கப்போக இவன் தலையிலிருந்து இரத்தம் வடிந்தபடி வாசலில் மடங்கியபடி விழுந்து கிடக்கிறான். பேச்சு மூச்சு இல்லை யாராவது அடித்துக் கொன்றார்களா? அல்லது இவன் எங்காவது விழுந்து காயத்துடன் எழுந்து வந்து வீட்டு வாசலில் விழுந்து இறந்தானா? ஒன்றும் புரியவில்லை. எனது மகன் குடிப்பதால் எனக்கும் அவனுக்கும் ஒத்துப் போவதில்லை. இவனை நான் பல தடவைகள் தண்டித்தும் இருக்கின்றேன். இவனால் எங்கள் குடும்ப மானம் கெடுவது கண்டு ஏசியும் உள்ளோம். "இவனுக்கும் எனக்கும் வன்மம் உண்டென்பது உறவினர்களுக்கும் கிராமத்துச் சனங்களுக்கும்" நன்றாகத் தெரியும். நான்தான் அடித்துக் கொன்றுவிட்டேன் என எண்ணுவார்கள். அப்போதும் எனது குடும்ப மானம் போய்விடும். நீங்கள் தான் எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என அழுதார்.

உடனே வைத்தியரை வரவழையுங்கள். இவன் மது வெறியில் தெருவில் விழுந்து மண்டை உடைந்திருக்கிறது என்றும், மருந்துவம் நடைபெறுகிறது எனவும் அறிவியுங்கள். உறவினர்கள் வரட்டும் அவர்கள் முன்னால் வைத்தியர் கட்டுப் போடட்டும் நாளை காலை மயக்கம் தெளிந்தால்தான் நல்ல செய்தி கூற முடியும் என வைத்தியர் கூறட்டும். அதன் பின் நாளை காலை அவன் இறந்து விட்டான் என அறிவிக்கட்டும் என்று கந்தசாமி யோசனை கூறினான். விதானையார் குடும்ப மானம் காப்பாற்றப்பட்டதே என எண்ணி பெருந்தொகை பணம் கொடுத்தார். இப்போ தெல்லாம் கந்தசாமி நேரம் பிந்தி வீடு வந்தாலும் மனைவி ஏசுவதில்லை. அவர் வரும் வரை காத்திருந்து உணவு பரிமாறி அவரைத் தூங்க வைத்துவிட்டுத்தான் தான் நித்திரைக்குப் போவதை வழமையாக்கிக் கொண்டுள்ளாள்.

**மகான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# தந்தை தாய் பேணல்

நாம் எமது தந்தை தாய் இருவரையும் எமது கண்களைப் போல எண்ணி மதிக்க வேண்டும். அந்த வகையில் நாம் எமது தாயினை பற்றி சிந்திக்கையில் ஒரு பெண்ணானவள் தாய்மை நிலையினை அடையும் போது அவள் மட்டில்லாத ஆனந்தம் அடைகிறாள். கருவறையில் சுமந்து தனது இரத்தத்தை உணவாக்கி, தனது சுவாசத்தில் பாதி தந்து எம்மை சுமந்து பிரசவிக்கிறாள். நாம் தவழும் வயதில் தானும் எம்முடன் துணையிருந்தாள்.

தந்தை தன் பிள்ளை எப்படி எல்லாம் இவ் உலகில் வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுக்கின்றான். நடைபயிலும் வயதில் இருகைகளையும் பிடித்து நடக்கக் கற்றுத் தந்தனர். இருவரும் எமது மழலைமொழி கேட்டு இன்பமடைந்தனர். தந்தை, தாய் இருவரும் எமது கண்கள். உடலில் மிக முக்கிய உறுப்புக்களில் கண்கள் எவ்வாறு முக்கிய இடம் பெறுகின்றதோ அதே போல அப்பா, அம்மா எமது வாழ்வின் வட்டத்தின் மிக முக்கிய அங்கத்தவர்கள் ஆவார்கள்.

எனவே தான் "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" தந்தையின் அனுபவமிக்க வார்த்தைகளை நாம் மதிக்க வேண்டும். அவர் கூறும் சொற்கள் அனைத்தையும் வேதவாக்காக நினைக்க வேண்டும். எதிர் காலத்தில் நாமும் இவ் நிலைக்கு வரும் போது எவ்வாறு குடும்பத்தினை வழி நடத்த போகும் தருணம் வரும் பட்சம் எம் நெஞ்சில் அலை மோதும். தந்தை எம் மகிழ்ச்சிக்காக தான் எவ்வளவு கடின வேலை என்றாலும் ஈடுபாடு காட்டுகின்றார்.

"தாயிற் சிறந்த கோவிலும் இல்லை எனும் பதத்தின் கருத்தினை எடுத்து நோக்கினால் தாயானவள் உயிர் கொடுத்து, உணவு கொடுத்து, சுவாசம் கொடுத்து எம்மை ஈன்று எடுக்கின்றாள். எம்மை பொறுத்தவரையில் எமக்கு உயிர் கொடுத்து இவ்வுலகிற்கு எம்மை வெளிப்படுத்தி அடையாளம் காட்டியவள் தாய். எத்தனை கோவில்களில் தெய்வங்கள் தரிசனம் தருகின்ற போதும் தாயினை விட எதுவும் சிறந்தது இல்லை. விநாயகருக்கும் முருகப் பெருமானும் மாம்பழம் யார் பெறுவது என போட்டி வந்த போது முருகன் உலகை வலம் வர தனது வாகனமான மயிலில் ஏறிச் சென்றார். ஆனால் விநாயகர் தனது தந்தை, தாயினை உலகம் என சுற்றி வந்து பழம் பெற்று, அன்னை தந்தையே உலகில் முதலானவர் என எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்றைய காலகட்டத்தில் பெற்றோர்கள் தமது வாழ்க்கையில் பாரமாக உள்ளனர் என முதியோர் இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். காலம் மாறும் வேகத்தில் தந்தை, தாயினை மறந்து தனது கண்கள் போல பணத்தையும், மறுகண்ணாக தொழில்களையும் நினைக்கிறார்கள். தானும் இவ்வுலகில் வசதியாக வாழ வேண்டும் என எண்ணும் பிள்ளைகள் வெளிநாடு செல்லும் பட்சத்தில் பெற்றோர்களை அனாதையாக கவனிக்காமல் விட்டு விடுகின்றார்கள். ஆனால் பெற்றோர்கள் எவ்வளவு துன்பங்கள், இடர்கள் வந்த போதிலும் பிள்ளைகளை நல்ல முறையில் ஆளாக்கி விடுகின்றனர். இதை சற்றும் உணராத பிள்ளைகள் அவர்களை பாரமாக எண்ணுகிறார்கள். தகாத நட்புகள் மூலமும் தவறான பாதையில் சீரழியும் பிள்ளைகள் இன்று பல மடங்காக உள்ளனர். புத்திமதிகள் கூறிய போது அவர்களின் சொல்லினை மதியாத பிள்ளைகள் வாழ்க்கையினை தொலைத்து நிர்கதியாக நிற்கின்றனர்.

"அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்" என்பவற்றுக்கு இணங்க நாம் பிறக்கின்ற நிமிடத்தில் இருந்து வாழ்க்கையின் எல்லைக்கு செல்லும் வரையில் நாம் கண்ட முதல் தெய்வம் எம் தாய் தந்தையரே. கோவிலில் காட்சி தரும் தெய்வங்களை நாம் வழிபட செல்கிறோம். அத் தெய்வத்தின் அருளினை விட வீட்டில் உள்ள எம்மை பெற்ற தெய்வங்களின் திருவடிகளை வணங்க வேண்டும்.

நல்ல பிள்ளைக்கு தாய், தந்தையினை தன் வாழ்க்கைக்கு உயிர் கொடுத்து ஒளி தந்த தீபத்தை போல நினைப்பான். அவர்களின் அறிவுரைகளை மதித்து நடப்பான். தாயினை நேசிக்கும் ஆண் மகன் தனது மனைவியையும் நேசிப்பான். பெண் ணானவள் தன் கணவனை தந்தையினை போல நேசிப்பாள். பெற்றோர் களை நாம் எவ்வாறேனும் பேணி காக்கவேண்டும். அவர்களை நாம் தூக்கி வீசினோமானால் எம்மையும் எமது சந்ததியினர் தூக்கி போடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

முதியோர் இல்லங்களிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நாம் "கண்ணை இமை காப்பது போல" வளர்த்து வாழ்க்கையினை வாழ கற்றுக் கொடுத்தவர்களை இடஞ்சலாக நினைக்கிறார்கள். இவ்வாறான பிள்ளைகள் இவ்வுலகில் வாழ்கின்ற வரைக்கும் இவ்வாறான முதியோர் இல்லங்கள் இன்னும் அதிகமாகவே திறக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எம் பெற்றோர்கள் முதியோர்கள் ஆகும் போது குழந்தை போல மாறுகின்றனர் அவர்களை குழந்தையினை போல நாம் பார்க்க வேண்டும். எமது தந்தை, தாயினை நாம் வாழ்நாட்கள் முழுவதும் காக்க வேண்டும். நடமாடும் தெய்வங்களாக எம் வாழ்வில் வந்த இரு தெய்வங்களையும் மதித்து பேணுவோம்.

*- நன்றி -*

செல்வி இ . தேனுகா
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# எமது பிரதேசத்தின் இளந் தயாரிப்பாளருடனான சந்திப்பு....



நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து நாங்கள் மீண்டும் எழுவோம் என்ற தற்துணிவுடன் எமக்கேயுரிய கலாசாரங்களை மீறாதவகையில் தனக்கேயுரித்தான தனித்துவத்துடன் செல்வன் திரு.சி.கவிமாறன் அவர்களது தயாரிப்பு கதைவசனத்தில் உருவாக்கப்பட்டு வெளிவந்து தடம் பதித்துள்ளது "என்னுள் என்ன மாற்றமோ" திரைப்படம். இந்தியாவிலிருந்து வெளிவரும் குப்பைகளிலிருந்து (திரைப்படங்களாகட்டும், நாவல்களாகட்டும், நெடும் தொடர்களாகட்டும்) விலகி, சகோதர மொழி, வளர்த்து வரும் இலக்கிய, திரைப்பட, நாடகங்களுடன் போட்டியிடத் தகைமை பெற்ற என்னுள் என்ன மாற்றமோ தயாரிப்பாளர் - இயக்குனர் கவிமாறன் அவர்களின் குறும்படமான "கரும்பலகை" பேசாமலே எல்லாவற்றையும் பேசுகின்றது. நிதர்சனம் என்னவெனில் மிகப்பெரிய மாற்றம் ஒன்றை யாழ் / சமூகரீதியிலும், சிந்தனையிலும் அடிப்படையிலிருந்தே ஏற்படுத்தவுள்ளதென்பதேயாகும். இயக்குனரும் தாயரிப்பாளருமான இவர் எமது பிரதேசச் சொத்து, எங்கள் வேலன்பிராய் மண்ணின் வித்து. எமக்கெலாம் பெருமை சேர்த்த முத்து. இவரும் இவரைப் போன்ற பலரும் இங்கு பிறந்திருக்கிறார்கள். வாழ்ந்திருக்கிறார்கள். இன்னமும் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இலை மூடிய மலராக இருந்து மணம் வீசும் இவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவே முயன்று வரும் "இளந்தளிர்" இவரை வாழ்த்துவதுடன் வளரும் கலைஞர்களை ஊக்குவித்தும் வருகின்றது. அந்தவகையில் இளந்தளிர் - 3 க்காக இவரை இவரது இல்லத்தில் சந்தித்து உரை யாடினோம்.

**வணக்கம் தம்பி! நாங்கள் இளந்தளிர் - 3 க்காக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.**

வணக்கம் ! வாருங்கள் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக கலாசார முன்னேற்றத்தில் திரைப்படங்கள் எவ்வாறு பங்காற்றலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்.**

திரைப்பட ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு ஊடகம். பார்க்கும் ஒவ்வொரு ரசிகனையும் தன்னுள் ஈர்த்து, கட்டிப்போட்டு தான் சொல்ல வந்த கருத்தை ஆழமாக அவன் மனதில் பதித்து விடக்கூடிய சாதனமாகும். ஒருவன் அவதானிப்பதால், அல்லது ஒரு காட்சியைக் காண்பதால் அவனுள் ஒருவகை மாற்றம் உண்டாகும். ஒரு தாக்கத்தை உண்டாக்கும். பத்திரிகைகளும் பலமான ஊடகங்கள் தான். ஆனால் அவை கற்று வாசிக்க கூடியவர்களை மட்டுமே தெளிவு உண்டாக்கும். கல்வி கற்றிருந்தும் வாசிக்கும் பழக்கமில்லாத கற்றவர்களையும், எழுத வாசிக்க வேண்டிய அளவுக்காயினும் கல்லாதவர்களையும் எழுத்தறிவே இல்லாதவர்களையும் சேர்த்து, உழைத்துக் களைத்து வந்திருப்பவர்களை உல்லாசப்படுத்தும் அதேவேளைகளில் உண்மை வாழ்க்கைமுறைமையையும் எடுத்துக்காட்டி வரும் திரைப்படங்களால் புதிய சமுதாயக் கட்டமைப்பை உருவாக்க முடியும். என நாம் திடமாக நம்புகின்றோம். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்து வருகின்றோம்.

**நல்லது திரைப்படங்கள் எல்லாமட்ட மக்களையும் சென்றடைகின்றதென்பதும் அவர்களை உல்லாசப்படுத்துகின்றதென்பதும் உண்மை தான். ஆனால் இன்று மக்களிடையே வன்முறைகளையும், வன்புணர்ச்சிகளையும், வக்கிர எண்ணங்களையும் வளர்த்து விடுபவைகளாகவல்லவோ திரைப்படங்கள் வளர்ந்து வருகின்றன.**

பொதுவாகப் பார்த்தால் அப்படியொரு தோற்றப்பாடு உள்ளது தான். ஆனால் ஆழ நோக்கினால் உண்மை புரியும். வன்முறைக்கலாசாரத்தை சினிமா மட்டும் வளர்க்கவில்லை. வாசிக்கும் நூல்கள், காணும் காட்சிகள், சந்திக்கும் பிரச்சினைகளும் வளர்க்கின்றன. சிலவேளைகளில் வன்முறைகளால் பிரச்சினைகள் தீர்வதும் உண்டு. இதைக்கண்டு ஒருவர் வன்முறையை நாடினால் ஊடகங்கள் பொறுப்பல்ல. அவரவர் மனவளர்ச்சியே இங்கு முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இன்னொன்று எதற்கெடுத்தாலும் சீரழிவுகளைப் பற்றிப்பேசியே பழகிவிட்ட நாம் சீர்ப்படுத்தல்களைப் பார்ப்பதில்லை. எதிர்மறையான விடயங்கள் இலகுவில் பற்றிக் கொள்ளப்படக்கூடியவை. என்பதால் அவற்றை மக்கள் பின்பற்றுகிறார்கள். ஒருகணிப்பீட்டுக்காகப் பார்த்தால் 10 எதிர்மறையாளர்கள் உருவாகும் வேளை அமைதியாக எந்தச்சந்தடியும் இல்லாமல் 3 - 4 நேர்மறை எண்ணங் கொண்டவர்களும் வளர்கிறார்கள் தான். இவற்றை ஒருவரும் எடுத்து விளக்குவதும் இல்லை. உற்சாகப்படுத்துவதும் இல்லை. இது அவரவர் மனது சம்பந்தப்பட்ட விடயம். யானை பார்த்தகுருடர்கள் போல பிரச்சினைகளை வளர்ப்பதை விட்டு யானையை அறிந்து கொள்ள முயல வேண்டும். பழகிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் குறிப்பிடுவது சரிதான். எதிர்மறை விளைவுகளைப்பற்றிப் பேசிப்பேசி எமது நேரத்தையெல் லாம் வீணாகக் கழித்துக் கொண்டிருக்கின்றோம். மனதில் நல்ல எண்ணங்களை அன்பை அகிம்சையை, காதலை பாசத்தை நேசத்தை வளர்க்கும் பணியில் திரைப்பட ஊடகத்தின் பங்கு எத்தகையினதாக இருக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்.



அன்புதான் உலகமகாசக்தி. அயலவனை நேசிப்பதுதான் உயர்ந்த மனிதம் ஏழ்மையில் - அது எந்த வடிவில் இருந்தாலும் அவனை எல்லாவகையிலும் மேலுயர்த்தி வைக்க முயல்வதுதான் உயர்ந்த மனித இலட்சியமாக இருக்க வேண்டும். ஒரு நோயாளிக்கு அன்பு காட்டும் தாதி போல, பார்வையற்றனை தெருவின் அடுத்த பக்கம் கூட்டிச் சென்றுவிடும் ஒரு தொண்டன் போல" தன்னலமற்று உதவ வேண்டும். அதுதான் தூய அன்பாக இருக்கும். இவ்வாறான தூய அன்பு இளவயதில் இரு எதிர்பாலாரிடம் ஏற்படும் போது அது காதலாக மாறுகின்றது. இத்தகைய அன்பு கொண்டவர்கள் இறுதிவரை சிறந்த நண்பர்களாகவே வாழ்வதும் உண்டு. அப்படியிருக்க இன்று காதல் என்ற பெயரில் காமம் வளர்வதுதான் வேதனைக்குரியது. காமத்துக்கான காதல் காதலே அல்ல. அது வெறும் உணர்ச்சிகளின் வடிகால்தான். துன்பம் வந்தால் தவிப்பது போல துயரம் வந்தால் அழுது தீர்ப்பது போல, உண்மையான அன்பு காதல் பாசம் என்பதை விளக்க நாங்கள் திரைப்படங்கள் தயாரித்தால் அடிமட்ட ரசிகனால் அதைப்புரிந்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாதாகையால்தான். சற்று நெகிழ்வுப் போக்கை அனுமதிக்க வேண்டியிருக்கு. இனிப்பை வழங்கி பிள்ளையை தன் வழிக்குக் கொண்டுவருவது போல

அரிய - உயரிய சிந்தனைகளுடன் நீங்கள் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபடுகிறீர்கள் என்பது புரிகின்றது. இது போன்ற சிந்தனைகளை மையப்படுத்தி திரைப்படம் எடுப்பது எவ்வகையிலும் பொருளாதார லாபம் கருதியதாக இருக்காது. அந்த வகையில் உங்கள் முதலீடுகளின் பங்காளிகள் யார்? குடும்ப உறுப்பினர் எவ்வகையில் இதை ஏற்றுக் கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கேள்வி இது. பொதுவாக நல்ல கருத்துக்களைக் கூற முன்வரும் எவருக்கும் ஏற்படக்கூடிய நெருக்கடிகளும், தடைகளும் எமக்கும் ஏற்பட்டது உண்மைதான். ஆரம்பநாட்களில் நேரம்பிந்தி வீட்டுக்கு வருவது கூட வீட்டாருக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. எனது குறும்படங்கள் ஏனைய ஆக்க வெளிப்பாடுகள் எனக்கு தந்த மதிப்பீடுகளால் ஓரளவு நிலமைகள் சரியாகியுள்ளது. பொருளாதார லாபம் கருதியோ வியாபார நோக்கிலோ நாம் திரைப்படங்கள் தயாரிக்கவில்லை. எமது எண்ணங்கள் - சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற பெரு எண்ணத்தில், வீங்கிப்பெருத்து எல்லோரையும் சென்றடையக்கூடிய ஊடகமாக திரைப்படத்துறை இருப்பதால் இத்துறையைத் தேர்ந்தெடுத்துள்ளோம். என்னுடன் இணைந்துள்ளவர்களும், எல்லாமாணவர்களும் என்னை உற்சாகப்படுத்தியும் பேராதரவும் தந்து வருகின்றனர். அவர்களுக்கும் என்னை ஊக்குவிப்பவர்களுக்கும் நன்றி தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்கின்றோம். நன்றி, நன்றி உங்கள் அனைவருக்கும் நன்றி (கண்கள் பிரகாசிக்கின்றன- நீர் அரும்புகின்றது. உணர்ச்சி வசப்படுகிறார்)

**நல்லது உங்கள் பல்கலைக்கழக கல்வி எவ்வாறிருக்கிறது. இரண்டு துறைகளிலும் ஈடுபடுவது உங்களுக்கு பிரச்சினையாக இருப்பதில்லையா?**

நேரம் தான் பெரும் பிரச்சினை. இயக்குனர் கூறுவது போல நடித்து விடுவது இலகு அல்ல. நானே இயக்கி நடிப்பது என்பது பெரும் சவாலாகவே உள்ளது. நான் விரும்பும் முக பாவங்களையும் நடிப்பையும் இன்னொருவரைக் கொண்டு செய்யவிக்க எடுக்கும் சிரமத்தை விட இயக்கும் நானே பாத்திரத்தை எவ்வாறு உருவகித்தேனோ அவ்வாறு நடிப்பதால் வேலைகளைச் சுலபமாக்கியுள்ளேன். அடுத்து நான் பல்கலைகழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் படிக்கின்றேன். அப்பயிற்சி நெறி தான் என்னுள் இருந்த ஆக்கும் திறனை வெளிக் கொணர்ந்தது. நான் இப்பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது அறிந்து என்னை பலவகையிலும் தொடர்ந்தும், ஊக்கி உதவி வருகின்ற பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவருக்கு நான் என்றென்றும் நன்றியுடையவனாவேன்.

தம்பி நாங்கள் ஆச்சாரிமார். புதிது புதிதாக படைப்பவர்கள் மட்டுமல்ல, மற்றவர்களுக்குக் கற்றும் கொடுப்பவர்கள். படைப்பதால் நாம் பிரம்மாவாகின்றோம். கற்றுத் தருவதில் நாம் ஆச்சாரியர்கள் - (துரோணர், வில்லிபுத்தூரர் விதுரர் போன்றவர் பரம்பரையினர்) ஆவதால் தான் விஸ்வப்பிரம்ம குலத்தைச் சேர்ந்தவர்களாகின்றோம் என்று அடிக்கடி கூறி என்னுள் இருந்த படைப்பாற்றலை வெளிக்கொண்டுவந்தவர் அவர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லது உங்களுக்கு ஏற்பட்ட, அல்லது எதிர்நோக்கும் பிரச்சினைகள்..... இளம்இயக்குனர் தயாரிப்பாளர்களுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்புவது........**

இச்சந்தர்ப்பத்திலே இளந்தயாரிப்பாளர்களிற்கு நான் சொல்வது நீங்கள் இந்தத் துறையை தேர்ந்தெடுத்தீர்களானால் அதிலே இறங்கி நீண்ட தூரம் விடாமுயற்சியோடு பயணிக்க வேண்டும். ஈழத்தை பொறுத்தவரை எமக்கு இத்துறையில் பிரகாசிக்குமளவிற்கு களங்கள் அமைவது கடினமான ஒன்று. எனவே எம்மிடம் உள்ள சிறிய சிறிய வளங்களை கொண்டே நாம் உயர வேண்டும். விடாமுயற்சிதான் இங்கு அவசியம். மனம் தளராமை மேலும் எவ்வளவோ சவால்களை நாம் இத்துறையில் சந்திக்க வேண்டும். இருப்பினும் அவற்றை எல்லாம் தாண்டி செல்வீர்களானால் எல்லோருக்கும் பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கின்றது. பிறிதொன்று வெளியே நின்று நோக்கும் போது கவர்ச்சிகரமானதும் சக்தி மிக்க ஊடகமாகத் தோன்றினாலும் களத்தில் இறங்கினால், விடுபடமுடியாமலும் விட்டு விலக மனமில்லாமலும் தினம் அல்லாட நேரும்.

**ஆம், ஒவ்வொரு சாதனைகளுக்கும் பின்னால் பல சவால்கள், பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றையெல்லாம் தாண்டி முழுமையான ஒரு படைப்பை வெளியிடுவதில்தான் அப்படைப்பு முழுமையடைகிறது. அந்த வகையில் சவால்கள் என்று பார்க்கையில்,**

ஈழத்திலே தமிழ் சினிமாதுறை என்பது ஒரு நலிவுற்ற கலையாகவே உள்ளது. இங்குள்ள கலைஞர்களை அடையாளம் காண்பதென்பது மிகவும் கடினமானதொன்று. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்களை அவர்களின் முழுத்திறனையும் வெளிக்காட்டச் செய்தல் என்பதும் கடினமான ஒரு காரியமே ஆகும். காரணம் அனேகமான கலைஞர்களிற்கு இதுதான் முதல் அனுபவமாக உள்ளது. மேலும் சினிமாவில் தயாரிப்பு என்பது எமக்கு மிகப் பெருஞ்சவாலாகவே காணப்பட்டது. அதாவது ஒரு படத்தை எடுத்து முடிக்க வேண்டுமானால் அதற்கு பல இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கும். இது இவ்வாறு இருக்க எமக்கென ஒரு தயாரிப்பாளர் இல்லாத நிலமையில் தான் நான் இத்திரைப்படத்திற்கு காலடி எடுத்து வைத்தேன். இருப்பினும் பல பிரச்சினைகள் ஏற்பட்டது. படத்தை பாதியிலேயே கைவிட்டு விடுவோமோ என்றும் எண்ணத் தோன்றியது. இருந்தாலும் எம்மிடமிருந்த தன்னம்பிக்கையும் கடின உழைப்புமே இதனை ஒரு முழுமையான படைப்பாக வெளிக் கொண்டு வர வைத்தது.

மேலும் பெண் கலைஞர்கள் தேர்ந்தெடுப்பதும் அவர்களைப் படப்பிடிப்புகளுக்கு கூட்டிச் செல்வதும், யாழ்ப்பாணக் கலைஞர்களுக்கு இன்றும் பிரச்சினையாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்து முதலிடயாரும் முன்வரார்: அதிலும் புதிய தயாரிப்பென்றால் கொஞ்சம் யோசிப்பார். புதுமைப் படைப்பென்றால் திரும்பியே பார்க்க மாட்டார். மசாலாப்படங்கள் தயாரிப்பது எமக்கு உடன்பாடில்ல. நல்ல கருத்துக்கள் மக்கள் மனதில் விதைக்கப்படவேண்டும் என்பதில் நாம் மிகக் கவனமாகயுள்ளோம்.

நன்றி தம்பி, நன்றி

சமூக மாற்ற துடிப்பும் ஆர்வமுள்ள ஒரு இளங் கலைஞரைச் சந்தித்த திருப்தியுடன் விடைபெற்றோம். முற்போக்கு எண்ணங் கொண்டவர்கள் இவர்களுடன் இணைந்து முதலிட முன்வர வேண்டுமெனவும் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# கல்வி

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்றார் அதி வீரராம பாண்டியன். கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை என்றார் திருவள்ளுவர். இவர்களது வாக்கிற்கு இணங்க நாம் கல்வி கற்றல் வேண்டும். இக் கல்வியினைப் பற்றி சிறிது நோக்குவோம்.

உலகினிலே இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று பொருட் செல்வம் மற் றையது கல்விச் செல்வம் ஆகும். பொருட் செல்வமானது பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைவுபடும், நீராலோ, நெருப்பாலோ அழியக் கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ வெந்தழலால் வேகாது, கள்வரால் களவாட முடியாதது, கொடுக்குந் தோறும் பெருகிக் கொண்டே செல்லும் இதனால் தான் கல்விச் செல்வத்திற்கு நிகரான செல்வம் ஏதுமில்லை என்று நம் முன்னோர் போற்றினர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்று ஓர் முதுமொழி உள்ளது. எண் என்பது கணிதத்தையும் எழுத்து என்பது இலக்கண இலக்கியத்தையும் குறிக்கும். இவ் எண்ணையும், எழுத்தையும் நாம் நம் இரு கண்களாகக் கொள்ள வேண்டும். ஓர் மனிதனிடத்து உள்ள அறியாமை ஆகிய இருளைப் போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி . கண் உடையவர்கள் எனப் போற்றப்படுபவர்கள் கற்றோர், மற்றையவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்கள் என கூறப்படுகின்றனர். அதாவது கற்றோர் கண்ணுடையர் கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையவர்கள் கல்லாதவர்க ளிடமுள்ள கண் புண்களேயாகும். கல்வியானது எமது இம்மைக்கும் மறுமைக்கும் வழி காட்டுகின்றது. வேந்தனுக்கு அவன் தேசத்தில் மட்டும்தான் சிறப்புண்டு. ஆனால் கற்றறிந்தவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு.

“உற்றதுணை உறுதுயர் நீங்கி ஐயந்திரிபறக் கற்போம்” என்றார் வீர நெடுஞ் சோழியம் என்னும் பாண்டிய மன்னன். இவர் கற்க வேண்டிய முறையை மிகவும் சிறப்பாகக் கூறியுள்ளார். நாம் ஓர் நல்ல ஆசானை நாடி அவர் கூறுபவற்றைக் கேட்டு அக் கூற்றுக்கு மதிப்பளித்துக் கற்க வேண்டும்.

கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டிய முறைப்படி கற்க வேண்டும். கற்க வேண்டிய பருவத்திற்குள் கற்க வேண்டும். இளமையிற் கற்பதே சிறந்த செயலாகும். “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற முது மொழியையும் மறக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கு வயதுக் கட்டுப்பாடு என்பதே இல்லை. வாழ்நாள் முழுவதுமே கற்கலாம். பாடை ஏறினும் ஏடது கைவிடேல் என்ற கூற்றையும் நாம் மறக்கக் கூடாது. திருவள்ளுவர், பாரதியார், பாவேந்தர், பாரதிதாசன் போன்ற பல பெரியோர்கள் மறைந்து பல வருடங்களான போதும் அவர்களது புகழ் இன்றும் நிலைத்து இருக்கின்றது. அதற்கெடுத்துக் காட்டாக திருவள்ளுவரினது திருக்குறள் உலகப் பொதுமறை என்று கூறப்படுகின்றது. திருக்குறள் அனைவராலும் விரும்பிக் கற்கப்படுகின்றது. அதே போன்று மகாகவி சுப்பிரமணியபாரதியாரது கவிதைகள் இன்றும் நிலைத்து இருக்கின்றது. அவர்கள் இறந்த பின்னரும் அவர்களது சிலைகள் ஒவ்வொரு இடங்களிலும் காணப்படுகின்றது. இதேபோன்று மாணவர்களாகிய நாமும் கற்று எதிர்காலத்தில் நற் பிரஜைகளாக வாழ்வோம்.

கல்வி என்ற மூன்றெழுத்தினால் பல எழுத்துள்ள பல பெயர்கள், பட்டங்கள் எமக்கும் கிடைக்கும். இப்பெயரினைப் பெறுவதற்கு நாம் சலியாது முயற்சிக்க வேண்டும். எமக்கு முன் வாழ்ந்த நாயன்மாரது பொற்றிருப் பாதங்களை போற்றி அவர்கள் கூறிய வாக்கின்படி கற்றல் வேண்டும். "கற்றிடு அதை நன்றே கற்றிடு நன்றே கற்றவற்றை ஐந்திரி பறக் கற்றிடு" என்பது நம் முன்னோர் வாக்கு அவர்களது வாக்கிற்கு இணங்க மாணாக்கப் பருவத்தில் கற்க வேண்டியவற்றை கற்க வேண்டும். அவற்றை நன்குணர்ந்து கற்க வேண்டும். அவற்றினை நன்கு புரிந்து கொண்டு கற்க வேண்டும். அதன் வழி நடக்க வேண்டும்.

எனவே மாணவர்களாகிய நாம் அழியாத செல்வமான கல்விச் செல்வத்தை பெற்று இவ் வையத்து வாழ் வாங்கு வாழ முயற்சிப்போமாக.

*கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின்*
*நிற்க அதற்குத் தக.*

செல்வி. சி. பிரியங்கா
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

## மாணிக்கவாசகர்

பாண்டி நாட்டில் திருவாலூரில் சம்புபாதாசிரியருக்கும், சிவஞான வதியாருக்கும் மகனாக மாணிக்கவாசகர் பிறந்தார். இவரது இயற் பெயர் திருவாலூரர் ஆகும். இவர் பாண்டி நாட்டை ஆண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னனின் முதலமைச்சராக இருந்தார். இதனால் இவருக்கு மன்னன் தென்னவன் பிரமராயன் எனும் பட்டத்தை சூட்டி பல விருதுகளை அளித்தான். திருவாலூரர் சிறுவயதிலேயே கல்வி கலை களையும் கற்றுத் தேர்ந்தார். இவர் திருவாலூரர் எனவும் அழைக்கப்பட்டார். ஒரு முறை மன்னன் திருவாலூரரிடம் குதிரைகள் வாங்குவதற்காகப் பணத்தைக் கொடுத்து அனுப்பினார். திருவாலூரர் கீழைக் கடற்கரை துறை முகத்திற்கு சென்றார். அப்பொழுது திருப்பெருந்துறையில் உள்ள இறைவன் பால் அவரது மனம் சென்றது. திருவாலூரர் தன்னுடன் வந்தவர்களை திருப்பி அனுப்பி விட்டு தான் மட்டும் திருப் பெருந்துறை இறைவன் ஆலயத்தில் தங்கினார். இறைவன் சிவசின்னங்களை தரித்து சிவயோகியாக குருந்த மர நிழலில் அமர்ந்திருந்தார். இதனைக் கண்ட திருவாலூரர் அவரிடம் சென்று தன்னை சீடராக ஏற்குமாறு கேட்டார். சிவயோகி அவருக்கு தீட்சை வழங்கினார். அன்று முதல் திருவாலூரர் மாணிக்கவாசகர் என அழைக்கப்பட்டார். அவருடன் உடன் வந்தவர்கள் அரசனிடம் சென்று நடந்ததைக் கூறி னார்கள். இதனால் கோபங் கொண்ட அரசன் திருவாலூரரை அழைத்து ஏன் குதிரை வாங்கவில்லை எனக் கேட்டார்? இதனைக் கேட்ட மாணிக்கவாசகர் ஆவணி மூலநாளில் குதிரைகள் வரும் எனக் கூறி னார். இதைக் கேட்ட மன்னன் அவரை சிறையில் அடைத்தான். மாணிக் கவாசகரை சிறையில் அடைத்த செய்தி அறிந்த இறைவன் நரிகளைப் பரி களாக்கி அரச னிடம் அனுப்பினார். இதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த மன்னன் மாணிக்கவாசகரை சிறையில் இருந்து விடுவித்தான்.

இரவுப் பொழுது பரிகள் எல்லாம் நரிகளாக மாறி நாட்டிற்கு சேதம் விளைவித்தன. கடும் கோபம் கொண்ட மன்னன் வைகை ஆற்றின் சுடுமணலில் இவரை நிறக வைத்துத் தண்டித்தான். இறைவன் வைகை ஆற்றை பெருக் கெடுத்தோடச் செய்தான். இதனை அறிந்த மன்னன் மாணிக்கவாசகர் இறைவனின் அருளைப் பெற்றவர் என்று நினைத்து அவரை விடுதலை செய்தான். மாணிக்கவாசகர் விடுதலை பெற்ற பின் முதலமைச்சர் பதவியைத் துறந்து துறவியாக வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

துறவியாக வாழ்ந்து வரும் வேளையில் பௌத்த பிக்குகள் இவருடன் வாதம் புரிய வந்தனர். இதனை அறிந்த மாணிக்கவாசகர் வாதம் புரிந்து சைவசமயமே வண்மைச் சமயம் என நிலை நாட்டினார். இவர் வாழ்ந்த காலம் 84 வருடங்கள் ஆகும். இவர் பல அற்புதங்களை செய்தார்.

இவர் செய்த அற்புதங்களில் நரிகளை பரிகளாக்கியமை, ஊமைப் பெண்ணை பேச வைத்தமை என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இவர் ஆனி மாத மக நட்சத்திர நாளில் வெள்ளை யானை மீது எறி கைலையை அடைந்தார்.

*- நன்றி -*

செல்வி. சி. கஜந்தா

யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# 20 21 ம் நூற்றாண்டில் விஞ்ஞான, மெஞ்ஞான போக்கும் மனிதமும்

இறைவன் உலகத்தைப் படைத்தான். உலகினுள்ளே பல நாடுகளைப் படைத்தான். படைத்தவன் தன் சாயலே உருவான அழகான மனிதர்களைப் படைத்தான். மனிதனுள்ளே ஆசையை, அன்பை, அஹிம்சையை, புரிந்துணர்வைப் படைத்தான். ஆனால் மனிதனோ தனக்குத் தேவையான அன்பை, அஹிம்சையை, புரிந்துணர்வை விடுத்து, ஆசையையும், ஆணவத்தையும் மட்டும் வளர்த்துக் கொண்டான்.

இந்த இடத்தில் மெய்ஞானத்தினுடைய தோற்றம் மனிதனுக்கு தேவைப்பட்டது. இப்போது மெய்ஞானம் என்றால் என்ன என்கின்ற ஒரு கேள்வி எழுகின்றது. எமது உள்ளத்தினாலே இறைவனை உணருகின்ற ஒரு நிலையே மெஞ்ஞானம் என்பது. புறக்கண்ணால் காணமுடியாத இறைவனை அகக்கண்களால் கண்டு உணரும் தன்மையை வளர்த்து விடுவது மெஞ்ஞானம் ஆகும்.

இந்த மெஞ்ஞானத்தை உணர்வதற்கு சமயம் வழிகாட்டுகின்றது நெறிப் படுத்துகின்றது. வாழும் முறை அல்லது வாழும் கலை என்பது சமயம் ஆகும். இதிலே சிவனை முழுமுதற்கடவுளாக கொண்ட சமயமே நமது சைவசமயம் ஆகும்

எமது மூதாதையோர் சைவ சமயத்தினுடைய பண்பாடுகளையும், கலா சாரங்களையும் விழுமியங்களையும் பழக்கவழக்கங்களையும் உயிரினும் மேலாக கொண்டு வாழ்ந்தனர். ஆனால் இன்று கடவுள் என்பவர் யார்? கடவுள் எங்கு இருக்கிறார்? அவர் எப்படி இருப்பார்? கடவுள் என்பது உண்மையா? அல்லது வெறும் கற்பனையா? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்ற காலமாக இன்றைய காலம் மாறிவிட்டது.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று தேடினால் கிடைக்கின்ற விடை விஞ் ஞான வளர்ச்சியாகும். மெஞ்ஞானத்தை விஞ்சியதாக இன்றைக்கு விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதில் எதுவித ஐயமும் இல்லை. இவ் விஞ் ஞானத்தின் வளர்ச்சி மெஞ்ஞானத்தினை பாதிப்பது மட்டுமல்லாது மனிதத்தையும் இன்று குழி தோண்டிப் புதைப்பதாக இருக்கிறது. மெஞ்ஞானிகள் தங்கள் அறிவாலும் அனுபவத்தாலும் புரிய வைத்த மெஞ்ஞான அறிவு போதிய அளவு விளக்கங்களுடன் எடுத்துச் செல்லப்படாமையால், ஏன், எதற்கு எப்படி என்ற கேள்விகளுக்கு நிறுவப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகளுடன் விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் யாவும் முன்னரும் இருந்த விடயங்களை நிறுவியவை மட்டுமே. இவர்களால் நிறுவப்படாத பல உண்மைகள் இன்னமும் உள்ளன. நிறுவப்படாததால் அவை இல்லையென்றாகி விடாது.

கோயிலுக்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்று ஒரு விதிமுறை இருக்கின்றது. ஆண்கள் வேட்டியுடனும் பெண்கள் சேலையுடனும் செல்வது தான் எமது சைவசமய பண்பாடு. ஆனால் இன்று எவ்வாறு கோயிலுக்கு செல்கின்றோம் என்பது பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு தேவை ஏற்படுகிறது. ஜீன்ஸ் உடனும் ரீசேட்டுடனும் ஆணுக்குப் பெண் சமம் என்கின்ற நியாயப்படி ஆண் யார்? பெண் யார்? என்று வேறுபாடு காணமுடியாத அளவிற்கு இன்றைய உடைகளினுடைய கலாச்சாரம் மனிதர் மத்தியில் தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது. இவற்றுக்கு காரணம் யாது என்று பார்த்தால் அதற்குக்கூட விடை விஞ்ஞானமாகத்தான் இருக்கின்றது. ஒருவருடைய நாளாந்த கடமைகளைச் செய்து முடிக்க அவை ஒருவகையில் உதவியாகவும் இருக்கலாம்.ஆனால் கலாசாரச் சீரழிவு உண்டாக்க அனுமதிக்க முடியாது.

கோயிலிலே அந்தணர் தீபம் காட்டுகின்ற பொழுது அடியவர்களினுடைய கைகூப்பிய படி தலைக்கு மேலே போய் இறைவனை வணங்கிய காலம் போய் இன்றும் கை தலைக்கு மேலே செல்கிறது தான் ஆனால் வணங்குவதற்காக அல்ல நிழற்படம் பிடிப்பதற்காக கமரா (Camera) உடனும் கைத்தொலைபேசி உடனும் கையிரண்டும் தலையின் மேல் உயர்த்தப்படுகிறது. இந்நிலைக்கு காரணம் என்னவென வினாவினால் அதற்கும் விடை விஞ்ஞானம் தான்.

தனியனே விஞ்ஞானத்தை மட்டும் குற்றம் கூறிக் கொண்டிருப்பதில் எதுவித பயனும் இல்லை. இவையெல்லாவற்றிற்கும் முழுமையான காரணம் மனிதர்களாகிய நாம் மட்டுமே. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது போல விஞ்ஞானமும் பிறக்கின்ற பொழுது நல்ல விடயங்களுக்காகவே உருவாக்கப்பட்டவை. ஆனால் அது காலப் போக்கில் மனிதனுடைய போட்டிகளினாலும் பொறாமையினாலும் தீய செயல்களுக்கு காரணமாகிவிட்டது. பிறரை விடத் தான் மேம்பட்டவன் என்ற நினைப்பு ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் பிறப்புடன் வருவது தான், அதற்காக அழகென நினைத்து அவலட்சணமாக அணிந்து திரிய வேண்டியதில்லை. நடைமுறை வாழ்வைப் பார்த்தால் ஆதிவாசிகளின் வாழ்வு முறைக்கும் கலாசாரத்திற்கும் நாம் மாறிக் கொண்டிருக்கின்றோமோ என்று எண்ணத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகிறது. ஆரம்பித்த இடத்துக்கு மீண்டும் வருவதால் ஆட்டம் முடிந்து விட்டதோ என்ற அச்சத்தையும் தருகின்றது.

ஆகவே மனிதனுடைய மாண்பும் மானிடப் பண்பும் மதிக்கப்படாத வரையில் விஞ்ஞானம் வீணாகத்தான் போகும். எனவே மனிதத்தைக் காக்கவும் மானிடப் பண்பைப் பேணவும் விஞ்ஞானத்தை பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு சைவசமயத்தினுடைய பண்பாடுகள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள் என்பது எமது உயிரிலும் மேலாகப் பேணப்பட்டு அடுத்த சந்ததிக்கு நம் பாரம்பரியங்களையும், பழக்கவழக்கங்களையும் எடுத்துக்கூறி அனைவரையும் வாழ்வாங்கு வாழ வழிஅமைக்க வேண்டும்.

"மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் வண்ணம்" வாழ்வோம் என உறுதிமொழி பூண்போம்.

வ. கபிலன்
A/L (2013)

---

**வெற்றிக்கான பாதை மிகவும் கடினமானது. கரடுமுரடானது. கத்திமுனையில் நடப்பது போன்றது. ஆனாலும் மனம் சோர்வடைய மாட்டோம்! விழித்துக் கொள்வோம்! எழுந்திடுவோம்! இலட்சியம் அடையும் வரை இடையறாது உழைப்போம். அழுவதாலும் தொழுவதாலும் ஆகப் போவது எதுவும் இல்லை. நாம், நாம் தான் எமது வெற்றிக்காக உழைக்க வேண்டும். இடையறாது உழைக்க வேண்டும்.**

**– வழிப்போக்கன் –**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் தின நிகழ்வுகள் 02.02.2013



விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்படுகின்றனர்



முதன்மை விருந்தினர் மங்கல விளக்கேற்றுகிறார்



திருமதி. வ. மேகலிங்கம் அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. நவமணி செல்லையா அவர்கள்
மங்கல விளக்கேற்றுகின்றார்



திரு.திருமதி. க. தங்கராசா மனோரஞ்சினி அவர்கள
மங்கல விளக்கேற்றுகின்றனர்




செல்வி. விஷ்ணுகா, செல்வி. சர்விகா வரவேற்பு நடனம் அளிக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவிகள் இறைவணக்கம் செலுத்துகின்றனர்




செல்வி. அ. யுஜிதா வரவேற்புரை நிகழ்த்துகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முதன்மை விருந்தினர் திரு. வே. மகேந்திரராஜா அவர்கள் பரிசில்கள் வழங்குகிறார்



திரு.க. அருளானந்தம் அவர்கள்
பரிசில்கள் வழங்குகிறார்



திரு.க. தங்கராசா அவர்கள்
பரிசில்கள் வழங்குகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. க. வன்னியசிங்கம் அவர்கள்
பரிசில்கள் வழங்குகிறார்



திருமதி. து. மங்கையர்க்கரசி அவர்கள்
பரிசில்கள் வழங்குகிறார்




மாற்றுத்திறனாளிகள் இன்னிசை இசைக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 அறநெறிப் பாடசாலை அமைப்பில்..... அதிபரின் அனுபவங்கள்

உலகில் சமயங்களும் அவைசார்ந்து பின்பற்றப்பட்டு வரும் வாழ்க்கை நெறிகளும் மிக மோசமான அளவில் மீறப்பட்டு வரும் காலங்களில் அவற்றை மீளக்கட்டி எழுப்பும் பெருநோக்கில், கிராம மட்டத்தில் கிராமத்தில் அமைந்துள்ள ஆலயங்களுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களையும் மக்களையும் நன்நெறிப்படுத்தி வரும் நிறுவனங்களாக அறநெறிப்பாடசாலைகள் உருவெடுத்து வருகின்றன. இந்து கலாசார அமைச்சு செயல்படத் தொடங்கிய காலங்களுக்குப் பன்நெடுங்காலங்களுக்கும் முன்னரே இவ்வமைப்புகள் ஆலயங்களில் இயங்கிவந்தன. பஜனைகள், கூட்டுப்பிரார்த்தனைகள், சமயக்கருத்தரங்குகள் எனவும், போட்டிகள் பரீட்சைகள் எனவும் பல்வேறுபட்ட வடிவங்களில் நடைபெற்று வந்தன. கிராமியப் பாடல்களும் புராண இதிகாசக் கதைகளும் உடுக்கின் இசையுடன் கூறப்பட்டு வந்தன. காலத்துக்குக் காலம் ஏற்படும் கருத்துருமாற்றங்களுக்கேற்ப இவ்வடிவங்கள் மாறுதலடைந்துவந்த போதிலும் மையக்கருத்து மாற்றமடையவில்லை. மக்களை நன்நெறிப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்றுவந்த அமைப்புகள் பல, காலத்தின் அனர்த்தங்களால் அருகிப்போயின அல்லது அழிந்து போயின. இவற்றுக்கு மீள்வடிவம் கொடுத்து மக்களனைவரையும் நல்வழிப்படுத்த இந்து கலாசாரத்திணைக்களம் பெருமுயற்சிகளைத் தொடர்ச்சியாக எடுத்துவருகின்றது. இவர்களது நடைமுறை விதிகள், நல்லொழுக்கக் கட்டுப்பாடுகள், ஊக்குவிப்பு உதவிகள் பற்றி எதுவும் அறியாத நிலையில், நாம் எமது கிராமச் சிறுவர்களையும் மக்களையும் ஒழுக்கநெறிப்படுத்தி இறைபக்தி வளர்க்கும் பெருநோக்கில், எமது குலதெய்வமாகிய வேலன்பிராய் காதவாய்க்கால் வீரபத்திரேஸ்வரக் கடவுளை மனதில் இருத்தி, வீரபத்தீரேஸ்வரர் ஆலய நிர்வாகத்தின் அனுமதி பெற்று அறநெறிப்பாடசாலை ஒன்றை ஆரம்பித்தோம். அறநெறிப்பாடசாலைகளை ஊக்கி வரும் இந்து கலாசாரத்திணைக்களத்தில் 21.03.2013இல் பதிவும் செய்து கொண்டோம். (பதிவு எண்: HA/7/56/14/2013 ஆகும்.) இதனைச் திறமையாகச் செயற்பட வைக்க ஒரு நிர்வாகத்தையும் அமைத்துக்கொண்டோம். இதன் காப்பாளராக. கந்தையா கனகம்மா நிதியக் காப்பாளர், திரு.க.மயில்வாகனம் அவர்கள் செயல்பட்டுப் பல்வேறு வகைகளில் உதவியும் ஊக்குவித்தும் ஆலோசனைகளை வழங்கியும் வருகின்றார். தலைவர் திருமதி. கோபாலசிங்கம் குகனேஸ்வரி மிகுந்த ஈடுபாடு காட்டிவருகிறார். செயலாளராக திருமதி நாகேஸ்வரன் விகடபதி இயங்கி எம்மையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தி வருகின்றார். மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையுடைய எமது கிராமத்தில் மிகுந்த வறியநிலையில் எமது பாடசாலை இயங்குகின்றது. அதன் பொருளாளராக திருமதி. ஞானசேகர் நாகேஸ்வரி திறம்பட இயங்கி எமது செயற்பாடுகளுக்கான நிதிவசதிகளைச் சேர்த்து வருகின்றார். அதிபராக திருமதி. துரைராசா மங்கையற்கரசி இயங்குகிறார். நிறுவனம் ஒன்றின் அதிபராகத் தொழிற்படும் ஒருவருக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கும் மேலான பிரச்சினைகளை எதிர்கொண்டு வென்று கண்ணும் கருத்துடனும், பொறுமை கட்டுப்பாட்டுடனும் இம்மாணவர்களை ஒழுங்குபடுத்தி, பல பயிற்சிகளை வழங்கி, பலபோட்டிகளில் ஈடுபடுத்தி, பரிசில்கள் பெறவைத்து வருகின்றார். ஆசிரியர்களான திருமதி சந்திராதேவி நல்லமுத்து, செல்வி. லதா கோபாலசிங்கம் ஆகியோரின் அரும்பணியால் இம்மாணவர்களின் கல்வித்தகமை, நல்லொழுக்கம் சமய விழுமியங்கள் மேலும் வளர்ந்து வருகின்றமை தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. எமது பிரதேசத்திலும் அறநெறிப்பாடாசலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று பேரவாவுடன் முயன்று இயக்கியவர் திருமதி. ரஞ்சிதமலர் நகுலேஸ்வரன் அவர்கள் ஆகும். காப்பாளர் திரு கந்தையா மயில்வாகனம் அவர்கள் அறநெறிப்பாடசாலை நிர்வாகத்தின் அனுமதியுடன் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் யோகாசன வகுப்புகளும், சமயச்சொற்பொழிவுகளும் நடாத்த ஏற்பாடுகள் செய்து, அவை காப்பாளரின் வழிகாட்டலில் ஒழுங்காக நடைபெறுகின்றன. மாணவர்களுக்கு நல்லூட்டச்சத்து வழங்கும் நோக்கில் இலைக்கஞ்சி வழங்கவும் அவர் முன் வந்த போதிலும், கிராமத்துப் பெற்றோர் வாரம் ஒருவர் என்ற ஒழுங்கில் வழங்கத் தாமாகவே முன் வந்து தொடர்ந்து வழங்கி வருகின்றனர். இச்செயலானது கிராம மக்களின் ஐக்கியத்துக்கான முதல் படியாகவே கருதுகிறோம்.

முதன்முறையாக எமது மாணவர்களை ஒரு சுற்றுலா ஒழுங்கிலும், அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையிலும் ஏனைய பிரதேச மாணவர்களுடன், தம்மை தரமுரைத்துப் பார்க்க வைக்கும் செயல்பாடாக இருக்கும் என்ற எண்ணத்திலும் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவையொட்டி இந்து கலாசாரத் திணைக்களம், நாவலர் மணி மண்டபத்தில் நடாத்தி வருகின்ற நிகழ்ச்சியில் 22.08.2013 பி.பகல் 3 மணிக்குக் கலந்து கொண்டு சொற்பொழிவாளர் கேட்ட 5 வினாக்களில் 3 வினாக்களுக்கு விடை அளித்து 3 மாணவர்கள் பரிசில்களை பெற்றுக் கொண்டதுடன் சபையில் எமது அறநெறிப்பாடசாலையின் தரத்தை நிலைநாட்டி பாராட்டும் பெற்றுவந்தார்கள். (பரிசு பெற்ற மாணவர்கள்: செல்வி. நா. சங்கீதா, செல்வி. சி. கஜந்தா, செல்வன். ஞா. ரதீசன் இந்நிகழ்வில் 3 அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த 50 – 55 மாணவர்கள் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய ஆராய்வும் அறிவும் இன்றி, (04.08.2013) ஆலய நிர்வாகத்திடமிருந்து எமக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அறநெறிப் பாடசாலையில் யோகாசனப் பயிற்சி, சமயச் சொற்பொழிவு போன்ற ஏனைய செயல்பாடுகளுக்குத் தடைவிதிப்பதாகக் குறிப்பிட்டிருந்தது. நமது அறநெறி நிர்வாகம் ஒன்றுகூடி இது பற்றி (12.08.2013) அன்று ஆலய நிர்வாகத்தைச் சந்தித்து விளக்கம் கூறி மீள் அனுமதி பெற்றுக் கொண்டோம். இடர்கள் தடைகள் வெளியில் இருந்து வரலாம் எமக்கு உள்ளேயிருந்து வந்தது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். ஆலயங்கள் செய்யத்தவறிய பணியை அறநெறிப்பாடசாலைகள் செய்து வருகின்றன. மாணவர்களின் கல்வி நல்லொழுக்க மேம்பாட்டுடன் உடலுறுதி, மனவடக்கம் என்பனவும் வளர்க்கப்பட்டாலே ஒரு சமூகம் செழுமையடையும். திருவிழாக்களும், கொண்டாட்டங்களும் சடங்குகளும் மட்டும் இறைவழிபாடல்ல. ஆசாரசீலர்களாகக் காட்டிக்கொண்டு அறநெறி வழுகிவாழ்வது வாழ்வாகாது. நித்திய பூசைகளில் ஏற்பட்ட தவறுகள் குறைபாடுகள் என்பவற்றை நிவர்த்தி செய்யும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டவைதான் நைமித்திய பூசைகளான கும்பாபிஷேகம், திருவிழா, கொண்டாட்டங்களாகும். நித்திய பூசைகளில் ஒழுங்கின்மை, குறித்த நேரத்தில் ஐயர் பூசை செய்கின்றரா என்று கண்காணிக்காமை, ஐயருக்குப் போதிய ஊதியம் ஒழுங்காக வழங்காமை, கோவிலையும் கோவிலை அண்டிய பகுதிகளையும் சுத்தமாக வைத்திருக்காமை போன்ற இன்ன பல குறைபாடுகளை ஏற்படுத்திக் கொண்டு பண்டிகைகள் மட்டுமே வழிபாட்டுமுறையெனக் காட்ட முயல்வது மக்களை அறியாமையில் வைத்திருப்பதற்கான ஏற்பாடேதான். மக்கள் தான் கண்மூடிப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்கிறார்களென்றால், வளர்ந்து வரும் மாணவர்களிடையே மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு புதிய சமுதாயக் கட்டமைப்பை, அறிவு பூர்வமான வணக்க முறையை வளர்த்தெடுக்க முயலவேண்டும், அறிவை வளர்த்து அதன்மூலம், ஆன்ம பலம் பெற்று, அறநெறிவழி வந்து, அதன்படி வாழ்ந்து இறைவனை அடைய சமூகத்தைத் தூண்டும் பணியில் அறநெறிப்பாடசாலைகள் ஒழுகவேண்டும். அதற்கு ஏனைய சமூக மேம்பாட்டு நிறுவனங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

*- மேன்மை மிகு சைவநீதி விளங்குக உலகமெலாம்.-*

திருமதி. துரைராசா மங்கையற்கரசி
அதிபர்,
வேலம்பிராய் ஆதிவீரபத்திரேஸ்வரர் அறநெறிப்பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# மண்ணுள் மக்கிய மலர்கள்

ஆதிவீரபத்தீஸ்வரர் கோவில் காண்டாமணி டாங், டாங் என அடித்து ஓய்ந்தது. அந்த மணியோசைக்கு அப்படியொரு ஈர்ப்புச் சக்தி, எப்படி வந்தது? மனதிலே ஒரு பரவசம், உடலில் ஒருவகை புல்லரிப்பு, செயலில் ஒரு உற்சாகம் ஏற்படுத்தும் அதிர்வலைகள் எங்கும் பரவும். விஸ்வகுல மக்கள் குல தெய்வமாக ஆதிபராசக்தியை சக்தியின் வடிவமாக வழிபட்டு வருகின்ற போதிலும் வேலன்பராய் வாழ்மக்கள் வீரபத்தீஸ்வரரையே குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். மணிவார்ப்பின் உலோகக் கலவையே மணியின் இவ்வகை அதிர்வலைகளுக்கு காரணமென விசயம் தெரிந்தவர்கள் பேசிக் கொள்கின்றனர். மணி நிறுவிஇருக்கும் அமைப்பும், அதன் தாங்கி அமைத்த விதமும் மணி நாக்கு வந்து "டங்" கென அடித்துவிட்டு கணநேரத்தில் விலகுமாறு செய்துவைத்த கொல்லர்களையும் பாராட்டவேண்டியதே. இவ்வாறு ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு அமைப்பிலும், மூலஸ்தானம், மண்டபம், மகாமண்டபம், மணிக்கோபுரம் என ஒவ்வொன்றிலும் முழுக்கவனமும் செலுத்தி ஆகம விதிப்படி அமைத்திருந்தார்கள் விஸ்வகுலமக்கள். முற்றத்தைக் கூட்டி, சாணிகரைத்த நீரைத் தெளித்துக் கொண்டிருந்த அரசி, ஐயர் வந்திட்டார் போலை இன்னமும் பூவெடுக்கவில்லையே என அங்கலாய்த்துக் கொண்டு, "செல்லமக்கா பூப்புடுங்கவா" என்று கேட்டபடி வேலிப்பொட்டுக்குள்ளால் வந்தாள். பயன்தரும் மரங்களுடன் பூக்கன்றுகளும் வைத்துப் பராமரித்து வருபவள். செல்லமக்கா. அவளின் வளர்ப்பில் வளர்ந்தவர்கள் அநியாயமாக அழிந்துவிட, பூக்கன்றுகளுடன் மரக்கன்றுகளும் நாட்டி வளர்த்து வருகிறாள்.

செல்லமக்கா, நான் கொஞ்சம் பூப்பிடுங்கவா? என்று வந்த அரசி, அவர் கையில் விளக்குமாற்றுடன், பிரமைபிடித்தவளாக திண்ணைக் குந்தில் இருப்பதைக்கண்டு ஒருகணம் திகைத்துவிட்டாள். அக்கா ஒருநாளும் இவ்வாறு இருந்ததே இல்லை. இன்று இவளுக்கு என்னவந்தது?

வேலனின் புகழைப் பாராயணம் செய்து வந்ததாலோ என்னவோ அந்த அழகிய கிராமத்துக்கு வேலன்பிராய் என்று பெயர் வந்தது. இயற்கை வளமிக்க அந்தச் சிற்றூரின் தெற்கேயுள்ள கோவிலாக்கண்டிக் கடல், மீன்களை அள்ளித் தந்து கொண்டிருக்கும். அந்தக் கடல் மீன்களின் சுவை உணர்ந்து யாழ் நகரிலிருந்து மக்கள் தேடி, தேடி வந்து சொன்னவிலை கொடுத்து வாங்கிச் செல்வார்கள். கோவிலாக்கண்டி கடலில் பிடிபடும் திருக்கை மீனுக்கு ஒரு தனிச்சிறப்பும் மதிப்பும் எப்போதும் இருந்து வருகின்றது. கிழக்குப்பகுதியிலும் மேற்கிலும் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களில் ஒரு போதும் நீர் வற்றுவதே இல்லை. காலத்துக்குக்காலம் ஊர் மக்கள் ஒன்று கூடி தூர் எடுத்து ஆழமாக்குவர். தாமரை, அல்லி மந்தாரை மலர்கள் மலர்ந்து என்றும் அழகாக இருக்கும். இளைஞர்களும், யுவதிகளும், சிறுவர்களும் குதித்து நீராடி சுழியோடி எப்போதும் சன சந்தடியாகவே இருக்கும். பருக கால விவசாயம் முடிந்ததும். அவிழ்த்து விடப்படும் கால்நடைகளுக்கு நீர் வழங்குவதும் இக்குளங்களே. கிராமத்துக் கிணறுகளில் நன்னீர் வருவதற்கு இக் குளங்கள்தான் காரணமாய் அமைந்துள்ளன. மேற்கில் இருக்கும் நெணியன் வயல் வெளியிலும், கிழக்கே விரிந்திருக்கும் வேலன்பராய் வயல் வெளியிலும் ஆண்டு தோறும் பருவ மழையுடன் மொட்டைக்கறுப்பன் நெல்விளைந்து நிறைந்து கிடக்கும். வீதி ஓரங்களிலும் தோட்டம் துரவிலும் நிறைந்து செளித்து வளர்ந்திருக்கும் மரங்கள் ஆண்டு தோறும் பருவத்துக்குப் பயன்தரும். இவற்றுடன் காட்டுத்தோட்டத் தென்னைகளும் அங்காங்கே தாமாகவே வளர்ந்து பயன்தந்து கொண்டிருக்கும் பனை மரக்கூடல்களும் இக்கிராமத்தின் வளங்கள். மக்கள் கள்ளம் கபடமறியாத, நெஞ்சில் வஞ்சகமில்லாத கடும் உழைப்பாளிகள். வடக்குப்பகுதியில் - கிராம நுழைவாயிலில் அமைந்திருப்பதுதான் வீரபத்தீஸ்வரர் ஆலயம். உயர்ந்த கோபுரம், சுற்றுமதில், மண்டபங்கள், மணிக் கோபுரம், நந்தவனம், தீர்த்தக்கேணி என எல்லாம் அமைந்து அப்பகுதியில் வசிக்கும் ஆச்சாரியர்களுக்கும் அயல் கிராம மக்களுக்கும் அருள் புரிந்து கொண்டிருக்கின்றார். சிறிய கொட்டிலில் இருந்த வீரபத்தீஸ்வரருக்கு இவ்வளவு சிறப்பு மிகு கோவிலை அப்பகுதி மக்களின் உதவிகளுடன் பூசாரியார் என எல்லோராலும் அழைக்கப்படும் வேலுப்பிள்ளை அப்பா என்பவர் முன்னின்று கட்டிமுடித்து, செயல்திறன் மிக்க நிர்வாகத்திடம் 1987இல் கையளித்ததான வரலாறும் இவ்வீரபத்தீஸ்வரர் ஆலயத்துக்குண்டு.

எத்தனைபேர், எவ்வகையில எடுத்துக் கூறியும் அவளைத் தேற்ற முடியவில்லை. ஆசையோடு வளர்த்த மகன் பாசம் கொட்டிப்பார்த்த மகன் காணமல்போய் இன்றுடன் ஆறுமாதங்கள் ஆகின்றன. எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்தாள். செல்லமக்காவின் புருஷன் தலை சிறந்த தச்சன். படிப்பு அவ்வளவு இல்லையென்றாலும் கணக்கு வழக்குகளில் கெட்டியானவன். கூரைவேலைகளில் மிகுந்த நிபுணன். நிலத்திலேயிருந்து கட்டிடத்தின் அளவுகளை எடுத்து அதற்கேற்றாப் போல் அரிந்து, வெட்டி இணைத்து, கூரையில் ஏற்றிப் பொருத்தினால் தத்ரூபமாய் அமையும். வீட்டின் கூரை அமைப்பைப் பார்த்த எவரும் இது பாலன் செய்த வீட்டுவேலை எனக் கணிப்பிடும் அளவுக்கு, திருநெல்வேலி ஸ்ரீ கந்தசாமி ஐயாவின் தேர்போல எழுந்து கம்பீரமாக இருக்கும். அடி மட்டம், அளவு நாடா எதுவும் தேவையில்லை. மூலைமட்டமும், ஒரு சிலாகையும் பென்சிலும் போதும். அளவு எடுத்து வரைந்து அரிந்து பொருத்தினால் ஒரு நூலும் பிசகாது. அப்படியொரு நேர்த்தியான வேலைகாரன். வீரபத்தீஸ்வரர் ஆலய மகாமண்டப ஊசிக்கால் வேலைகள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் வைத்துச் செய்து முடித்து கூரையில் ஏற்றிய போது, சாரம் அறுந்து விழுந்தவன்தான், பிறகு எழவேயில்லை. இடுப்பு எலும்பு வெடித்து, சிறுநீரக செயல்பாடு பழுதடைந்து இரண்டு மாத அவஸ்தையின் பின் இறந்து போனார். ஊரே அழுதது. உறவினர் கலங்கினர். செல்லமக்கா அழவேயில்லை பிரமைபிடித்துப் போயிருந்தாள். முத்தாச்சியின் அரவணைப்பும் நெருக்குதல்களும் கண்முன்னால் ஓடித்திரியும் சிவாவின் அழுகையும் பரிவும் பாசமும்தான் அவளை மீட்டது. அன்றுதான் அழுதாள், வெகுண்டு எழுந்தாள். அதன் பின் அவள் அழவேயில்லை. வாழ்வைச் சவாலாக எடுத்துக் கொண்டாள்.

நான் இவ்வளவு திறமையும் ஆற்றலும் இருந்தும் படிக்காததால்தானே கூலி வேலை செய்ய வேண்டிவந்தது. எனது பிள்ளைகளை தச்சுவேலை பழக்கப் போவதில்லை. அவர்கள் படித்து நிபுணத்துவம் பெறவேண்டும் என அடிக்கடி பாலன் கூறி வந்ததை மனதில் கொண்டாள். எவ்வாறாயினும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என கடுமையாக உழைத்தாள். தன்னைச் சந்தன மரமாக்கினாள். ஆடுவளர்த்தாள், கோழியும் வளர்த்தாள், கிடுகு பின்னி வந்தாள். வயல்வேலைகளில் கூலிக்குப் போனாள். தன்னுடைய வயல்களையும் விளைவித்தாள். பிள்ளைகள் இருவரும் நன்கு படித்துப் பாராட்டுப் பெறுவதுகண்டு மகிழ்ந்தாள். ஆண்டிறுதிப் பரீட்சையில் உயர்மட்டப்புள்ளிகள் பெற்ற தன் பிள்ளைகளுடன் மேடையேறிக் கௌரவிக்கப்பட்டாள்.

வீரபத்தீஸ்வரரின் அருளாலும், கிராம மக்களின் நல்லொழுக்கத்தின் விளைவாலும், இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பாதிப்புகள் எவையும் இவ்வழகிய கிராமத்தை எட்டிப் பார்க்கவே இல்லை. யார் கண்பட்டதோ, 1999ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22ஆம் திகதி இக்கிராமத்துக்கும் ஷெல்கள் வந்து விழுந்து வெடித்தன. ஒரு பாவமும் அறியாத மக்கள் திகைத்தனர். என்ன செய்வதெனத் தவித்தனர். தங்கள் இடர்களை யெல்லாம் களைந்து இதுவரை தம்மைக்காத்த வீரபத்தீஸ்வரர் ஆலய வளாகத்தில் கூடியிருந்து பிரார்த்தித்தனர். ஷெல்களுக்குத் தெரியாது தாம் என்ன விளைவை ஏற்படுத்துகிறோம் என்பது. ஏவுபவனுக்கும் தெரியாது ஏன் ஏவுகிறேன் என்பதும் யார்மீது ஏவுகிறேன் என்பதும். எவர் மீது விழுகின்றது என்பதும். யாருடையதோ கட்டளைக்காக இயங்கும் இயந்திரமனிதன்தானே அவன். அப்படி ஒருவனால் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் சரமாரியாக வந்து வீழ்ந்து வெடித்தது. கைகள் போய், கால்கள் இழந்து, உயிர் இழந்து மக்கள் திகைத்தனர். அடுத்து என்ன என்பது தெரியவில்லை. ஷெல் ஏவினவன் மனதில் வீரபத்தீஸ்வரர் வந்தாரோ தெரியவில்லை. ஷெல் ஓய்ந்தது. களநிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கையிழந்து, காலிழந்து கண்களிழந்தவர்களிடையே உயிரிழந்து சடலமாக இருந்தான். இளையமகன் துடித்துப் போனாள் செல்லமக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறி அழுதாள், காக்கும் என நம்பி வந்திருந்த கடவுளே கைவிட்டுவிட்டதே எனக் கவலை அடைந்தாள். பின்னர் எவ்வளவோ, நடந்து முடிந்துவிட்டது. போர் முடிந்து விட்டது. அமைதி வந்துவிட்டது என்கிறார்கள். இனி அமைதியாக வாழ முடியும் என எண்ணினார்கள். இழப்புகளால் பாதிக்கப்பட்டவர்களை எண்ணவில்லை. என்னென்னவோ கற்பனைகளில் மனிதர்கள் வாழ்கின்றனர். பழையபடி நான்முந்தி, நீமுந்தி என்று ஓடத் தொடங்கிவிட்டனர்.

சிவா செல்லமக்காவின் மூத்தபெடி, தன்னார்வத்தாலும் அதிபர் ஆசிரியர்களின் ஊக்குவிப்புடனும், தாய் தந்தையின் இலட்சியக் கனவை நிறைவேற்றவுமாகக் கடுமையாக முயன்று, உள்ள வளங்களுடன் கல்வி கற்றுவந்தான். இவனது திறமைக்காக நிறுவனங்களும் சமூக அமைப்புகளும் ஊக்குவிப்பு வழங்கிவந்தன. யாழ் பல்கலைக்களகத்தில் விஞ்ஞான பிரிவில் முதன்மை மாணவனாகக் கற்றுவரும் போது அதிசிறந்த ஐந்து மாணவர்களுக்கு கொழும்பில் நடைபெற்றுவந்த போட்டி ஒன்றில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. முழுமனதோடும், மிக மகிழ்வோடும் போனார்கள். செல்லமக்காவுக்கு விருப்பமில்லை. மகனின் ஆர்வத்தைத் தடுக்கக் கூடாது என்றெண்ணிச் சம்மதித்து அனுப்பி வைத்தாள். போட்டி என்று சென்ற மாணவர்கள் எங்கு சென்றார்கள் என்று தெரியவில்லை. பல்கலை நிர்வாகம் பெரும்முயற்சிகள் எடுத்திருந்தும் இதுவரை எதுவித தகவலும் இல்லை. யுத்த காலத்தில் காணமல் போவதே மனித உரிமை மீறலாக இருக்க, அமைதிக் காலத்தில் காணாமால் போனவர்களை எங்கு தேடுவது? தேடி அலைந்தும் பயன் எதுவும் இல்லை. இவளும் சிவாவுடன் சென்ற மற்றய மாணவர்களின் பெற்றோர்களும் எழுதிக் கொடுத்த மனுக்கள் எத்தனை, மகஜர்களை பெற்ற மந்திரிகளும், உள்ளூர் அரசியல் அதிகாரிகளும் ஒன்றும் செய்யவில்லை, சோறு தண்ணி இல்லாமல் வீரபத்தீஸ்வரர் மண்டபத்தில் பழிகிடந்தாள் சில நாட்கள். இப்ப முத்தாச்சியும் இல்லை. தேற்றுவார் யாரும் இல்லை. திடங்கொண்டு எழுந்தாள். சேலைத் தலைப்பை அள்ளித் தோளில் போட்டாள். பத்திரகாளியானாள் நீ விரும்பினால், ஒரு பாவமும் அறியாத எனது மகனையும் கூடச் சென்ற மாணவர்களையும் திருப்பித்தா என்று கதறினாள். இனி நான் உன்னிடம் வருவதென்றால் எனது பிள்ளையுடன்தான். அல்லது அப்பாவிகளைக் காக்கத் தவறிய கடவுளாக நீ இரு. நான் என்பாட்டில் போகிறேன் என்று படி இறங்கி வந்தவள்தான். அன்று விட்டவள்தான் அவள் பூப்பிடுங்கவுமில்லை கோவில் போவதுமில்லை.

வருடம் தோறும் பங்குனி மாத அனுஷ நட்சத்திரத்தில் நடக்கும் சங்காபிஷேகமும் அதற்கு முன்னரான 10 நாட்கள் திருவிழாவும் நடக்கும். அதனால் வீரபத்தீஸ்வரர் உளம் மகிழ்ந்தாரோ, மனம் குளிர்ந்தாரோ தெரியவில்லை பிடிவாதக்காரியான செல்லமக்கா மட்டும் மாறவில்லை. இப்படியான சில நேரங்களில், பிரமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தவளாக வெறுமையடைந்தவளாக தன்னை மறந்து இருப்பாள். இன்றும் அவ்வாறுதான். வெறுமையாக, தன்னை மறந்து இருக்கிறாள்.

செல்லமக்கா பூப்புடுங்கவா, ஐயர் வந்து மணி அடிக்கிறார், பூசை ஆரம்பமாகப் போகுது போலை என்று தோளில் தட்டினாள் அரசி

என்னடி பிள்ளை, என்ன? ஏன் வந்தனி என்றவாறு செல்லமக்கா உலகுக்கு வந்தாள்.

அக்கா கொஞ்சம் பூப்புடுங்கவா

பங்கை பார் பூத்துக்கிடக்கு புடுங்கிக் கொண்டுபோ. பூக்கிற பூக்களிலை எத்தனை பூ இறைவனுக்கு போகுதோ எத்தனை பூக்களை எமன் பறிக்கிறானோ, நீ உனக்கு வேண்டிய மட்டும் புடுங்கிக் கொண்டு போ.

அக்கா வாவன் கோவிலுக்குப் போகலாம் என்று கேட்க நினைத்த அரசி அக்காவின் மறுமொழிகேட்டு வாயடைத்துப் போய் பூப்பிடுங்கிக் கொண்டு போகிறாள்.

கனகன்

---

வாழ்க்கை என்பது சிரித்துக் கொண்டாடி மகிழ்வது மட்டுமல்ல, சிந்தித்து வருந்தித் திருந்துவதும்தான் எமக்காக நாமே முயன்று வகுத்துக் கொள்வதும்தான். தவறுகள் வரலாம். தப்புக்கள் ஏற்படவே கூடாது. எமது முன்னோர்கள், நல்ல நண்பர்கள், கற்ற நூல்கள், வழிகாட்டலாம். கூட்டியும் செல்லலாம். நாம் தான் விரும்பி ஏற்று அமைத்துக் கொள்ளவேண்டும்.

–வழிப்போக்கன்–

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

# மாணிக்கவாசகர்

கம்பன் பிறந்த தமிழ்நாடு எனப் போற்றப்படும் பாரத தேசத்தில் சம்புபாதாசிரி யருக்கும், சிவஞானவதியாருக்கும் மகனாகப் பிறந்தவரே மாணிக்கவாசகர் ஆவார். இவர் இயற் பெயர் திருவாதவூரர் ஆகும். இவர் திருவாதவூரரிலே தோன்றி சிறப் பெய்தியமையால் திருவாதவூரர் என போற்றப்பட்டார். இவரது கல்வித் தகைமை, சிறந்த பண்புகள் என்பவற்றை அறிந்த பாண்டி நாட்டை ஆண்ட அரிமர்த்தன பாண் டிய்ன் என்ற பாண்டிய அரசன் இவரை தனது நாட்டின் முதலமைச்சராக நியமித் தான். இவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட பின் இவரது பட்டப் பெயர் "தென்னவன் பிரமராயன்" என்பதாகும். செங்கோல் அரசன் பாரி போல அரிமர்த்தன பாண்டிய மன் னனும் அறம் பிறழாமல் அரசாழ மாணிக்கவாசகர் துணை நின்றார்.

ஒரு முறை அரிமர்த்தன பாண்டிய மன்னன் இவரிடம் பணத்தைக் கொடுத்து இவருடன் சிலரையும் அனுப்பி குதிரைகள் வாங்கி வரும்படி கூறினான். இவர்கள் குதிரை வாங்க கீழைக் கடற்கரை துறைமுகத்திற்கு செல்வதற்காக திருப் பெருந்துறைக்கு சென்றனர். "அன்புதான் அடைக்கலம்" என்றார் பொய்யா மொழிப் புலவர். அது போல் மாணிக்கவாசகரின் இறைவன் மேல் உள்ள அன்பு திருப்பெருந்துறை இறைவன்பால் சென்றது. தன்னுடன் வந்த ஆட்களை திருப்பி அனுப்பி விட்டு திருப்பெருந்துறை இறைவனுக்கு தொண்டுகள் செய்து வழிபடலானார். இதனால் கோபமுற்ற அரசன் மாணிக்கவாசகரிடம் காவலாளிகளை அனுப்பி வைத்தான். ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என மாணிக்கவாசகர் அவர்களிடம் கூறி அனுப்பினார். ஆவணி மூல நாளில் குதிரைகள் வராததை இட்டு கோபமுற்ற மன்னன் மாணிக்கவாசகரை சிறையிலிட்டு துன்புறுத்தினான்.

இறைவன் உண்மையான அடியார்கள் துன்பம் தீர்ப்பவர். அல்லவா? இதனால் தன் பக்தன் படும் துன்பங்களை நீக்க நரிகளை பரிகளாக்கி தானே தலைமை சேவனாக வந்து அரசனிடம் ஒப்படைத்தார். மகிழ்ச்சியுற்ற அரசன் மாணிக்க வாசகரை சிறையிலினின்று விடுவித்தான். எனினும் பரிகளாக வந்த நரிகள் அன் றிரவு நரிகளாகி ஊளையிட்டு அங்கிருந்த பரிகளை தின்று விட்டு மீண்டும் காட்டுக்கே சென்று விட்டன. இதனால் சினமுற்ற அரசன் வைகைஆற்று சுடுமணலில் நிற்க வைத்து நெற்றியில் கல்லேற்றி துன்புறுத்தினான். அச்சந்தர்ப்பத்தில் இறைவன் வைகை ஆற்றை பெருக்கெடுக்க செய்தார். இறைவன் மாணிக்கவாசகர் மீதுள்ள கருணையை அனைவரும் உணர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பின்பு தன் பதவிகளை துறந்து திருப்பெருந்துறை இறைவனை வழிபட்டு வந்தார். ஒருமுறை ஈழ நாட்டரசன் தனது பௌத்த மத கொள்கைகளை பரப்ப வந்து சைவ சமயத்தினரை வாதுக்கு அழைத்தனர் அப்போது தில்லைவாழ் அந்தணர் மாணிக்க வாசகரை வாதிடுமாறு அனுப்பினர். மாணிக்கவாசகர் பௌத்த நெறி கொள்கைகளை கேட்டு பின்பு சைவ நெறிக் கொள்கைகளை முன் வைத்தார். பௌத்தர் அதை மறுத்து வாதாடினர். அப்போது மாணிக்கவாசகர் இறைவனை நினைக்கவே பௌத்த துறவிகள் அனைவரும் ஊமையாகினர். இதனால் பௌத்த அரசன் தன் ஊமைப் பெண்ணை பேச வைக்க வேண்டும் எனக் கேட்டார். மாணிக்க வாசகர் ஊமைப் பெண்ணையும் பேச வைத்தார்.

இவர் திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றை பாடியருளினார். இவர் இவ்வுலகில் சன்மார்க்க நெறியில் நின்று போராடி ஆனி மாத மக நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார். இவர் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் இன்றும் என்றும் இவர் புகழ் பாரில் இருக்கும்.

*வாழ்க மாணிக்கவாசகர் நாமம்*

*வளர்க சைவமும் தமிழும்*

செல்வி. யே. ஆரபி
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

# கல்வி

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குள் தக"

என்ற வள்ளுவர் வாக்கிக் கிணங்க நாம் கல்வியினை கற்க வேண்டும். கல்வி என்பது கொடுக்க கொடுக்க கூடுமே தவிர குறையாது. கல்வி நெருப்பினால் வேகாது. வெள்ளத்தினால் அழியாது. கள்வர்களினால் கொள்ளையிட முடியாது. கல்வி ஒரு அழிவில்லாச் செல்வமாகும். மன்னனுக்கு தன் தேசமல்லால் சிறப்பு இல்லை கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. நாம் இளமையில் இருந்தே கற்கத் தொடங்கிய கல்வி முதியவர் ஆகும் பொழுதும் எம் மனதில் பதிந்திருக்கும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது பழமொழி ஆகும்.

முன்னைய காலத்தில் கல்வியை கற்க வசதிகள் இல்லாததால் வாய் மொழி யாகவும், செவி வழியாகவும் கற்று பலர் நல்ல நிலமைக்கு வந்துள் ளனர். அவ்வாறு வந்தவர்களில் ஒளவையார், திருவள்ளுவர் என்பவர் சிறந்த உதாரணமாவார். ஆனால் இப்பொழுது கணினி, இணையம் என்பனவும் படிக்க வசதியான மற்றைய உபகரணங்கள் வந்தும் சில பேர் ஆபாசப்படங்கள், கூடாத விளை யாட்டுக்கள், கூடாத சொற் பேச்சுக்கள் என்பன மூலம் சிதைவடைந்து வருகின்றனர். ஆகவே கல்வியை கற்றால் நாம் மென்மேலும் உயர வாய்ப்பு உண்டு. நாம் கல்வியை கற்பதற் கென்று நல்ல நூலகம், நல்ல பாடசாலை என்பன அமைக்கப்பட்டுள்ளன. நாம் இவ்வாறான நல்ல கல்வியினை கற்றால் எமது சமுதாயத்திற்கும், எமது வீட் டுக்கும் பெருமையைத் தேடிக் கொடுக்கலாம். ஆகவே கல்வி என்பது எமது அறி வாற்றலையும், சக்தியையும் பயன்படுத்தி எம்மிடம் வளருகின்ற ஒரு திறனாகும் நாங்கள் இளமையிலே கல்வியை வளர்ப்பது ஒரு அரிய சந்தர்ப்பமாகும். "இளமை யில் கல்" என்பது ஒளவைப்பிராட்டியின் ஆத்தி சூடி ஆகும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? ஆகவே சிறுவர்கள் ஆகிய நாம் சிறுவயதில் இருந்தே கல்வியைக் கற்க வேண்டும். கேடில் விழுச் செல்வம் கல்வி ஆகும். எங்களில் இருக்கும் ஏனைய சொத்துக்கள் அழிந்து போகலாம் கல்வி ஒரு போதும் அழியாது. எமது உடல் அழிந்தாலும் ஒரு போதும் கல்வி அழியாது.

நாங்கள் ஒரு குடை வாங்கித்தா, எனக்கு இனிப்பு வாங்கித்தா என்று அழு திருக்கின்றோம். ஆனால் புத்தகம் வாங்கித்தா என்று அழுதிருக்கின்றோமா? நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியினைக் கற்க எங்களுடைய சமூகமும் பங்க ளிப்புச் செய்ய வேண்டும். சமூகம் பங்களிப்புச் செய்யாமல் நாங்கள் எங்களுடைய ஊரில் ஒரு பாடசாலையையோ அல்லது வேறு கல்வி நிலை யங்களையோ நிறுவ முடியுமா? இதற்கு எமது சமூகமும் அங்கு வாழும் மக்களும் உதவ வேண்டும்.

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட போது அந்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுடைய சொத்துக்கள், உடமைகள் என்பன அழிந்து போனது ஆனால் ஒருவன் கற்ற கல்வி மட்டும் அழிந்து போகாமல் அவனது மனதிற்குள்ளேயே ஆழ்ந்து பதிந்து கிடந்தது.

ஆகவே நாங்கள் கற்கும் பருவத்தை வீண் விரயமாக்காது. கல்வி கற்று ஒழுக வேண்டும். இறைவன் எமக்கு அளித்து வருகின்ற இளமைப் பருவத்தில் அதிக நேரத்தைக் கல்விக்காக ஒதுக்கி கற்க வேண்டும். கற்று இந்த சமூகத்தில் நல்ல பிரஜைகளாக வாழ வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்.

எமது பெற்றோரை மேன்மையுறச் செய்யும் வகையில் கல்வி கற்று, உலகில் சிறந்த சான்றோராக வாழ்வோம். ஒழுங்கான கல்வி கற்பதன் மூலம் சிறந்த தொழில் தேடவும் ஒழுங்கமைதியான வாழ்வு வாழவும் முடியும்.

*- நன்றி -*

செல்வி வி . ரோகீதா

யா/ கைதடி நாவற்குழி தெற்கு அ . த . க பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலாக்கண்டி மேற்கு
தச்சன் தோப்பு
திரு.க.கந்தையா
திருமதி.க.கனகம்மா
நினைவு நிதியம்

# 25 தந்தை தாய் பேண்

“தந்தை சொல் மிக்க மந்திரமில்லை” தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை” எனும் வாக்கினைக் கொண்டு ஒரு குடும்பத்திலே தந்தையானவர் அரவணைப்பிற்கும் தாயானவள் அன்புக்கும் தெய்வமாக விளங்குவார்கள். எந்தவொரு இடத்திலும் தாய்க்கு முதன்மை அளித்தாலும் அதனோடு இணைந்து தந்தைக்கும் முதன் மையளித்து மெருகூட்டிச் செல்வதை இன்றைய சமுதாயத்திலே நாம் அனைவரும் அறிந்து கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

ஆனால் இந்த இருபத்தோரம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிள் ளைகள் தந்தை தாய்க்கு மதிப்பும் ஆதரவும் காட்டுகின்றார்களா? சர்ச்சை என்ற சச்சை நம்மவர்களிடத்தே எழுகின்றது. இன்றைய காலகட்டத்தில் நூற்றுக்கு 90 வீத மானவர்கள் மதிப்பளிப்பதில்லை. இது ஆய்வுகளிலும் சரி நடைமுறை வாழ்க் கையிலும் சரி அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

அடுத்து நாம் ஏன் தந்தை தாயை பேணவேண்டும் என சற்றுச் சிந்திப்போமானால் உலகத்திலே தாயானவள் நம்மை பெற்றெடுப்பதற்குபடும் வேதனை, அதிலும் நம்மை வளர்ப்பதற்கு படும் வேதனை தாய்க்கும் தந்தைக்கும் தான் அதிகம். அவர்கள் தான் சமூகத்தில் ஓர் நற் பிரஜையாக ஆக்கி வைக்கின்றார்கள்.

இவ்வாறான தாய் தந்தைக்கு பிள்ளைகளாகிய நாம் செய்ய வேண்டிய கடமை என்னவென்றால் அவர்கள் விரும்பும் விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பதுதான். இதனைத்தான் “தந்தை மகனுக்கு ஆற்றும் --------------” எனும் வள்ளுவரின் வரிகளினூடக அறிந்து கொள்ளலாம். பெற்றோர்கள் துன்பப்படாத வகையில் எந்நேரமும் ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையை அவர்கள் முதிர்வடையும் காலம் வரை அவர்கள் எம்மைப் பேணி காத்ததைப் போல நாமும் அவர்களை பேணிக்காக்க வேண்டும். இது தான் ஒரு பிள்ளைக்கு அழகும் உலகம் போற்றும் நிகழ்வும் கூட என்று தான் கூற முடியும்.

தாய், தந்தையர் தவம் இருந்து அரிய பல பாடல்களை எல்லாம் நமக்கு அளித்தமை ஊடாக நாம் இவர்களின் மகத்துவம் பற்றி அறிந்து கொள்ளலாம். தாயானவள் தொப்புள்கொடி உறவாக நம்மோடு எவ்வாறு உறவாடினாளோ கரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

வறையில் அவ்வாறே நாமும் அவருடன் பிற்பட்ட காலகட்டத்தில் உறவின் உறவாக பேணுதல் அவசியமாகும்.

ஆத்திசூடி, திருக்குறள் போன்ற பல நல்வழி நூல்களில் இவர்களை பற்றிய பல வாக்கினை அறிந்து கொள்ளலாம். நாம் நமது பெற்றோர்களுக்கு துன்பம் விளைவித்தால் வாழ் நாள் முழுவதும் கண்ணீருடனேயே வாழ நேரிடும். என்பதும் சமூகத்திலுள்ள பெரியார்கள் நாம் தவறு விளைவிக்கும் சந்தர்ப்பத்தில் கூறுவதை அறிந்தது கொள் ளலாம்.

நாம் பெற்றோரை மதித்து வணங்கினால் தெய்வத்தை வணங்கத் தேவை இல்லை என்ற மரபும் உண்டு. முற்பட்ட காலத்திலே வாழ்ந்த பெரியார்கள் வரலாற்றுப் பதிவேடுகளை பாக்குமிடத்தில் அவர்கள் தமது தந்தை, தாய் இருவரையும் பேணிய விதமும் அவர்கள் பேணிய விதத்தின் பலனாகவே இவ்வாறான உயர் நிலைமைக்கு சென்றுள்ளார்கள் என்பதனையும் நாம் நடைமுறை அனுபவத்தின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

ஆகவே தெய்வத்திற்கு சமமாக மதிக்கப்படுகின்ற பெற்றோர்களான தாயையும் தந்தையையும் எமது வாழ்வில் கிடைத்த ஒரு பொக்கிசமாகக் கருதி அவர்களுடைய விருப்பத்தினுூடாக நாமும் நமது வாழ்க்கையைச் செவ்வனவே நகர்த்திச் செல்வோமாக.

*"எங்குமே கிடைக்காத அரிய ஒரு சிம்மாசனம்*
*தாயின் கருவறை"*

செல்வி. தா. தனுஷா
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறுவோர் விவரம்

## கோயிலாக்கண்டி மேற்கு, தச்சன்தோப்பு

திரு.திருமதி கந்தையா கனகம்மா நினைவு நிதியம் 15.10.2013 இல் நடத்திய போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்று பரிசில்கள் பெறும் மாணவர்கள் விவரம்

**பணப்பரிசில், பதக்கம், நூல், சான்றிதழ் பெறுபவர்கள்**

*அதிமேற்பிரிவு:*

1ம் இடம் - ச. பிருந்தா, யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
2ம் இடம் - ம. காயத்திரி , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
3ம் இடம் - து. அஜித்தா , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

*மேற்பிரிவு:*

1ம் இடம் - கோ. தாரங்கினி, யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
2ம் இடம் - த. லக்சனா , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
3ம் இடம் - பு.ஜெனீபா, யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

*சிரேஷ்டபிரிவு:*

1ம் இடம் - சி. கஜீபன் , யா/ கை/ நா.அ.த.க. பாடசாலை
2ம் இடம் - ப. ரதீபன் , யா/ கை/ நா.அ.த.க. பாடசாலை
3ம் இடம் - ஜெ. கீதாஞ்சலி , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

*மத்தியபிரிவு:*

1ம் இடம் - கு. கஜானன் , யா/ மற. சகலகலாவல்லி வித்தியாலயம்
2ம் இடம் - ஜ. சானுஜா , யா/ கை/ நா.அ.த.க. பாடசாலை
3ம் இடம் - சி. துஸ்யந்தி , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

*கனிஷ்டபிரிவு:*

1ம் இடம் - ஸ்ரீ. கதிர்விழி , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
2ம் இடம் - வி. சுவேதா ,யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
3ம் இடம் - பு. கஜானா , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கீழ்ப்பிரிவு:*

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - | யோ. கீர்த்திகா , யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| 2ம் இடம் | - | ம. அக்ஷயன் ,யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| 3ம் இடம் | - | ஏ. கபில்ஷா , யா/ மற. சகலகலாவல்லி வித்தியாலயம் |

## நூல், சான்றிதழ் பெறுபவர்கள்

*அதிமேற்பிரிவு:*

| | | |
|---|---|---|
| 1சி. தர்சினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| அ. அபிநயா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| கோ. அரவிந்தன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ம. சசிந்தா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ம. துவாரகன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ம. சாருஜா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஆ. அன்பரசி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. சாந்தினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| யோ. நிலாஜினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |

*மேற்பிரிவு:*

| | | |
|---|---|---|
| சி. சிவாஜினி | - | கை.நா.அ.த.க பாடசாலை |
| அ. சர்விகா | - | யா/சுண்டிக்குளி மகளீர் கல்லூரி |
| ச. கஸ்தூரிகா | - | யா/வேம்படி மகளீர் கல்லூரி |
| சி. சுபின்யா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. சங்கீர்த்தனா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| சு. அபிராமி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜெ. ஜெசிந்தினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| சி. தனுசா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| க. சகானா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| செ. கஜீபன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| அ. லோசன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |

*சிரேஷ்டபிரிவு:*

| | | |
|---|---|---|
| செ. விஜிதா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ப. இந்துஜன் | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| சு. சுபாஸ்ரன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| சி. பகீரதன் | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| யோ. சபினா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| அ. கௌசிகன் | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| ந. கஜேந்தினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| க. றம்மியா | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| வி. ரோகிதா | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| ந. கௌசிகா | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |

*மத்தியபிரிவு:*

| | | |
|---|---|---|
| ச. நிஷானி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| கு. மேனகா | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| ச. சங்கீதராஜ் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| கு. கஜானா | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| து. மதுஜா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| தெ. ஆர்த்திகா | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| ம. மதுசா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ர. கஜானா | - | யா/ மற. சகலகலாவல்லி வித்தியாலயம் |
| செ. தர்சிகா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| அ. வனஷா | - | யா/ மற. சகலகலாவல்லி வித்தியாலயம் |

*கனிஷ்டபிரிவு:*

| | | |
|---|---|---|
| அ. லோஜிகா | - | யா/சுண்டிக்குளி மகளீர் கல்லூரி |
| த. நிலானி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| நா. சங்கீதா | - | யா/சுண்டிக்குளி மகளீர் கல்லூரி |
| ஜெ. கிஷாளினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜெ. தக்ஷியா | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| ஜ. அபிநயா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| நா. கிஷாந்தி | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| ச. சோபினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. சௌமியா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |

*கீழ்ப்பிரிவு:*

| | | |
|---|---|---|
| ப. ஹரிசன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜீ. நிரூஷா | - | யா/ சென்.ஜோன்ஸ் பொஸ்கோ |
| க. அபிநயா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வி. விதுசா | - | யா/ கை.நா.அ.த.க பாடசாலை |
| தி. அபிநயன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ம. அருண்ராஜ் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| செ. ரிசானன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ச. திலக்சன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |

## சான்றிதழ் பெறுபவர்கள்

*அதிமேற்பிரிவு:*

| | | |
|---|---|---|
| சி. சஞ்சீவன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| தி. புஸ்பரூபன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ச. சாரங்கன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| அ. ஜீவராஜ் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. வனோஜா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| வி. சோபிகா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| வி. சங்கீதா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ப. லக்சன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| த. மதுரிகா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| கா. தனுஷா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |

*மேற்பிரிவு:*

| | | |
|---|---|---|
| வி. லவலக்ஷனா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜீ. சுஜீபா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ப. நித்தியா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. சுபாசினி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. யனுஷா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| சி. கஜானி | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| இ. கபில்ராஜ் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ம. சயந்தி | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| ம. மகரதனன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ப. சாருஜா | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிரேஷ்டபிரிவு:*

| | | |
|---|---|---|
| கி. சா்மியா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இ. சயந்தன் | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| அ. பகீா்த்தனா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஞா. டௌசிகா | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| ஜெ. டிலக்சனா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| பி. விஜிதரன் | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| செ. டினிஷா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| பா. பிரியங்கா | - | யா/கை.நா.அ.த.க பாடசாலை |
| ச. பிரியா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| லி. ஜனாா்த்தனன் | - | யா/ மற. சகலகலாவல்லி வித்தியாலயம் |

*மத்தியபிரிவு:*

| | | |
|---|---|---|
| சு. சங்கீா்த்தனன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| நா. அபிநயன் | - | (கை.நா.அ.த.க பாடசாலை) |
| ம. திருமாறன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| வ. கோபிநாத் | - | கை.நா.அ.த.க பாடசாலை |
| த. மதுரா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| கோ. பானுஜன் | - | (கை.நா.அ.த.க பாடசாலை) |
| கி. பிரியங்கா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| பு. யதுசனா | - | (கை.நா.அ.த.க பாடசாலை) |
| க. கிருசாந்தி | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |

*கனிஷ்டபிரிவு:*

| | | |
|---|---|---|
| தெ. கிருஷிகன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜீ. பரீசன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| தி. லதுா்சன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| வி. நிருத்திகா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜ. ஜானக்குமரன் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| த. தக்சிகன் | - | யா/ கை.நா.தெற்கு அ.த.க.பா |
| ச. சங்கீதா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஆ. அபிகிருஷ்ணா | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ந. சஞ்சய் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| ஜெ. ஜேசுதாஸ் | - | யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்தரப் பரீட்சை 2013 இல் தேர்ச்சி பெற்று ஊக்குவிப்பும் கௌரவமும் பெறும் இப்பிரதேசத்து மாணவர் விபரம்.

யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

1. செல்வி சரணியா கருணாகரன்
2. செல்வி நிறோஜினி கனகதேவர்
3. செல்வி சோபனா ஜெயச்சந்திரன்
4. செல்வன் ஐயாத்துரை பகீரதன்
5. செல்வன் வேலானந்தன் வித்தியரூபன்
6. செல்வன் இரட்ணகுமார் சுவின்சன்
7. செல்வன் பாலசுந்தரம் கஜீபன்
8. செல்வி சர்மிலா தேவராசா
9. செல்வி லைவண்யா சற்குணநாதன்
10. செல்வி நிதூசனா குகதேவன்
11. செல்வி சிவானுஜா சுரேஸ்கரன்
12. செல்வி சிந்துஜா சந்திரன்

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

13. செல்வி லோஜனா ஜெயகாந்தன்

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

14. செல்வன் துரைநாதன் வின்சன்
15. செல்வன் கிருஷ்ணமூர்த்தி குவிந்தன்
16. செல்வி தர்மிலா ரமேஸ்
17. செல்வி வண்ணமதி கணேசலிங்கம்
18. செல்வன் தங்கராசா அனோஜன்

**2013** க.பொ.த சாதாரண தேர்வில் சித்தி பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற, கௌரவமும் ஊக்குவிப்பும் பெறும் மாணவர்கள் விபரம்.

யா/ கை. நா. அ. த. க. பாடசாலை

1. செல்வன். குணரத்தினம் றஜீவன்
2. செல்வி. இலட்சனா - இலட்சுவணன்
3. செல்வி. சிபாஜினி - சிவகுமார்

யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்

4. செல்வி. நிவேஜா குலேந்திரன்
5. செல்வி. சுவிஸ்னா சுந்தரராஜ்
6. செல்வி. தாரங்கினி கோணலிங்கம்
7. செல்வி. அபிராமி சுரேஸ்கரன்
8. செல்வன். ஜெனோஜன் ஜெயச்சந்திரன்
9. செல்வி. தனுஷா ஸ்ரீரஞ்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தளிர் செளிப்புற
வளம் சேர்த்த
அன்பு மிகுந்தவர்களுக்கு
எமது
நன்றிகளும், வாழ்த்துக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K.S பொன்னம்பலம்

# கைதடி எரிபொருள் நிலையம்

இளந்தளிர் செழித்து வளர்ந்து பிரதேசம்
அனைத்துக்கும் நிழல் தர வாழ்த்துகின்றோம்.



Regd No. 11919

## லக்ஸி மரக்காலை

## LUXE TEMBER DEPOT

வீட்டு வேலைகளும் தளபாட வகைகளும்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

249 பிறவுண் றோட்
யாழ்ப்பாணம்

249, Brown Road,
Jaffna.

*from - M. Ragunathan*
*T.P 021 222 7516*

## பிரணவன் ஹாட்வெயர்

உங்கள் இரும்பு வேலைத் தேவைகள்
அனைத்தும் செய்து கொடுக்கப்படும்



குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

கு.ரவிச்சந்திரன்
0777161929

SCCஇன் விசேட கணினிப் பயிற்சி நெறிகள்

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE-ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN COMPUTER SCIENCE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN WEB DESINING

New Batches Start On
Every week

Softview Computer College
43, Arasady Rd, Thaddatheru
Junction, Jaffna.

உங்கள் வீட்டு சுபகாரியங்கள்
அனைத்தையும் புதியபாணியில் அமைக்கப்பட்டுள்ள
மெது மண்டபத்தில்
இலகுவான முறையில் செய்து தருகின்றோம்.

ஸ்ரீ விநாயகர்
திருமண மண்டபம்

கண்டி வீதி,
கைதடி

பொ. சுப்பையா
0754169276
021 321 2593



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இளந்தளிர் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

சு.கருணாநிதி

# பிள்ளையார் மினிசிற்றி

உங்களுக்கும், குழந்தைகளுக்கும்
தேவையான பொருட்கள் அனைத்தும்
நியாயமான விலையில் வழங்குகின்றோம்.






கைதடி சந்தி,
கைதடி.

ந.ரமேஷ்
0779546485




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாலையில் நித்திரை விட்டெழுவோம்

அன்னை தந்தையைத் தினமும் தொழுவோம்

காலைக் கடன்களைக் கருத்துடன் முடிப்போம்

நேற்றைய பாடங்கள் நினைவில் கொள்வோம்

விருப்புடன் பாடசாலை தினமும் செல்வோம்

பாடங்கள் அனைத்தும் பாங்காய்க் கற்போம்

பயன்தரு மரங்கள் தேர்ந்து வளர்ப்போம்

ஊருடன் கூடி ஒன்றாய் வாழ்வோம்

அறநெறி நின்று அன்பைப் பேணுவோம்

சுத்தம் பேணிச் சுகமாய் வாழ்வோம்

சத்தியம் பேசித் தர்மம் காப்போம்

எல்லோரும் வாழ இறைவனைப் போற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org